கல்கி

KALKI 6.10.85 ரூ. 1.50.



"சுதந்திரமாம் சுதந்திரம்!
தண்ணீருக்கே தவிக்கிறோம்..."

“சுதந்திரமாம் சுதந்திரம்! தண்ணீருக்கே தவிக்கிறோம்...”

சராசரியாக டெல்லியில் நபர் ஒருவருக்குத் தினத்துக்குக் கிடைக்கிற தண்ணீர் 218 லிட்டர். கல்கத்தாவில் 191 லி. பம்பாயில் 155 லி. பெங்களூரில் 125 லி. அதெல்லாம் சரிதான்! சென்னையில்? ஸாரி..... ரொம்ப அதிகமில்லை, எழுபதே எழுபது லிட்டர். இப்படிச் சொல்கிறது ஒரு புள்ளி விவரம். ஆனால் சென்னையில் சில பகுதிகளில் இந்த எழுபது லிட்டர் கணக்கு தினத்துக்கா, வாரம் முழுமைக்குமா என்று சந்தேகம் வரும்படி இருக்கிறது தண்ணீர் சப்ளை.

எந்தப் பகுதியில் வசிப்பவரானாலும், தண்ணீர் வசதி எப்படி என்று தப்பித் தவறி கேட்டால், 'பச்'சென்ற விரக்திப் பெருமூச்சைத்தான் பதிலாய்ச் சொல்கிறார்கள்.

ஒரு மத்திய தரக் குடும்பத் தலைவர் சொன்னார்: “என் ஒய்ஃப் ஒரு அஞ்சு, பத்து அனாவசியமா செலவு பண்ணினாக்கூட கண்டு கொள்ளாமல் விட்டுடுவேன்; ஆனால் என் நாலரை வயசுப் பையன் ரெண்டு குவளைத் தண்ணீரை வீணாக்கினால் என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. 'ஒண்ணாந்தேதியானா சம்பளம் வருமென்கிறது நிச்சயமான விஷயம்; ஆனால் குழாய்ல எப்போ தண்ணீர் வரும், நிற்குமென்பதெல்லாம் நிச்சயமில்லாத விஷயங்கள்.”


* இரவெல்லாம் காத்திருந்து, காலையிலும் தீராத பிரச்னை



ஃபிளாட்களில் பரிதாப நிலை!

தண்ணீருக்குச் சென்னைவாசிபடும் அவதி எழுதி எழுதி மாளாது. குழாயில் தண்ணீர் எப்போது வருமோ, எத்தனை நேரம் சொட்டுமோ என்று இரவெல்லாம் கண் விழித்துக் காத்திருந்து ஆபீஸில் போய்த் தூங்க வேண்டியதுதான்! பக்கெட் பம்ப் போட்டு அடிக்க பலருக்கு வசதியில்லை; வசதி உள்ளவர்கள் பயில்வான்களும் இல்லை. பல இடங்களில் கிணற்று நீரும் வற்றி அடி ஆழத்துக்குப் போய்விட்டது. தெருக் குழாய்களில் கூட்டத்துக்குக் கேட்கவே வேண்டாம். எல்லாரையும் விடப் பரிதாபத்துக்குரியவர்கள் பல மாடிக் கட்டிடங்களில் ஃபிளாட்டில் வசிப்பவர்கள். தண்ணீர் சப்ளை பற்றிய யோசனையே இன்றி பல மாடிக் கட்டிடங்கள் உருவாகியுள்ளன. மூன்றாவது நான்காவது மாடிகளில் வசிப்பவர்கள் கீழே இறங்கி வந்து பக்கெட்டுகளில் நீர் நிரப்பிக் கொண்டு படி ஏறுகிற சந்தர்ப்பங்கள் பல. அப்போது அவர்கள் அளிக்கும் பரிதாபத் தோற்றம்! இரண்டு நாள் ஒருவர் இப்படி தண்ணீர் தூக்கினால் மூன்று நாள் படுக்கையில் விழ வேண்டியதுதான்!

* காணாமல் போன காவிரித்தாய்: வீராணம் திட்டமே கைவிடப்பட்டபின் எனக்கென்ன வேலை?



பாலாறு நீர்

ஆலந்தூர், பல்லாவரம் பகுதியில் ஒரு ரவுண்டு அடித்தோம். இந்தப் பகுதிகளுக்கு பாலாற்றுத் தண்ணீரைக் கொண்டுவரத் திட்டம் தீட்டிப் பல வருடங்களாகிறது. அதன் இன்றைய நிலை பற்றி விசாரித்தபோது, தெரிந்து கொண்டவை: திட்டத்தில் பாதி நிறைவேறி, இப்போது சுமார் இரண்டரை மில்லியன் காலன் தண்ணீர் வருகிறது. ஆனால் திட்டமிட்டதில் பாதிதான் இப்போது வருவது. இதிலே இருக்கிற பிரச்னை என்ன? இத்திட்டத்தின் முதல் பகுதி மேலே சொன்னது. அடுத்த பகுதி வாலாஜாபாத்திலிருந்து தினம் இரண்டரை மில்லியன் காலன் தண்ணீர் கொண்டு வருவது. இதிலேதான் பிரச்னை. தண்ணீர்க் கால்வாய்க்கான நில ஆர்ஜிதம் செய்வதிலே சில சிக்கல்கள். பாலாற்றுத் தண்ணீர் தாராளமாய்க் கிடைக்கிற நாளை பல்லாவரம்வாசிகள் ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நங்கநல்லூர் வாசிகள் கொடுத்து வைத்தவர்கள். பாலாறுதண்ணீர் குறிப்பிட்ட நேரம் வந்தாலும் வெகு வேகமாக வருகிறது. குழாயடியில் எவ்வளவு கும்பல் இருந்தாலும் சில நிமிடங்களில் வெறிச்!

54 மில்லியன் காலன் தண்ணீரை 40 லட்சம் மக்களுக்கு விநியோகம் செய்வதாகப் பெருமையடித்துக் கொள்கிறது மெட்ரோ வாட்டர் போர்டு. ஆனால் விநியோக முறையில் உள்ள கோளாறினால் கடைசி பாயிண்டுகளில் சரியாகவே தண்ணீர் வருவதில்லை. சைதாப்பேட்டை, கே.கே. நகர், வடபழனி, அரும்பாக்கம், மைலாப்பூரின் சில பகுதிகள் முதலியன விநியோக முறையில் உள்ள கோளாறினால், தண்ணீர்ப் பஞ்சத்தால் வாடும் இடங்கள். கீழ்பாக்கத்திலிருந்து தண்ணீர், வடக்கு தெற்காக, ராபின்சன் பார்க்கிலிருக்கும் பம்பிங் ஸ்டேஷனுக்கும், தி.நகர் பிரகாசம்சாலையிலுள்ள பம்பிங்ஸ்டேஷனுக்கும் செல்லுகின்றது. மெட்ரோ வாட்டர் இருக்கிற தண்ணீரை ஒழுங்காகப் பகிர்ந்தளிக்கும் வேலையைச் செய்தாலே 75 சதவீத பற்றாக்குறை ஒழிந்துவிடும்!

* தெலுங்கு கங்கை தொடக்க விழா — நிறைவு விழா நடக்குமா?



ஹோட்டல், ஆஸ்பத்திரிகளில்.....

குடியிருக்கும் வீடுகளின் நிலைதான் இப்படி என்றால், ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகளின் நிலை என்ன?

தென்னிந்தியாவிலேயே பெரிய ஹோட்டல்தாஜ்கோரமண்டல்.225 அறைகளுடைய இந்த ஹோட்டலில் தங்குபவர்கள், வேலை செய்கிறவர்கள் என்று சுமார் 1000 பேர்கள் இருக்கிறார்கள். நிர்வாகத்தைக் கவனிக்கும் திரு தேவி சொல்கிறார்:

''எங்களுக்குத் தினசரித் தேவை 45000 காலன். அதில் 10,000 காலன்தான் மெட்ரோ நீர். மற்றபடி எங்கள் ஹோட்டலில், இரண்டு திறந்த கிணறுகள், மூன்று குழாய்க் கிணறுகள் உள்ளன. அவற்றை வைத்து மேனேஜ் பண்ணிக் கொள்கிறோம். எங்கள் ஹோட்டலில் இருக்கும் தண்ணீர் டாங்க் 65000 காலன். ஆனால் அந்த டாங்க் எப்போதாவது நிரம்பி வழிந்துள்ளதா என்பது சந்தேகமே. நீச்சல் குளத்தில் 48000 காலன் தண்ணீர் இருக்கிறது. வாரத்திற்கு இரண்டு முறை அந்தத் தண்ணீரை ரசாயன முறையில் சுத்தப்படுத்தி (re-cycle) நீச்சல்குளத்துக்கே அனுப்பி விடுகிறோம். எங்கள் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் இருப்பதால் சமாளித்துக் கொண்டு போகிறோம். இதுவரை எங்கள் ஹோட்டலில் வந்து தங்கிய எவரும் குழாயில் தண்ணீர் வரவில்லை என்று புகார் கொடுத்தது கிடையாது.''

ஒரு பெரிய ஆஸ்பத்திரியின் நிலையைப் பார்க்கலாம் என்று அப்போலோ ஆஸ்பத்திரிக்குச் (ஜி. ஹெச்சின் அவல நிலையைத்தான் ஏற்கனவே எழுதிவிட்டோமே) சென்றோம். நிர்வாக இயக்குனர் சாக்கோவிடம் உரையாடியபோது, ரொம்ப சுருக்கமாக, "I don't want to rub the Govt" என்று சொல்லி விட்டார். ஆனால் ஆஸ்பத்திரி வட்டாரங்களில் விசாரித்தபோது தெரிய வந்தவை:

அப்போலோ கட்டும்போது அதற்குக் கட்டட வேலைக்குத்தேவையான தண்ணீரைக் காம்பவுண்டிலிருந்த கிணற்றிலிருந்தே சமாளித்துக்கொண்டார்கள். ஆஸ்பத்திரி ஆரம்பமான சில மாதங்களில் 3000 காலன் கொள்ளளவு கொண்ட டாங்க் இணைக்கப்பட்ட லாரிகள், இரண்டு வாங்கப்பட்டன. தினசரி இந்த லாரிகள் மூன்று முறை பாலவாக்கத்துக்கும், கீழ்பாக்கம் தண்ணீர் டாங்கிற்கும் செல்கின்றன, தண்ணீர் நிரப்பிக் கொண்டு வர. (காசு கொடுத்துத்தான்!) ஒரு நாளைக்குச் சுமார் 20000 காலன் தண்ணீர் தேவைப்படுகிறதாம். மெட்ரோ தண்ணீர் எவ்வளவு வருகிறது என்ற கணக்குத் தெரியவில்லை. எப்படியோ, தண்ணீர்ப் பிரச்னையைச் சமாளித்து வருகிறார்கள்.

''தண்ணீர் பஞ்சமா? அப்படியென்றால் என்ன?'' என்று கேட்பார்கள் அடையாறு

* மேற்கு ஜெர்மானிய நிறுவனம் க்ரப் வெளியிட்டுள்ள விளம்பரத்தில் குடிநீராக மாறிய கடல்நீரைத் தாகம் தீர அருந்தும் சிறுவன்.



* கிருஷ்ணா நதிநீர்: அன்று தண்டவாளத்தில் வந்தது. இன்று கால்வாயில் வருமா?



கிரீன்வேஸ் சாலையில் வசிப்பவர்கள். இந்தச் சாலையில் புதிது, புதிதாக அபார்ட்மெண்ட்டுகள் எழும்பியபோது, இவற்றை வாங்க யோசித்தார்கள். இப்போது சந்தோஷமாக அனுபவிக்கிறார்கள். தண்ணீர், குழாயில் கொட்டோ கொட்டென்று கொட்டுகிறது! மின்சாரம் தடங்கலின்றிப் பாய்கிறது! எப்படி? நம் மந்திரிகளைத் தண்ணீருக்குத் தவிக்க விடலாமா? அதனால்தான்!

வீராணம் திட்டம் வீணானதேன்?

மேட்டூரிலிருந்து வீராணம் ஏரிக்குத் தண்ணீர் கொண்டு வந்து, பிறகு வீராணம் ஏரியிலிருந்து தினத்துக்கு இரண்டரை மில்லியன் காலன் தண்ணீரை சென்னை நகருக்குக் கொண்டு வர 30.10.67 அன்று அறிஞர் அண்ணாவால் துவக்கி வைக்கப்பட்ட திட்டம் தான் வீராணம் திட்டம். ஆனால் இந்தத் திட்டத்துக்கு 75—ல் சமாதி கட்டப்பட்டுவிட்டது. திட்டத்துக்கென தயாரிக்கப்பட்ட சுமார் 10,500 குழாய்களில், சுமார் 6,000 மட்டுமே பயன்படுத்தத் தகுதியானது என்று தெரிய வந்தது. காண்டிராக்ட்டில் முறைகேடுகள் நிகழ்ந்ததும் வெளியானது. உலக வங்கியில் கடன் வாங்கி, திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியும் பலிக்கவில்லை. காரணம், கான்கிரீட் குழாய்களுக்குப் பதில், இரும்புக் குழாய்கள் பயன்படுத்த வேண்டுமென உலக பாங்க் கண்டிஷன் போட்டது. இதற்கு மொத்தமாய் 200 கோடி செலவாகும். எனவே வீராணம் திட்டம் கைவிடப்பட்டது. கடைசியில் ஏராளமான மக்கள் வரிப் பணம் வீணானதுதான் மிச்சம்.

கட்டளைக் கால்வாய் கைவிடப்பட்டது ஏன்?


சென்னை மாநகருக்குக் குடி தண்ணீர் கொண்டுவர எம். ஜி. ஆரால் பரிசிலனை செய்யப்பட்ட இன்னொரு திட்டம் கட்டளைக் கால்வாய்த் திட்டம். திருச்சிக்கு அருகில் உள்ள கட்டளையில் காவிரியில் கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து ஆண்டுக்கு 13 டி. எம். ஸி. தண்ணீரைக் கால்வாய் மூலம் கொண்டு வருவதே இந்தத் திட்டம். சுமார் 450 கி. மீ. தூரத்துக்குக் கால்வாய் வெட்டி, தண்ணீர் கொண்டு வருவதற்குண்டான செலவு 200 கோடி என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் கர்நாடகா, காவிரியில் நிறையத் தண்ணீர் விட்டால் மட்டுமே இத்திட்டம் சாத்தியமாகும் என்பதோடு ஆளும் கட்சி உள்பட எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பெரும் பெரும் விவசாயிகள் இதற்கு பலத்த எதிர்ப்பு தெரிவித்தார்கள். எனவே, இத்திட்டமும் கைவிடப்பட்டது.

தெலுங்கு கங்கை வருமா?

தண்ணீருக்குத் தவிப்பதுதான் சென்னை வாசிகளின் தலைவிதி என்று நொந்து போயிருந்த வேளையில் 1976—ல் இந்திரா காந்தியால் அறிவிக்கப்பட்டதுதான் தெலுங்கு கங்கைத் திட்டம். ஏழாண்டுகள் கழித்து, 'என்னை ஆளாக்கின சென்னை மக்களுக்கு என் நன்றிக் கடன்' என்கிற என். டி. ஆரின் (ஸ்டண்ட்) அறிவிப்புடன் பெரிசாய் விழா எடுத்தாகிவிட்டது. கோடி கோடியாய் 40 கோடி கொட்டிக் கொடுத்தாகிவிட்டது. இடையிலே சிக்கல். கிருஷ்ணாவின் உபரி நீர் ஆந்திராவுக்குப் பயன்படும்படி திட்டத்தை ராமாராவ் அமைத்ததன் விளைவான சிக்கல். கர்நாடகாவும், மகாராஷ்டிராவும் இதை எதிர்க்கின்றன. மேலும், தமிழ்நாடு கொடுத்த 40 கோடி ரூபாய்க்குக் கணக்குக் கேட்டால் பதில் வரமாட்டேன் என்கிறது. (கவனிக்க: எம். ஜி. ஆர். மீண்டும் கணக்குக் கேட்கிறார்!)

மூன்று அல்லது ஐந்து வருடங்களுக்குள் திட்டம் முடிந்துவிடும் என்று இருவருடங்களுக்குமுன் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட புதிதில் கூறப்பட்டது. ஆனால் இன்றைய நிலவரப்படி குறிப்பிடத்தக்க அளவு பணிகள் முடியவில்லை. காலதாமதத்தின் விளைவாக நிர்ணயித்த தொகைக்கு மேல் செலவுகள் அதிகரிக்கும். இதற்குத் திட்டக் கமிஷன் சம்மதத்

* புழலேரியின் இத்தகைய தோற்றம் சென்னைவாசிக்குப் பழகிய ஒன்று.



தேவேந்திரா சாரீஸ்

H.O. 27, ஏலா கந்தப்பன் தெரு, சென்னை-600 003.
போன்: 33113

கிளை ஷோ-ரூம்:

கடை எண் 7, ராம்ஸ் பஜார்
(பனகல் பார்க் எதிரில்) அருகில்)
தியாகராய நகர், சென்னை - 600 017

தேவேந்திரா புடவைகள் கிடைக்கும் இடங்கள்:

* காமாட்சி சில்க் ஹவுஸ், 5/38, W. E. A. அஜ்மல்கான் ரோடு, கரோல்பாக், புதுடில்லி—5, போன்: 581050, 561786. * "கிருஹ லக்ஷ்மி" மாதர்கள் கூட்டுறவு அமைப்பு, C-79, விகாஸ்புரி (போடெல்லா), புது டெல்லி—110018. * திருமதி உமாசுப்ரமணியம், II-A-97-B, லஜ்பத் நகர் II, புது டெல்லி—110024. போன்: 616552.* திருமதிவிமலா ராகவன், 6/66, W.E.A. கரோல்பாக், புதுடெல்லி—110005. * பங்கஜம்சுந்தரராஜன், C6/A.D.D.A.Flats, முனிர்கா, புதுடெல்லி—67.* Mrs. சாரதா, 16/449, வீரம் பில்டிங், மாதுங்கா, பம்பாய்—19. * சுசீலாமணி, 22, காந்தி மஹால், தேஜோ கோயா பார்க், வின்செண்ட் ரோடு, மாதுங்கா, பம்பாய்—19. * லக்ஷ்மி நாராயணன், 5, வாணி கோ — ஆபரேடிவ் ஹவுசிங் சொஸைட்டி, வல்ல பாக் ரோடு, காட்கோபர், (கிழக்கு) பம்பாய்—77. * நல்லீஸ் சில்க் சாரீஸ், சென்டர், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்—19. * சௌத் இந்தியன் கன்ஸர்ன், 401, டெலாங் ரோடு, மாதுங்கா, பம்பாய்—19. * லதாகிருஷ்ணன், பிளாட் நெ. 20, காமதேனு கோ ஆப். பெஸ்டம் சாகர், செம்பூர், பம்பாய்—89. (கிளாஸ் பாக்டரி அருகில்). * ஜெயஸ்ரீ, 2—A, தேசப் பிரியா பார்க் ரோடு, கல் கத்தா—26. * S. பொன்னப்பன், 8—3—282, 2வது பஜார், செகந்திராபாத், போன். 559562.* திருமதி T. S. சகுந்தலா சீனிவாசன், 18/1—A, லால்பாக் போர்ட் ரோடு, (மினர்வா & பஸப்பா சர்க்கிள் மத்தியில்) பெங்களூர் -4 போன்: 224357. திருமதி துர்காம்பாள், 5-A, ராமசந்திரபுரம், தென்னூர் திருச்சி* திரு. S. சேதுராமன் 9. பாணு துரை சன்னதி தெரு, கும்பகோணம்—612001, போன்: 972. * ராணி சில்க், 13, மஹால் 4 வது தெரு, மதுரை—1. போன்: 26295.* திருமதி S. லெட்சுமி, 24, சீனிவாசா தெரு, சேலம்—1. (ரயில்வே ஸ்டேஷன் அருகில்).* ஸ்ரீ காமேஸ்வரி ஏஜென்சிஸ், 6/175, திருச்சி ரோடு, (ஆல் இந்தியா ரேடியோ அருகில்), ராமநாத புரம், கோயம்புத்தூர்—641018. ஸ்ரீ முருகன் கிளாத் ஸ்டோர், 3, ஆரோக்கியசாமி ரோடு கிழக்கு R. S. புரம், கோவை—2. * மகாலட்சுமி சில்க் சென்டர், இன் பில்டிங், (உள்புறம்) 175/11, மேல வீதி, சிதம்பரம். * ஹேமாவதி ஏஜென்சிஸ், 2711, நாணயக்கார செட்டி தெரு, தஞ்சாவூர். * பாகீரதிமூர்த்தி, 100, ஸ்ரீ வராஹபுரம் தெரு, கல்லிடைக்குறிச்சி, திருநெல்வேலி. * S. சுந்தரம், 9, சாத்தான் கோவில் தெரு, வடிவீச்வரம், நாகர்கோவில்—2. * திருமதி K. சீதாலட்சுமி, 41, 4 வது டிரஸ்ட் கிராஸ் தெரு, மந்தவெளிப்பாக்கம், சென்னை—28. போன்: 73244. * திருமதி சாவித்திரி பாலசுப்ரமணியம், 2, 7 வது தெரு, நங்கநல்லூர், சென்னை—61, (பிள்ளையார் கோவில் அருகில்) போன்: 433737.* திருமதி சரோஜா கிருஷ்ணமூர்த்தி, A 9/386, புதிய குடியிருப்பு (முதல் மாடி) குடிசை மாற்று வாரியம், திருமங்கலம், அண்ணா நகர் மேற்கு, சென்னை—600 107, (ஸ்ரீ சத்திய சாயிபாபா கோவில் அருகில்). * M/s. பாலாஜி கிளாத் சென்டர் 29, வெங்கடேச சௌத்ரி தெரு, மேற்கு தாம்பரம், சென்னை—45. * திருமதி சுலோசனா கோவிந்த், 2, M. I. T. லெவல் கிராஸிங், குரோம்பேட்டை, சென்னை—44.

குறிப்பு: மற்ற இடங்களில் வாங்குவது எங்களுடைய தயாரிப்பு அல்ல.

தைப் பெற வேண்டும். பிளான்படி கால்வாயை முடிக்க வேண்டும். இது எல்லாம் முடிய எப்படியும் குறைந்தது இன்னும் ஆறு வருடங்களாவது ஆகும் என்று சொல்லப்படுகிறது. இதில் ஏதாவது கோளாறு எனில், இதுவரை செலவிடப்பட்ட கோடிக் கணக்கான தொகையும் வீணாகிவிடும். தெலுங்கு கங்கைத் திட்டம் வெற்றிகரமாய் நிறைவேற ராஜீவ் எந்த அளவுக்கு ஒத்துழைப்பார் என்று நிச்சயமாகத் தெரியவில்லை.

கடல்நீரை குடிநீராக்கும் சாத்தியம்?

அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளில் கடல் நீரைக் குடிநீராக்கும் முயற்சி வெற்றி பெற்று அதன் பலனை மக்கள் அனுபவிக்கிறார்கள். கிரப் என்றமே. ஜெர்மானிய நிறுவனம் இதில் பெருஞ் சாதனைகள் செய்துள்ளது. அது வெளியிட்டுள்ள ஒரு விளம்பரம் 'உலகப் பரப்பின் 70 சதவீதத்தை ஆக்கிரமித்துள்ள கடல்கள் எல்லாம் குடிநீர் வழங்கக் கூடிய வற்றாத காமதேனுக்கள்' என்று கூறுகிறது. கடல் நீரை ஆவியாக்கி ஆவியைக் குளிர்விக்க, ஸ்படிக நீர் கிடைக்கிறது. இதில் உடலுக்குத் தேவையான தாது உப்புக்களைச் சேர்க்கிறார்கள் — உலக சுகாதார நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட தரத்துக்கு. இவ்வாறு 10 லிட்டர் கடல் நீரிலிருந்து ஒரு லிட்டர் குடிநீர் தயாராகிறது. எஞ்சும் ஒன்பது லிட்டர் தண்ணீரும் சற்றுக் கூடுதல் உவர்ப்புத்தன்மையுடன் கடலுக்கே திருப்பி அனுப்பப்படுகிறது! இதுதான் தத்துவம். வருடா வருடம் தண்ணீர்ப் பஞ்சத்தால் தவித்துக் கொண்டிருக்கும் சென்னை மாநகருக்குக் கடல்நீரைக் குடிநீராக மாற்றி சப்ளை செய்தால் என்ன? இது சாத்தியமா?

சமீபத்தில் சென்னை அம்பத்தூர் அருகே புத்தகரம் என்னும் கிராமத்தில் உவர் தண்ணீரைக் குடிநீராக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவியிருக்கிறார்கள். இந்தத் தொழிற்சாலை முழு நாளும் ஓய்வின்றி வேலை செய்தால் 50,000 லிட்டர் நல்ல தண்ணீர் பெற முடியும். இந்தத் தொழிற்சாலை நிறுவப் பத்து லட்ச ரூபாய் செலவாயிற்றும். தற்போது 10,000 லிட்டர் குடிநீர் இங்கிருந்து அந்த கிராமத்துக்கு விநியோகிக்கப்படுகிறது. இதற்கே பத்து லட்ச ரூபாய் முதலீடு என்றால்..... பார்த்துக் கொள்ளுங்கள்! தவிர இந்தத் தொழிற்சாலைக்குத் தடங்கலின்றி மின் வசதி வேண்டும்! இது நடக்கிற காரியமா இங்கு?

சென்னைக்கு வெளியே

சென்னைக்கு வெளியே சென்று மதுரையின் நிலையைக் கவனிப்போமா? சமீபத்தில் பந்தயச் சாலை குடியிருப்பிலிருந்து இராமகோபாலன் என்பவர் நமக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்துடன், 'மதுரை மாநகரில் ஒரு திண்டுக்கல் பிரச்னை' என்ற நோட்டீஸும் வந்தது. விஷயம் என்னவென்றால் பந்தயச் சாலையிலுள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புக்களில் கடந்த ஏழு மாதங்களாகவே தண்ணீர் வரவில்லையாம்! ஏழு குழாய்க்கிணறுகள் போடுவதாக டிசைன் செய்து, ஆறுக்கு வடிவெடுத்து, கடைசியாக மூன்றிற்கு முடிவெடுத்து, குழாய்க் கிணறு இறக்கியதில், தற்போது ஒரு குழாய்க் கிணற்றிலிருந்துமட்டும்தான் தண்ணீர் வருகிறதாம். அதுவும் பல சமயங்களில் மோட்டார் ரிப்பேர், பம்பு ரிப்பேர், வால்வு கோளாறு என்று நின்று விடுகிறதாம்! ஆக, அந்தக் குடியிருப்புக்களில் இருப்பவர்கள், ஒரு முடிவெடுத்தார்கள். வீட்டிற்கு ஒரு காலிப் பானையுடன் சென்று, வீட்டு வசதி வாரிய அதிகாரிகளின் வீட்டுக்குழாய்களைத் துண்டிக்க வேண்டும்! அவர்கள் தண்ணீரில்லாத வேதனைகளை அனுபவித்தால்தானே நம் கஷ்டம் அவர்களுக்குப் புரியும்! 17.9.85ல் நடப்பதாக இருந்த அப் போராட்டம் நடந்ததா, இல்



லையா என்ற தகவல் இல்லை.

திண்டுக்கல் தண்ணீர் பிரச்னை உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது! ஏனெனில் அமெரிக்காவிலிருந்து முதல்வர் உத்தரவு போடக் காத்திருந்த பிரச்னை அல்லவா? தண்ணீர்ப் பஞ்சம் திண்டுகல்லுக்குப் புதிதல்ல. சில வருடங்களுக்கு முன் கடும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டபோது, இயற்கையின் அழைப்பை ஏற்க வேண்டுமானால், டாய்லெட்டிற்குள் நுழையும்போது கையில் சோடா பாட்டிலுடன்தான் நுழைவார்களாம்! திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்டு அண்ணா மாவட்டம் தற்போது அமைந்திருக்கிறது. "அண்ணாவில் தண்ணீர்ப் பஞ்சம்" என்று பத்திரிகைகளில் தலைப்பு வராதபடி ஆட்சியாளர் கவனித்துக் கொண்டால் சரி!

விஞ்ஞானம் உதவுமா?

பருவ மழை பொய்க்காமல் பெய்தாலும் கூட நம் நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுகிறது என்றால் காரணம் விஞ்ஞான ரீதியான அணுகுமுறை இல்லாததுதான் என்கிறார்கள். உலகிலேயே மிக அதிகமான மழை பெய்வது அஸ்ஸாமில் சிரபுஞ்சியில். அங்கேயே தண்ணீர் பற்றாக்குறையாம்!

கல்கத்தா கங்கைக் கரையில் அமைந்துள்ளது. ஆயினும் பூமிக்கடியில் உள்ள நீரை பம்ப் செய்துதான் பல இடங்களுக்குத் தண்ணீர் சப்ளை. இப்படி ஏராள நீர் எடுக்கப் பட்டு விடுவதால் கல்கத்தா நகரமே சில அங்குலம் இறங்கித் தாழ்ந்துவிட்டதாம்!

ஆனால் லண்டனில் என்ன செய்கிறார்கள் தெரியுமா? பூமிக்கடியிலிருந்து ஆழ் குழாய்க் கிணறு போட்டு எடுக்கப்படும் நீரை மீண்டும் தேம்ஸ் நதி நீரை விசையுடன் உட்செலுத்துவதன் மூலம் ஈடு செய்கிறார்கள்! அதுவே மறுபடி வறட்சிக் காலத்தில் கை கொடுக்கிறது!

நமது திருவான்மியூரிலோ ஏராள நீரை பூமிக்கடியிலிருந்து வறட்சிக் காலத்தில் வெளியே எடுத்து விநியோகித்துவிட்டதால், இப்போது பல இடங்களில் கடல் நீர் ஊடுருவி உப்பு நீர் நிரம்பிவிட்டது!

விமானத்தில் ஏறிச் சென்று மேகங்கள் மீது "விதை" தூவி செயற்கை மழை பொழிவிப்பது என்பது ஒரு மோசடி. அது பலனை தராது என்று உலக நாடுகள் பலவும் பரீட்சித்துப் பார்த்துக் கைவிட்டுவிட்டன.

பூமி மட்டத்துக்கு எண்ணூறு மீட்டர் கீழே ஏராளமான நீர் இருக்கிறதாம். ஆனால் அதை வெளிக் கொணரப் போதுமான தொழில் நுட்பம் இன்னும் உருவாகவில்லை.

கடல் படுகைக்குக் கீழே குழாய் இறக்கி பெட்ரோலியம் எண்ணெய் எடுக்கிற மாதிரி குடி நீரையும் எடுக்கலாம் என்று சோவியத் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ருஷ்யாவில் கருங்கடலுக்கடியிலிருந்து கிளம்பும் ஓர் ஊற்று விநாடிக்கு முந்நூறு கன அடி நல்ல நீரைப் பீறிடுகிறது!

ஆனால் நம்முடைய நாட்டில்? சுதந்திரம் பெற்று முப்பத்தெட்டு ஆண்டுகள் முடிந்து விட்ட நிலையிலும், மிக மிக அடிப்படைத் தேவையான — அத்யாவசியத் தேவையான கேவலம் குடிநீர்ப் பற்றாக்குறையைக் கூட நமது அரசு தீர்த்து வைக்க முயலவில்லை. இன்னும் தண்ணீருக்கே தவித்துக் கொண்டிருக்கிறோம். இந்த லட்சணத்தில் நமது அரசியல்வாதிகள் நமக்கு இருபத்தோராம் நூற்றாண்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது கடைந்தெடுத்த மோசடி என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

— நமது நிருபர்கள்

படங்கள்: **சுபா.**

மேலட்டை
வண்ணப்படம்: **ஏ.வி. பாஸ்கர்.**

'சோ' என்று மழை கொட்ட எம். ஜி. ஆர். உண்ணாவிரதம் ஆரம்பமானது. மேடைக்கு இருபது அடி தூரத்தில் உட்கார்ந்திருந்த வளர்மதி, எம். எல். ஏ. கையில் புத்தகம் ஒன்றைக் கொண்டு வந்திருந்தார். எம். ஜி. ஆர். அவரைப் பார்த்து, சைகையினால் பல கேள்விகள் கேட்டார். அவர் சைகைகளைப் பார்த்தபோது, "அது என்ன புத்தகம்?" அல்லது "ஏன் புத்தகம் கொண்டு வந்தாய்?" என்று கேட்டதுபோல் இருந்தது வளர்மதியும் உடனே மேடைக்குச் சென்றார் இரண்டு நிமிடம் மேடையிலேயே நின்றார் ஆனால் எம். ஜி. ஆர். வளர்மதியைக் கண்டு கொள்ளவே இல்லை!



* சீருடையில் இன்ஸ்பெக்டர் உண்ணாவிரதம்

* * * * *

சிவாஜி படு ஸீரியஸாக முகத்தை வைத்துக்கொண்டிருந்தார். திடீரென்று ஒரு தாயார் கையில் குழந்தையுடன் சிவாஜி முன் வந்தார். "கொஞ்சம் பொறும்மா" என்று அவரிடம் சொன்னார் சிவாஜி. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார் அந்தத் தாய். கடைசியில் குழந்தையை சிவாஜி காலடியில் போட்டு விட்டார்! அது பெண் குழந்தை. என்ன பெயர் வைத்திருப்பார் என்று சொல்ல வேண்டுமா? 'அம்மா' பெயர்தான்!

* * * * *

ஜனதா தலைவர் செழியன் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் கூச்சல் ஒன்றும் கிடையாது. அமைதியாக இருந்தது. ஜனதா தொண்டர்கள் இருவர் செழியனின் பின்னால் பேசிக் கொண்டிருந்தனர். கிட்டே சென்றபோது—

"இலங்கை பற்றிய எல்லா விஷயங்களும், ஜி. பார்த்தசாரதிக்குத் தெரியும். ஆனால் அவர் ஆலோசனைகளை ராஜீவ் இப்போது கேட்டுக் கொள்வதில்லையாமே?"

"ஆமாம், அவர் தமிழரல்லவா! அவர் ஒரு தலைப்பட்சமாகச் செயல்படுவார் என்று இலங்கை அரசு கூறியதால்தான் பார்த்தசாரதியைப் பிரதமர் ஒதுக்கி வைத்திருக்கிறாராம்!"

* * * * *



* படு ஸீரியஸ்

* திண்டிவனம் ராமமூர்த்தி



வள்ளுவர் கோட்டம் முன் உண்ணாவிரதம் இருப்பது என்ற முடிவை முதல் நாள் மாலைதான் பாக்யராஜ் எடுத்தார். "உண்ணாவிரத அனுபவம் புதுசுதான்" என்றார் பாக்கிய





* வளர்மதிக்குச் சைகை

* பயனுள்ள பொழுது

ராஜ். சாரி, சாரியாக மக்கள் பாக்யராஜைப் பார்த்த வண்ணம் இருக்க, மிக அருகிலேயே உண்ணாவிரதம் இருந்த சர்வகட்சிக் குழு ஒன்றை யாரும் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை!

* * * * *

நடிகர் சங்கத்தில் உண்ணாவிரதமிருந்த நாகேஷ் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மீண்டு வந்திருப்பவர். நாகேஷ், தாம் சாப்பிட வேண்டிய மாத்திரைகளைக்கூட மாலை ஆறு மணிக்கு மேல் தான் சாப்பிட்டார்.

* * * * *

குமரி அனந்தன் கட்சியினர் உண்ணாவிரதம்இருந்தபோதுஒருதொண்டர்காந்திஜியின் ''சத்திய சோதனை'' புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார். புரியாத இடங்களில் தலைவர் அனந்தனே விளக்கங்களைக் கூறினார். சில பகுதிகள் படித்து முடித்த பிறகு, அதிலிருந்து சில கேள்விகள் கேட்கப்பட்டு ஒரு போட்டி தொண்டர்களுக்காக வைக்கப்பட்டது. நேரத்தைபயனுள்ளதாக ஆக்கிய அனந்தன் பாராட்டுக்குரியவர்.

சில புரியாத விஷயங்கள்

* தலைவர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கும்போது அருகிலேயே பேல் பூரி, வேர்க்கடலை, முறுக்கு, சுண்டல் ஆகியவைகளை விற்க போலீஸார் எப்படி அனுமதித்தார்கள்?

* எல்லோரும் குத்திக் கொண்டிருந்த பேட்ஜில் ''இலங்கைத் தமிழர் நல்வாழ்வு நாள்'' என்று போட்டிருந்தது. இது எந்த விதத்தில் பொறுத்தம்? இதைவிட ''இலங்கைத் தமிழருக்கு அனுதாப தினம்'' என்று போட்டிருக்கலாமே?

* தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும் 'பந்த்' பற்றின செய்திகளைப் படமெடுக்க



* அனுபவம் புதுசு


உண்ணாவிரதம்




டி. வி. நிலையத்தினர், தமிழக அரசை ஹெலிகாப்டர் கேட்டனர். ஆனால் ஏனோ தெரியவில்லை. ஹெலிகாப்டர் தரப்படவில்லை. கடைசியில் சென்னை நிகழ்ச்சிகள் மட்டுமே அன்று இரவு டி. வி. யில் காட்டப்பட்டன.

— நமது நிருபர்

புகைப்படம்: எட்வாட் (சுபா)


மக்கள்
காரைப் புதுப்பிச்சு எப்படி 'பள பள'ன்னு கொண்டு வந்திருக்கேன் பாருங்க!..
புதிய மந்திரி சபை
தொழில், பொருளாதார, பயங்கரவாதப் பிரச்னைகள்
தேர்தலில் அகாலி தளம் அமோக வெற்றி
அமைதி ஜனநாயகம்
சீக்கிய சமுதாயம்
அகாலி
பயங்கர வாதம்
டிரான்ஸிஸ்டர் பாம்
சிங்கள வெறியர்
இலங்கை அரசைக் கண்டித்துத் தமிழகமெங்கும் உண்ணாவிரதம்!



கல்கி

1985 அக்டோபர் 6
மலர் 44 இதழ் 10
குரோதன புரட்டாசி 20



இந்திராவின் வாக்கை ராஜீவ் காப்பாற்றுவாரா?

பல ஆண்டுகளுக்கு முன்னால் பஸிபிக் மா கடலில் பிரான்ஸ் தேசம் அணுகுண்டு வெடித்துச் சோதனை நடத்தப் போகிறது என்ற செய்தி வந்ததும் ராஜாஜி சொன்னார்: ''எனக்கு ஒரு பழைய கப்பல் கொடுங்கள். உயிருக்கு அஞ்சாத சத்யாகிரகிகளுக்குத் தலைமை தாங்கி, அக்கப்பலில் அணுகுண்டு சோதனை நடக்கவிருக்கும் இடத்துக்குப் போகிறேன்! எங்களை அழித்துவிட்டு பிரான்ஸ் தேசம் சோதனை நடத்தட்டும்!'' ராஜாஜியின் இந்த யோசனையை ஏற்க நேருஜிக்கு மனம் வரவில்லை.

அதிசயம் என்னவென்றால் அன்று ராஜாஜி விதைத்த விதை, பல ஆண்டுகளுக்கும், பல அணுகுண்டுச் சோதனைகளுக்கும் பிறகு இன்று பல நியூஸிலாந்துவாசிகள் உள்ளத்தில் தளிர்விட அவர்கள் 'அமைதிக் கப்பல்' ஒன்றைப் பெற்று, அதில் ஏறி, பிரான்ஸ் தேசம் கடலில் அணுகுண்டுச் சோதனை நடத்தவிருக்கும் இடத்துக்குச் செல்லத் தீர்மானித்தார்கள். இந்த அணுகுண்டுச் சோதனையால் யாருக்கும் ஒரு தீங்கும் நேராது என்று பிரெஞ்சு அரசு கூறியபோது, ''அப்படியானால் அதை பாரீஸிலேயே வெடித்துச் சோதிக்கலாமே?'' என்று ஆஸ்திரேலியப் பிரதமர் பதிலுக்குக் கேட்டார்! சத்யாக்கிரகிகளின் தீவிரத்தைக் கண்ட பிரான்ஸ் தேசம் நடுங்கியது. ஐந்தாம் படையினரை ஏவி அந்த அமைதிக் கப்பலை ஆக்லண்டு துறைமுகத்திலேயே குண்டு வைத்து அழித்துவிட்டது! பிரான்ஸ் தேசத்தின் இந்தக் கோழைத்தனத்தைக் கண்டு உலகம் அதிர்ச்சி அடைந்தது. இந்த நீசத்தனத்தைத் தான் செய்யவில்லை என்று பிரெஞ்சு அரசு மூடி மழுப்பப் பார்த்தது. ஆனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துவிட, பிரான்ஸ் தேசத்துக்கு மிகப் பெரிய அபகீர்த்தியாகமுடிந்திருக்கிறது.

நாளை அணுப் போரினால், உலகமே அழியும் அபாயம் இருக்கிறதெனில் அணு ஆயுதச் சோதனைகள் இன்று பரப்பும் கதிரியக்கத்தால் உலகில் உயிர்க்குலம் சிறுகச் சிறுக பல விதங்களில் பாதிக்கப்பட்டு வருகிறது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் நாகஸாகி ஹிரோஷிமாவில் விழுந்த அமெரிக்க அணுகுண்டுகளின் அதி பயங்கர தீய விளைவுகளை ஜப்பானிய மக்கள் இன்றைக்கும் அனுபவித்து வருகிறார்கள். அடுத்தடுத்த தலைமுறையினர் பாதிக்கப்பட்டு வருகின்றனர்! அவ்வாறிருக்க இன்றைய நிலை என்ன? இரண்டாம் உலக யுத்தத்தில் மொத்தமாக எத்தனை அழிவுச் சக்தி பிரயோகிக்கப்பட்டதோ, அதைப் போன்று 25 மடங்கு அதிக அழிவுச் சக்தியை 'டிரைடண்ட்' என்ற ஒரே ஒரு அமெரிக்க நீர் மூழ்கிக் கப்பல் இன்றைக்குத் தன்னகத்தே கொண்டுள்ளது! இப்படி ஆயிரக்கணக்கான கப்பல்களையும் பல்லாயிரக்கணக்கான விமானங்களையும் வல்லரசுகள் செய்து குவித்துள்ளன. 'ஸ்டார் வார்' என்ற திட்டத்தின் கீழ் அணு ஆயுதப் போரை விண்வெளிக்கும் விஸ்தரிக்கத் திட்டமிடுகிறது அமெரிக்கா. அணு ஆயுதக் குறைப்புக்கான பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் காணவில்லை.

இந்த நிலையில் உலக நாடுகளிடையே அணு ஆயுதங்களுக்கு எதிராக வலுவான அபிப்ராயத்தை உருவாக்கி உலகை அழிவிலிருந்து காப்பாற்றுகிற தார்மிக பலத்தை இந்தியா பெற்றிருக்கிறது. நாமே அணுகுண்டு தயாரிப்பதன் மூலம் இந்த மகத்தான தார்மிக பலத்தை இழந்துவிடக்கூடாது. எனவேதான், ''பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்தாலும் இந்தியா தயாரிக்காது'' என்று கம்பீர உறுதியுடன் சொன்னார் இந்திரா. ஆனால் இன்று பாதுகாப்பு அமைச்சர் என்ற பொறுப்பையும் தாமே ஏற்றுக் கொண்டுள்ள ராஜீவ், தமது அன்னையின் இந்நிலையிலிருந்து மாறுபடுவதாகத் தோன்றுகிறது. பல அம்சங்களில் இந்திராவிடமிருந்து வித்தியாசப்பட்டு ராஜீவ் செயலாற்றுவதைக் காண மகிழ்ந்த நாம், இவ்விஷயத்தில் மட்டும் அவர் மாறுபடுவதைக் காண விசனிக்கிறோம்.

பாகிஸ்தான், சீனா ஆகியவற்றின் அணுகுண்டுகளிலிருந்து நம்மைக் காப்பாற்றக் கூடியது நாம் தயாரிக்கக் கூடிய அணுகுண்டுகள் அல்லவே அல்ல! உலக சமாதானத்தையே விரும்பும் தார்மிக பலமே நம்மைக் காக்கும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.

எம்.ஜி.ஆருக்கு லெனின் விருது கிடைக்குமா?

* ரகுபதி, செங்கல்பட்டு.

? வாரம் இனி இரண்டு தமிழ் சினிமா தான் ரிலீஸ் ஆகுமாமே?

! படம் பாக்ஸ் ஆபீஸ் வெற்றி அடைகிறதோ இல்லையோ, நஷ்டத்துக்கு வழியில்லாமல் முன்னேற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் படாதிபதிகள். தமிழ்நாட்டில் உள்ள லட்சக் கணக்கான ரசிகர்கள் புதுப் படம் பார்க்க வேண்டுமென்றால் இரண்டில் ஒன்றைத்தான் பார்த்தாக வேண்டும் — நன்றாய் இருக்கிறதோ இல்லையோ. எனவே இது ரசிகர்களின் உரிமையையும் சுதந்திரத்தையும் பறிக்கின்ற விஷயம்.



* தலைவர் ஆவாரா?



* புகட்டிய பாடம்

* மு. மதிவர்ணன், அரூர்.

? எம். ஜி. ஆருக்கு லெனின் விருது கிடைக்கும் காலம் வரும் என்று ம. பொ. சி. கூறியிருப்பது பற்றி..?

! அண்ணா விருது போல தனக்குத்தானே கொடுத்துக் கொள்ளக் கூடிய விஷயம் அல்ல லெனின் விருது!

* எம். சம்பத், வேலாயுதம்பாளையம்.

? "காங்கிரஸின் சாதாரண உறுப்பினர் கூட அல்லாத சோனியாவை தலைவர் ஆக்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்ற ராஜீவின் கருத்தை நம்பலாமா?

! இந்திரா காந்தியும் ராஜீவ் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் இப்படித்தானே சொல்லிக் கொண்டிருந்தார் என்று கேட்கிறீர்கள், இல்லையா? எனக்கென்னவோ ராஜீவை இது விஷயத்தில் நம்பலாம் என்றே தோன்ற முக்கிய காரணம், சோனியா அயல்நாட்டுப் பெண்மணி என்பது. இதுவே ராஜீவ் தம் குழந்தைகளைப் பற்றிக் கூறினால் ஜீரணிப்பது கஷ்டம்தான்!

* முருகேசன், தேனி.

? மக்கள் அனைவரும் அப்பரடிகள் வாழ்க்கையைப் பின்பற்றி வாழ வேண்டும் என்று அமைச்சர் ஆர். எம். வீ. கூறியிருக்கிறாரே?

! முன்னுதாரணம் காட்டி உபதேசிப்பது சுலபம்; எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டுவது கஷ்டம்.

* எஸ். டி. ஸ்ரீதர், கும்பகோணம்.

? ஜனநாயக நாட்டுக்கு என்ன தேவை?

! தன்னலமற்ற தீர்க்கதரிசிகளான தலைவர்கள்.

* எஸ். எஸ். மணி, திருவனந்தபுரம்.

? ஐயய்யோ! பஞ்சாயத்துத் தேர்தல் வந்துவிடும் போலிருக்கே?

! பயப்படாதீர்கள், ப. உ. ச. இருக்கிறார், பார்த்துக் கொள்வார்.

* எஸ். லதா, வாரங்கல்.

? ஸ்ரீ ராகவேந்திரர் படத்தில் தங்களுக்குப் பிடித்த காட்சி எது?



* லெனின் விருது



* பாராட்டு

! லேட்டஸ்டாய் வரி விலக்கு ஸீன்.

* இ. ஜம்புநாதன், பூவாளூர்.

? அரசு ஊழியர்களுக்கு அள்ளிக் கொடுத்தவர் எம். ஜி. ஆர். என்று ஆர். எம். வீ. கூறியிருக்கிறாரே?

! ராமாபுரம் தோட்டத்திலிருந்தா?

* எஸ். சம்பத்குமார், சாலிக்கிராமம்.

? பிராமண சமூகத்தினரே தங்கள் சமூகத்தைத் தாக்கி எழுதுவது பற்றி?

! ஆத்ம பரிசோதனை யாருக்குமே நல்லது தான். தாக்குதல் நயம்பட இருந்தால் உணர்ச்சிகள் கொந்தளிக்காது.

* எஸ். பாலாஜி, செங்கல்பட்டு.

? இளைஞர்களுக்கு வழி விட சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தத்தம் பொறுப்புக்களிலிருந்து ராஜினாமா செய்துள்ளது பற்றித் தங்கள் கருத்து?

! 'இளைஞர்களுக்கு வழிவிட' என்று சொல்வதற்கில்லை. 'அவர்களைவிட இளைஞர்களுக்கு' என்று வேணுமானால் குறிப்பிடலாம். இது காறும் மரணம் ஒன்றே பதவியிலிருந்து அவர்களை நீக்க முடியும் என்றிருந்த நிலை மாறியுள்ளதே கம்யூனிஸ்ட் நாட்டில் மிகப் பெரிய புரட்சிதான்!

* உமார்த்தி, கோவை—40.

? எழுத்தாளர்களின் மனம் எதை அதிகம் நாடுகிறது? பணமா, புகழா?

! புகழோடு கூடிய பணம்! பணம் மட்டும் ஆத்ம திருப்தி தராது. வெறும் புகழ் நடைமுறைக்கு உதவாது!

* ஆர். அரிகோபி, குடியாத்தம்.

? மணியன் குடும்பத்திலிருந்து புதிதாக வெளிவந்திருக்கும் சிறுகதைக் களஞ்சியம் பற்றி...?

! ஒரு சிறுகதைக்கு இருநூறு ரூபாய் சன்மானம் பாராட்டுக்குரிய விஷயம்.

* அஹ்மது, சென்னை.

? கமலஹாசன் — ஸாரிகா தொடர்புக்கு பகவத் கீதையை உதாரணம் காட்டிப் பெருமையடைந்த கமலஹாசனின் தந்தை, ஸாரிகா நிலையில் சுஹாசினி இருந்திருந்தால் எந்தக் கீதையைக் காட்டிப் பெருமை அடைந்திருப்பார்?

! இருப்பதே ஒரு கீதைதானே? அதையே சரியாகப் படித்திருந்தால் கமலின் அப்பா அதை மேற்கோள் காட்டியும் இருக்க மாட்டார்; இந்தக் கேள்வியும் எழுந்திராது.



* இளமைத்..... .....துள்ளல்..... .....யாரிடம்..... ..... அதிகம்?

* என். செந்தில்குமார், மயிலாடுதுறை.*

? கயிறு திரிப்பது எப்படி என்று ராஜீவுக்குக் கருணாகரன் விளக்கினாராமே?

! கவனிக்கவும். தாய்க்குச் சொல்லித் தரவில்லை. மகனுக்குத்தான் பாடம் நடத்தினார். தெரிந்தவர்தானே சொல்லித்தர முடியும்? தெரியாதவருக்குத்தானே கற்றுக் கொடுக்க முடியும்? ராஜீவ் இவ்விஷயத்தில் மோசமான மாணாக்கராக இருக்க வேண்டும் என்று தேசம் பிரார்த்திக்கிறது.

* அ. கயல்விழி, விருத்தாசலம்.

? திட்டம்போட்டு முடிவெடுப்பது, திட்டம் போடாமல் முடிவெடுப்பது—இவ்விரண்டில் எது தமிழக அரசுக்குக் கைவந்த கலை?

! முடிவே எடுக்காமல் இழுத்தடித்துக் கொண்டிருப்பதுதான் கைவந்த கலை!

* துரை இராஜேந்திரன், திருப்பூர்.

? கருணாநிதி தலைமையில் போராட்டம் நடத்தினால் இலங்கைத் தமிழருக்கு ஆபத்து; எம். ஜி. ஆர். தலைமையில் ஹர்த்தால் நடத்தினால் இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு ஏற்படும்! — இது எந்த வகையில் நியாயம்?

! இரு கட்சியினரும் அரசியல் ஆதாயம் தேடவே இலங்கைப் பிரச்னையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பிரச்னையைத் தீர்க்க இவர்களால் முடியவும் முடியாது; இவர்களுடைய இன்றைய யோசனைகள் எதுவும் பயன்படவும் செய்யாது.

* எஸ். கலீல் ரகுமான், பொள்ளாச்சி.

? ரேவதி, இளவரசி, ஜெயஸ்ரீ, நளினி — யாரிடம் இளமைத் துள்ளல் அதிகம்?

! வண்டலூர் போய் வந்த மூடிலேயே பதில் சொல்கிறேன்: ரேவதி—புள்ளி மானின் துள்ளல்; இளவரசி—கன்றுக்குட்டியின் துள்ளல்; ஜெயஸ்ரீ—முயலின் துள்ளல்; நளினி—குதிரையின் துள்ளல் — ஒவ்வொன்றும் ஒருவித அழகு!

---

* ரூ. 10 பரிசு பெறுபவர்:
என். செந்தில்குமார்,
23, அய்யாரப்பர் தெற்கு வீதி,
மயிலாடுதுறை—609 001.

நீங்கள் கேட்டவை—தராசு

அமிர்தாஞ்சனின்



"அழியாச் சின்னங்களை அடையாளம் காணும்" போட்டி

ரூ.2.75.000

மதிப்புள்ள பரிசுகளை வெல்வீர்!

போட்டி மிகவும் எளிது! உலகப் புகழ் வாய்ந்த 5 அழியாச் சின்னங்களின் படங்கள் இங்கு தரப் பட்டுள்ளன. அவற்றின் பெயர்கள் 1 முதல் 5 என்று இலக்கமிட்டும் தரப்பட்டுள்ளன. நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்: அந்த அழியாச் சின்னங்கள் எவை என்று ஒவ்வொரு படத்தின் அடியிலும் தரப்பட்டுள்ள கட்டத்தில் பொருத்த மான எண்ணை எழுத வேண்டும்.

பின்னர், கீழ்க்கண்ட கட்டத்திலுள்ள வாக்கியத்தை மேலும் 10 வார்த்தைகளுக்கு மேற் படாமல் எழுதி, பூர்த்தி செய்து அனுப்பவும்.

உங்கள் நுழைவுத்தாள்களை 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப்பெட்டி ஒன்றுடன் அனுப்ப வேண்டும். இந்த விளம்பரத்தையே நுழைவுத் தாளாகப் பயன்படுத்தலாம்.


விரைந்திடுவீர்! நுழைவுத்தாள்களை அனுப்ப வேண்டிய கடைசி தேதி: அக்டோபர் 15, 1985

அமிர்தாஞ்சன் பெயின் பாம்
தலைவலி, உடல் வலி, தசை வலி, மற்றும் சுளுக்கு, இவற்றிற்கு துரித நிவாரணி



10 முதல் பரிசுகள்
கலர் டிவி-க்கள்

100 இரண்டாவது பரிசுகள்
14" பிளாக் & ஒயிட் டிவி






200 மூன்றாவது பரிசுகள்
எலெக்ட்ரானிக் கைக்கடிகாரங்கள்.

போட்டி விதிகளும் நிபந்தனைகளும்:

1. அமிர்தாஞ்சன் லிமிடெட் ஊழியர்கள், அதன் விளம்பர ஏஜென்சிகள் மற்றும் அவர்களது உறவினர்களைத் தவிர, இந்தியாவிலுள்ள யாவருமே போட்டியில் பங்கு பெறலாம்.
2. நீங்கள் எத்தனை நுழைவுத்தாள்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொன்றுடனும் 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப்பெட்டி ஒன்றும் இணைக்க வேண்டும்.
3. பென்சிலால் எழுதப்பட்ட நுழைவுத்தாள்களும், அழிக்கப்பட்ட குறிகள் கொண்டவை அல்லது சீர்குலைந்தவை, தெளிவாக எழுதப்படாதவை, அல்லது தபால்தலை ஒட்டப்படாதவை அல்லது குறைவாக ஒட்டப்பட்டவை ஆகிய நுழைவுத்தாள்களும் நிராகரிக்கப்படும்.
4. நுழைவுத்தாள்களுடன் அனுப்பப்படும் அட்டைப்பெட்டிகள் சேதமுற்றிருந்தாலும், சீர்குலைந்து இருந்தாலும், போட்டியில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
5. வியாபாரியின் பெயரும் முகவரியும் எழுதப்படாத நுழைவுத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
6. தபாலில் இழந்துபோன அல்லது தாமதமாக வந்து சேரும் நுழைவுத்தாள்களுக்கு அமிர்தாஞ்சன் பொறுப்பேற்காது.
7. நுழைவுத்தாள்களை ஆங்கிலம் அல்லது மற்றெந்த இந்திய மொழியிலும் எழுதலாம்.
8. முடிவை ஒரு தீர்ப்பாளர் குழு பரிசீலிக்கும். அவர்களின் தீர்ப்பே முடிவானது. அதற்குக் கட்டுப்பட வேண்டும்.
9. போட்டி சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
10. நுழைவுத்தாள்களும், விளம்பர வாசகமும் அமிர்தாஞ்சன் லிமிடெட்டின் உரிமைகளாகும்.
11. போட்டி சம்பந்தப்பட்ட சட்டப்படியே பரிசுத் தொகை வழங்கப்படும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட நுழைவுத் தாள்களும், 12 கிராம் அமிர்தாஞ்சன் பாட்டிலின் அட்டைப் பெட்டியும் அடங்கிய உறையின் மீது "அமிர்தாஞ்சன் போட்டி" என்று எழுதி, அமிர்தாஞ்சன் லிமிடெட், 42-45, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. என்னும் முகவரிக்கு அக்டோபர் 15, 1985-க்குள் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும்.
13. பரிசு பெற்றவர்கள் தபால் மூலம் அறிவிக்கப்படுவார்கள். முதல் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் முக்கியமான நாளேடுகளில் வெளியிடப்படும்.



1. விடுதலைச் சின்னத்தின் சிலை
2. தாஜ் மகால்
3. கோமதேஸ்வரரின் உருவச்சிலை
4. செயின்ட் பீட்டர் சதுக்கம்
5. பீசா நகரத்தின் சாய்ந்த கோபுரம்

நான் அமிர்தாஞ்சன் பெயின் பாம் உபயோகிக்கிறேன். ______

ஏனெனில் ______

______

______

______

பெயர் ______

முகவரி ______

______

வியாபாரியின் பெயர் : ______

______

முகவரி ______

______



ஈழத் தமிழர் பற்றி ஏதோ நமீபியா பிரச்னை போல் எழுதுவதா?

ஆறுதலளித்தது Special Report

* கே. ஸ்ரீனிவாசனின் 'பஞ்சாப் தேர்தல்' ஸ்பெஷல் ரிப்போர்ட்டில் பஞ்சாபிகள் எல்லாவற்றையும் விட அமைதியையும், இந்து—சீக்கிய ஒற்றுமையையுமே பெரிதாக எண்ணுகிறார்கள் என்ற அடிப்படை உண்மை மனத்துக்கு ஆறுதலையும் அமைதியையும் அளித்தது.

சென்னை—28. எம். தியாகராஜன்.

* பஞ்சாபைப் பற்றிப் பலவதந்திகளையே கேள்விப் பட்டுக் கொண்டிருந்த எங்களின் பல சந்தேகங்களைத் தீர்த்து, இன்றைய சூழ்நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டியது ஸ்பெஷல் ரிப்போர்ட். அட்டைப் படத்தைக் கண்ணாடியில் சிறைப்பிடிக்க வைத்த சுபா சுந்தரத்துக்கும் பாராட்டுக்கள்.

சீர்காழி. ஆர். எஸ். இராஜு.

பிரியா விடை

* இதுவரை நகைச்சுவை மிளிர அவருக்கே உரித்தான வகையில் பதில்கள் சொல்லிய பாக் யராஜிற்கு, கல்கி வாசகர்கள் சார்பில் பாராட்டுக்கள்.

ஈரோடு—1. ஸ்ரீரேவதிப்ரியன்.

* கலைஞரின் அணுகுமுறை பற்றிய விமர்சனம் (தராசு 22.9.85 இதழ்) மனத்தைப் புண்படுத்துகிறது.

இலங்கை இனப்படுகொலையில் மிதவாத அணுகுமுறை மூலம் intellectual என்ற பெயரெடுக்க முயல்வது புரிகிறது. ஏதோ நமீபியாவில் நடக்கும் இனப்படுகொலை பற்றி விவாதிப்பது போன்ற detached stand எடுக்கும் சோ, அ. தி. மு. க., இ. காங் இவர்களுடன் கல்கியும் சேர்ந்து கொலைகாரர்களுக்கும் வேட்டையாடப்படுபவர்க்கும் பேச்சு வார்த்தைமூலம் உடன்பாடு காணும் திட்டம் பைத்தியக் காரத்தனமானது.

சேரன்மாதேவி. ஏ. கிறிஸ்தபர்.

தத்ரூபம்! தத்ரூபம்!

* இராஜா பாலசந்தர் எழுதிய, 'தங்கத்தைத் தேடி' சிறுகதை மிகச் சிறப்பாய் இருந்தது. கிராமப் பள்ளிகளில் உள்ள உடற்பயிற்சி ஆசிரியரின் அவல நிலையைத் தத்ரூமாய்த் தன் கதையில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் கதாசிரியர்.

திருச்சி—18. ராஜிராதா.

* 'மதிக்கப்பட்ட ஆசிரியர்' (வாசகர் பங்கு) படித்தேன். எல்லாம் சரிதான் ஸார்! 'கரும்பலகை கற்ற சிலப்பதிகாரம்' தலைப்பில் சொல்லப்பட்ட ஆசிரியர், ஒரு 'ஐயர்' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஓவியர் அரஸ், படத்தில் 'திருமண் காப்பு' போட்டுள்ளாரே! ஏங்காணும், ராக்கன் முழித்திரா என்ன....!

புதுவை—3. குமாரி ஆன்ஜெலஷா.

* ஏன் சார்! தமிழகத்திலுள்ள பெரும்பான்மை பத்திரிகைக்காரர்களைப் போல 4 சிறுகதை, 2 தொடர் கதை, 2 கட்டுரை, சினிமா செய்திகள் இப்படி ஏதாவது எழுதிவிட்டுப் போவதை விட்டு, கலவரங்களைப் பற்றி, உண்மைகளை ஆராய்ந்து எழுதிக்கிட்டு யார் இப்படி வாங்கிக் கட்டிக்கச் சொன்னது! வட்ட மேஜை கடிதங்களைத்தான் குறிப்பிடுகிறேன்.

புதுவை—1. அ. ச. முகமது நிசாம்.

* நீண்ட இடைவெளிக்குப் பின் 'ஆனந்தி'யின் தெய்வீகக் கட்டுரை மனத்தைக் குளிர வைத்தது! கட்டுரையைப் படித்து முடித்ததும் சோழவரத்துக்கு மின்னல் வேகத்தில் போய் பஞ்சேஷ்டி தேவியைத் தரிசித்திட மாட்டோமா என மனம் பரபரத்தது!

திருவொற்றியூர். வந்தனா ராம்குமார்.

'மீண்டும் ஜெயலலிதா!'

* அரசியல் கணிப்போடு எழுதப்பட்ட அருமையான தலையங்கம்! பதவியில் உள்ளவர்கள் எல்லோருமே அறிந்து பின்பற்ற வேண்டிய அரிய உண்மைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இளங்கார்குடி. கோ. பாஸ்கர்.

* 'மீண்டும் ஜெயலலிதா' தலையங்கம் படித்தேன்! ஜெயலலிதா, இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தலையங்கம் எழுதிப் பிரலாபிக்குமளவு, ஜெயலலிதா. மீண்டும் அ. தி. மு. க. வின் கொ. ப. செ. ஆக நியமிக்கப்பட்டிருப்பது, எந்த வகையில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புரியவில்லை! **You too Kalki?**

வேலாயுதம்பாளையம். எம். சம்பத்.

அர்த்தாலுக்குப் பதிலாக

நான் ஓர் அயல்நாட்டு நிறுவனத்தின் சென்னைக் கிளையில் பணியாற்றுகிறேன். எனது பிரிட்டிஷ் மேலதிகாரியிடம், "அடுத்த செவ்வாய்க் கிழமை அர்த்தால், எனவே காரியாலயத்தை மூடி வைக்க வேண்டும்" என்றேன். "ஆமாம், நானும் நாளிதழில் பார்த்தேன்... ஒன்று கேட்கிறேன்..." என்று ஆரம்பித்தார் அவர். "இந்தக் கதவடைப்பினால் ஸ்ரீலங்காவில் உள்ள இந்தியருக்கு என்ன லாபம்? (ஆம், இந்தியர் என்ற சொல்லைத்தான் அவர் உபயோகித்தார்.) இங்கு தொழில், வியாபாரம் ஸ்தம்பிக்க, அந்த அளவுக்கு இந்தியப் பொருளாதாரம் நலிவதுதான் நிகர விளைவு. இதற்குப்பதில், 'ஒரு விடுமுறை தினத்தில் எல்லோரும் உழைப்போம்; கிடைக்கும் ஊதியத்தை ஸ்ரீலங்கா இந்தியர் நலனுக்குப் பயன்பட அளிப்போம்' என்று தீர்மானித்திருந்தால் எவ்வளவு நன்றாயிருந்திருக்கும்? இங்கு வந்துள்ள அகதிகள் புனர் வாழ்வுக்காவது பயன்படுமே? இந்தியப் பொருளாதாரமும் அந்த அளவுக்கு வளர்ச்சி யுறுமே?"

அவர் கேள்விக்கு என்னால் பதில் கூற முடியவில்லை. உங்களால் முடிகிறதா?

சென்னை—1. முரளிதரன்.

(இக்கடிதம் பரிசு பெறுகிறது)

காட்பரீஸ்

போர்ன்விடா



சுறு சுறுப்புப் பானம்!



"ஒரு டம்ளர் பாலிலே இரண்டு ஸ்பூன் போர்ன்விடா அதுவே நலமான சுவையான பானம்—அதை, என் குழந்தைகளுக்கு அன்றாடம் இருவேளை தருகிறேன்.

என் குழந்தைகளுக்கு, கோகோ, மால்ட், பால், சர்க்கரை ஆகியவற்றின் போஷாக்கினைத் தருகிறது போர்ன்விடா. அவர்கள் வளரும் காலம் முழுவதும் அவர்களுக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்தையும் சக்தியையும் அளிக்கிறது. அவர்கள் நல்ல வளர்ச்சி பெறுகிறார்கள். ஆகவே நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி."

போர்ன்விடாவின் இனிமைக்காலம். போர்ன்விடா அளித்தவரை பாசமனங்கள் நேசத்தோடு நினைந்து மகிழும் ஒருநாள்.



சித்தரஞ்சனி

10. சொப்பனமல்ல!

மூந்திய இரவில் இல்லாமல் மறுநாள் கருக்கல்வேளையில் மந்திர ஜாலத்தால் சிருஷ்டிக்கப்பட்டது போல் மேலைக்கடலில் திடீரென்று தோன்றிய மரக்கலத்தைக் கண்டு சிறிதும் வியப்படையாத கௌதமிபுத்ர சதகர்ணி, அதன் தோற்றம் எதிரிகளின் மன சஞ்சலத்தையும், பீதியையும் வெளிப்படுத்துவதாக எண்ணினான். பிசாசு பயத்தைக் காட்டித் தாபோல் துறைமுகவாசிகளை விரட்டி விட்ட சாகர்கள் தலைவன், பிசாசு கதையைத் தான் துண்டித்து விட்டதால் ஏற்படக் கூடிய விளைவைச் சமாளிக்கவே இந்தப் புதிய போர்க் கலத்தை துறைமுகத்தருகில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறான் என்று தீர்மானித்த கௌதமிபுத்ரன், வெகு சீக்கிரம் மேலும் மரக்கலங்கள் வருமானால் தாபோல் மலையில் போர் வீரர்கள் இறக்கப்பட்டு அது எதிரிகளின் போர்ப் பாசறையாக மாறிவிடும் என்ற முடிவுக்கு வந்தான். தான் பூஜாரியிடம் சொல்லியனுப்பியுள்ள செய்தியைத் தாபோலிலிருந்து வெளியேறிவிட்ட மக்கள் நம்பி உடனடியாகத் திரும்பினால் தாபோல் எதிரியின் தளமாவது சிறிது சிரமப்படும்என்றும்சதகர்ணி எண்ணினான். ஆனால் மக்களை அவர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையிலிருந்தும் பீதியிலிருந்தும் திடீரென மாற்றுவது அத்தனை சுலபமல்லவென்பதையும் அவன் உணர்ந்திருந்ததால், தான் துணிகரமான செயலில் இறங்கினாலொழிய எதிரி தனது படைகளைத் தாபோல் மலைப்பகுதியில் இறக்குவதைத் தடை செய்ய முடியாதென்றும் திட்டமாக அறிந்திருந்தான்.

இந்த எண்ணங்களுடன் புதிய கப்பலை நோக்கி விரைந்த படகை உற்று நோக்கினான். சித்தரஞ்சனி படகின் நடுவில் உட்கார்ந்திருந்ததையும் அவளுக்கு இருபுறத்திலும் இரு சாக வீரர்கள் ஆயுதந்தாங்கி அமர்ந்திருந்ததையும், படகைத் துடுப்புக்களைத் துழாவிக் கொண்டு படகின் முன்புறத்திலும் பின்புறத்திலும் உட்கார்ந்த இருவரும் மிக துரிதமாகத் துடுப்புக்களைத் துழாவியும் அன்று கருக்கலில் இருந்த கடல் கொந்தளிப்பில் அலைகளைச் சமாளித்துக் கொண்டு படகு முன்னேறுவது சிறிது கஷ்டமாக இருந்ததையும் கவனித்த சதகர்ணி எதிரிக்கு இயற்கை சிறிது இடைஞ்சலாக இருப்பதை நினைத்துச் சிறிது முறுவலும் கொண்டான்.

இந்த எண்ணங்களில் அவன் திளைத்திருக்கையில் தனது கைகளிரண்டையும் தூக்கிக் காட்டிப் படகிலிருந்த வீரர்களிடம் சித்தரஞ்சனி ஏதோ சொல்ல முயன்றதையும், அப்பொழுது அவள் கைகளிரண்டும் கயிறு கொண்டு பிணைக்கப்பட்டிருப்பதையும் கண்ட கௌதமிபுத்ரன் படகு கவிழ்ந்தால் அவள் நீந்தித் தப்ப முடியாதென்பதை உணர்ந்து அவள் உயிரைப் பற்றிச் சிறிது கலக்கமும் அடைந்தான். ஆனால் அத்தகைய விபத்து ஏதும் ஏற்படாமல் படகு மெள்ள மெள்ள அலைகளைத் தாவித் தாவிப் புதிய மரக்கலத்தை அடைந்ததைக் கவனித்த சதகர்ணி ஆசுவாசப் பெருமூச்சு விட்டுப் புதிய மரக்கலத்தை விட்டுத் திரும்ப எத்தனித்த சமயத்தில் புதிய மரக்கலத்தின் தளத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி அவன் முகத்தை மீண்டும் கடலை நோக்கித் திருப்பியது.

புதிய மரக்கலத்தின் தளத்தின் முனைக்கு வந்து படகிலிருந்தவர்கள் ஏறிவர நூலேணியைத் தொங்கவிட்டவன் சாதாரண வீரனுமல்ல, க்ஷத்ரபனோ, மகாக்ஷத்ரபனோ, இருவரும் அல்ல. ஆஜானுபாகுவும் யௌவன வயதை உடையவனும் வீரக்களை பொருந்தியவனும், இடையில் ஒரு குறுவாளைத் தவிர வேறு எதையும் அணியாதவனுமான ஒரு வீரனே நூலேணியைத் தொங்க விட்டான். கைகள் கட்டப்பட்டிருந்ததால் நூலேணியில் ஏற முடியாத நிலையை கைகளைத் தூக்கி சித்தரஞ்சனி விளக்கியதும் அவன் ஏதோ சைகை செய்ய அவள் கைத்தளைகளைப் படகிலிருந்த வீரனொருவன் குறுவாள் கொண்டு தரித்து விட இரு கைகளையும் சிறிது சரிப்படுத்திக் கொண்டு சித்தரஞ்சனி நூலேணி மீது அநாயாசமாக ஏறிச் சென்றாள். அவள் நூலேணியின் உச்சியை அடைந்ததும் அந்த வாலிபன் அவள் கைகளைப் பிடித்து அரைவாசி தூக்கிவிட்டுப் பிறகு இடையைப் பற்றித் தனக்கும் மேலே தூக்கிப் பிடித்து அவளைத் தனது கண்களால் விழுங்கிய பிறகே தளத்தில் இறக்கினான். பிறகு அவள் இடையை ஆதரவுடன் அணைத்த வண்ணம் அவளை மரக்கலத்தின் தளத்தின் நடுவுக்கு அழைத்துச் சென்றான். அடுத்து அந்த வாலிபனும் சித்தரஞ்சனியும் கண்ணுக்கு மறைந்துவிடவே கௌதமிபுத்ரன் தீர்க்க சிந்தனையுடன் மீண்டும் மலை மீது ஏறிச் சென்றான்.

அப்பொழுது நன்றாகப் பொழுது விடிந்து விட்டபடியால் தாபோல் மலைக்காடு மிகுந்த அழகுடன் காட்சியளித்தது. மரங்களிலெங்கும் புஷ்பங்கள் புஷ்பித்துக்குலுங்கின. அவற்

சாண்டில்யன்



றின் கிளைகள் சில கடலை நோக்கிக் காற்றில் தலையாட்டியதைக் கண்ட சதகர்ணி அவை சித்தரஞ்சனியைத் திரும்பக் கரைக்கு அழைப்பதாக மனத்தில் நினைத்து அதன் விளைவாக உவகையும் கொண்டான். முதல் நாளிரவில் குகைக்கதவை மூடியதும் பிறகு திறந்ததும் பூஜாரிதானென்பதைத் திண்ணமாக அறிந்திருந்த சதகர்ணி பூஜாரி வாளாவிருக்க மாட்டானென்பதும் துரிதமாகச் செயல்படுவானென்றும் திட்டமாக நம்பினான். அதன் விளைவாகத் தனது புரவியில் ஏறி அஞ்சன்வேல் நதிக்கரையை அடைந்து புரவியையும் நீராட்டித் தானும் நீராடித் திரும்பி வந்து புரவிக்குத் தீனி வைத்துத் தானும் அங்கிருந்த காய் கனிகளை அருந்தி பூஜாரியின் வரவை எதிர்நோக்கியிருந்தான்.

பூஜாரி நடுப்பகல் தாண்டிய பிறகே வந்து சேர்ந்தார். வந்ததும் வராததுமாகத் தாபிலேகவரருக்கு அபிஷேகம், பூஜை முதலியவற்றை முடித்து நிவேதனம் சமர்ப்பித்து அதில் தனக்கும் சிறிது பிரசாதம் கொடுக்க அதை உண்ட சதகர்ணி ''பெரியவரே! போன காரியம் என்னவாயிற்று?'' என்று வினவினான்.

பூஜாரி முகத்தில் பெரும் துயரச்சாயை படரவிட்டுக் கொண்டார். ''பிசாசு போய் விட்டதை யாரும் நம்பவில்லை. நான் சொல்வது சுத்தப் புரட்டு என்று சொல்கிறார்கள். யாரும் தங்கள் வீடுகளுக்குத் திரும்ப மறுக்கிறார்கள்'' என்றார் பூஜாரி.

''நான் யாரென்பதைச் சொன்னீரா?'' என்று வினவினான் சதகர்ணி.

''சொன்னேன்.''

''அதற்கு என்ன சொல்கிறார்கள்?''

''மோகினிப் பிசாசின் கையில் நீங்கள் சிக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள்...''

'பெரியவரே! அவர்களைப் பிசாசு ஏதுமில்லை என்று நம்பச் செய்ய வழியே கிடையாதா?'' என்று வினவினான்.

''இருப்பதாகத் தெரியவில்லை'' என்றார் பூஜாரி.

தீவிர சிந்தனையில் ஆழ்ந்த கௌதமிபுத்ரன் நீண்டநேரம் ஏதும் பேசவில்லை. கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வந்து ''பெரியவரே! இந்த க்ஷத்ரபர்களை நான் சமாளித்துக் கொள்கிறேன். நீர் என் தலைநகரத்துக்குச் சென்று வாரும். எனது தாயாருக்கு ஒரு கடிதம் தருகிறேன். அதைக் கொடுத்தால் எங்கள் வீரர்கள் சிலரை உம்முடன் அனுப்புவார்கள். அவர்களை அழைத்து வாரும்'' என்றான்.

பூஜாரி சிறிது சிந்தனையில் இறங்கிவிட்டு ''நான் இங்கிருந்து போக முடியாது'' என்றார் முடிவாக.

''ஏன்?'' வியப்புடன் வினவினான் சதகர்ணி.

''தாபிலேகவரர் பூஜையை விட்டு நான் போக முடியாது'' என்றார் பூஜாரி.

''பூஜையை நான் செய்கிறேன்'' என்றான் சதகர்ணி.



''உங்களுக்குப் பூஜை செய்ய அருகதை கிடையாது. இது என் பரம்பரை தர்மம். இவருக்கு நான்தான் பூஜை செய்ய வேண்டும்'' என்று திட்டமாகச் சொன்ன பூஜாரி அங்கேயே இரவு வரையில் தங்கிவிட்டு இராக்கால பூஜையையும் முடித்துக்கொண்டு கிளம்பினார். ''எதற்கும் நாளை பூஜையில் சந்திப்போம்'' என்றுகூறிச்சென்றுவிட்டார்.

அவர் சென்றதும் மிகவும் குழம்பிய மனத்துடன் சிறிதுநேரம் கோவிலின் முகப்புத் திண்ணையில் உட்கார்ந்திருந்த கௌதமிபுத்ரன் மெதுவாகக் கடற்கரையை நோக்கிச் சென்றான். கடற்கரை முகப்பிலிருந்த பாறைகளில் மறைந்து உட்கார்ந்தவண்ணம் கடலில் நின்ற மரக்கலத்தையே நோக்கிக் கொண்டிருந்தான். இரண்டாவது ஜாமம் முடிந்ததும் புதிய மரக்கலத்தில் எந்தவித நடவடிக்கையும் காணோம். அதில் எரிந்து கொண்டிருந்த விளக்குகளும் அணைக்கப்பட்டன. அப்படி அணைக்கப்பட்டாலும் நன்றாய்க் காய்ந்த நிலவின் விளைவாக அந்த மரக்கலத்தில் நடந்து கொண்டிருந்த மாலுமிகள் நன்றாகவே கண்ணுக்குத் தெரிந்ததைக் கண்ட கௌதமிபுத்ரன் இரவும் பகலும் மரக்கலம் காக்கப்படுவதால் மகாக்ஷத்ரபனும் க்ஷத்ரபனும் ஏதோ புது நிகழ்ச்சியை எதிர்பார்க்கிறார்களென்பதைப் புரிந்து கொண்டான். ஆனால் அது என்ன ஆபத்தாயிருக்கும் என்று நினைத்து விடை காணாத சதகர்ணி அந்த மரக்கலத்தில் சித்தரஞ்சனி எங்கிருப்பாள், எப்படி இருப்பாள் என்று சிந்தித்தான். அவளது இடையைப் பிடித்து அழைத்துப் போனவன் யார்? அவனுக்கும் சித்தரஞ்சனிக்கும் என்ன உறவிருக்கும்? இப்படியெல்லாம் சிந்தித்த கௌதமிபுத்ரன் எப்படியாவது அந்த மரக்கலத்தை அணுகத் தீர்மானித்த சமயத்தில் அஞ்சன்வேல் நதியில் படகொன்று வரவே அதிலிருந்து இரண்டு வீரர்கள் இறங்கி மலைக்காட்டுக்குள் வந்தார்கள்.

அவர்கள் மலைக்காட்டுக்குள் வந்து தாபிலேகவரர் சந்நிதியை நோக்கிச் செல்வதைக் கண்ட சதகர்ணி மெதுவாகத் தனது மறைவிடத்தை விட்டு வெளியே வந்து படகை நோக்கிச் சென்றான். அதில் துடுப்புகளைச் சித்தமாக வைத்துக் கொண்டிருந்த படகோட்டிக்குப் பின்னால் மெதுவாகப் படகில் ஏறி ''உம்! படகை விடு'' என்றான். படகை விட்டுப் போன இருவரில் ஒருவர் மட்டும் வந்ததாக எண்ணிய படகோட்டி ''இன்னொருவர் எங்கே?'' என்று கேட்டான்.

''பிறகு வருவார்'' என்று மெதுவாகச் சொன்னான் சதகர்ணி.

திருடர்கள் ஜாக்கிரதை அறிவிப்பை எங்கும் காணலாம். கோவை சிங்கா நல்லூரில் உள்ள தொழிலாளர்கள் ராஜ்ய இன்சூரன்ஸ் ஆசுபத்திரியில் மகப்பேறு பிரிவில் காணப்படும் அறிவிப்பு:

"குழந்தைத் திருடர்கள் ஜாக்கிரதை"

—தி. சுந்தரேசன்.

குரல் வித்தியாசப்பட்டதால் சந்தேகத்துடன் திரும்பிய படகோட்டியின் பொட்டில் கோடரியின் பிடி பலமாகத் தாக்கவே படகோட்டி அப்படியே படகில் விழுந்தான். அவனது தலைப்பாகையை எடுத்துத் தனது தலையில் சுற்றிக் கொண்ட கௌதமிபுத்ரன் படகில் உட்கார்ந்திருந்தான் மற்ற இருவர் வருகைக்காக. சிறிதுநேரத்திற்கெல்லாம் வந்த அந்த இருவரும் படகில் ஏறிக்கொண்டு "படகைச் செலுத்து. பட்சி பறந்து விட்டது" என்று கூறக் கௌதமிபுத்ரன் வேகமாகத் துடுப்புகளைத் துழாவினான்.

படகு மரக்கலத்தை நோக்கி விரைந்து கொண்டிருக்கையில் இருவரில் ஒருவன் கேட்டான். "சாதவாகனன் எங்கே போய் விட்டான்?" என்று.

"யாருக்குத் தெரியும். அவன் கோவிலிலோ சுற்றுப்புறத்திலோ காணோம். அவன் புரவியுமில்லை" என்றான் மற்றவன்.

"அவன் எங்கும் போக முடியாது. விரைவில் நம்மிடம் சிக்குவான்" என்றான் முதலில் பேசியவன்.

அந்தச் சமயத்தில் சதகர்ணியால் பொட்டில் அடிக்கப்பட்டு நினைவுத் தப்பிக் கிடந்த படகோட்டியைப் படகின் முகப்பில் விட்டு அவன் மீது சதகர்ணி அமர்ந்திருந்ததாலும் இரு வீரர்கள் கவனம் மரக்கலத்தின் மீதிருந்ததாலும் அவர்கள் சந்தேகம் ஏதுமில்லாமலே பயணம் செய்தார்கள். மரக்கலத்தைப் படகு அணுகிய சமயத்தில் படகோட்டிக்குச் சிறிது ஸ்மரணை வந்து அவன் முனகவே இரு வீரர்களும் "யார் முனகுவது?" என்று விசாரிக்கவே "நான்தான். இந்தக் கடற்காற்று என் விலாப் பக்கத்தைச் சிறிது பிடித்திருக்கிறது" என்று முக்கி முனகி சதகர்ணி பதில் சொல்லவே அவர்கள் மேற்கொண்டு கேள்வி ஏதும் கேட்காமல் மரக்கலத்தைப் படகு அணுகியதும் குரல் கொடுக்க நூலேணி வந்தது. நூலேணியில் ஒருவர் பின்னொருவராக ஏறியதும், "நீ போகலாம் கோட்டைக்கு" என்று வீரன் ஆணையிடப் படகை மறுபக்கம் திருப்பிக் கரையை நோக்கிச் சிறிது தூரம் சென்ற சதகர்ணி மீண்டும் படகை மரக்கலத்தை நோக்கித் திருப்பினான்.

இரவின் மூன்றாம் ஜாமம் நெருங்கிவிட்டதால் மரக்கலத்தில் அதிக சத்தம் ஏதும் கேட்கவில்லை. அலைகளின் ஓசையைத் தவிர வேறு சப்தம் எதுவும் காணோம். படகோட்டி முகத்தில் சிறிது கடல்நீரை அள்ளித் தெளித்து எழுப்பிய சதகர்ணி "நீ படகைக் கோட்டைக்கு ஓட்டிச் செல்" என்று கூறினான்.

"என்னைப் பொட்டில் யாரோ அடித்தார்கள்" என்று முனகினான் படகோட்டி.

"அவன் ஓடிவிட்டான். நீ போ. தலைவர் காத்திருப்பார்" என்று கூறினான்.

"ஆம். ஆம். அவரைக் காக்க வைக்கக் கூடாது. அந்த இன்னொரு வீரர்..." என்று ஏதோ துவங்கினான்.

"நூலேணியில் ஏறிப் போய் விட்டார்" என்ற சதகர்ணியின் குரலைக் கேட்டதும் "உன் குரல் புதிதாக இருக்கிறதே..." என்றான் படகோட்டி.

அடுத்து அவன் பேசவில்லை, கோடரி இன்னொரு முறை பொட்டில் சம்பந்தப்பட்டதால். மறுமுறை படகோட்டி சுரணையற்றதும் படகை மரக்கலத்தைச் சுற்றிச் செலுத்தினான் சதகர்ணி. மரக்கலத்தின் ஒரு பக்கப் பலகையில் பாய் மரக்கயிறு ஒன்று விழுந்து கிடந்ததைக் கண்டதும் அதை மெதுவாகப் பிடித்து இழுத்துப் பார்த்தான். அது மேலே நன்றாகப் பிணைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அதைப் பிடித்துக் கொண்டு பலகை மீது தொத்தி ஏறினான். தளத்தருகே வந்ததும் மெதுவாகத் தளத்தின் மீது கண்களை ஓடவிட்டுத் தூரத்தே இருந்த காவலர் அறியாமல் மெதுவாக ஏறித் தளத்துப் பலகையில் ஓசைப்படாமல் இறங்கிப் படுத்து விட்டான்.

தளத்தில் சுமார் நாலைந்து காவலரே இருந்ததாலும் அவர்களும் அலுத்துத் தளத்தின் ஒரு மூலையில் உட்கார்ந்து பேச முற்பட்டதாலும் மெதுவாக எழுந்து நடந்த சதகர்ணி தளத்தின் நடுவிலிருந்த தலைவன் அறையை நாடிச் சென்றான். உள்ளே யாரோ பேசும் குரல் கேட்டுக் கதவிடுக்கின் வழியாக உள்ளே நோக்கினான். அங்கே அவன் கண்ட காட்சி அவனை உலுக்கி விட்டது. அங்கிருந்த பஞ்சணையில் கைகால்கள் பிணைக்கப்பட்டுச் சித்தரஞ்சனி கிடந்தாள். "கௌதமிபுத்ரனைப் பற்றி எண்ணிப் பயனில்லை. அவன் உதவிக்கு வர மாட்டான்" என்று கட்டிலுக்கு எதிரே நின்ற வாலிபன் கூறினான். அவன் குரலில் ஏளனம் ஒலித்தது.

"கண்டிப்பாய் வருவார். வந்தால் உன் கதி அதோகதிதான்" என்றாள் சித்தரஞ்சனி படுக்கையில் கிடந்த வண்ணம்.

"அப்படி என்ன அக்கறை உன்னிடம் அவனுக்கு?" என்று கேட்டான் அந்த வாலிபன்.

"அவர் என் கணவர்" என்ற சித்தரஞ்சனியின் முகத்தில் மகிழ்ச்சிச் சாயை விரிந்தது.


"உன்... என்ன?"

"கணவர். என்னைக் கைவிட மாட்டார்."

"சொப்பனம் காண்கிறாய்!"

"சொப்பனமல்ல" என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்து கதவைச் சாத்தி விட்டு அதன்மீது சாய்ந்து நின்றான் சதகர்ணி.

(தொடரும்)



பருவத்தின் எல்லையில் என் பாசத்துக்குரிய மகள், சங்கடமான இந்தக் காலகட்டத்தில் அந்த இளம் உள்ளம் படும் வேதனை, தாயாகிய எனக்குத் தான் புரியும்.

“என் மகளுக்கு கேர்ஃப்ரீ வாங்கித் தர நான் முடிவு செய்தது ஏனென்றால்”..

ஒரு சிறுமியின் வாழ்க்கையில் அவள் வயதுக்கு வரும் காலகட்டம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பயமும், வெட்கமும், தவிப்பும் நிறைந்து, உடலளவில் மட்டுமின்றி மனத்தளவிலும் அவள் பாதிக்கப்படும் நேரமும் அதுதான்.

நான் ஒரு தாய். இந்தக் காலகட்டத்தை அனுபவித்தவள். அதன் சிரமங்களை நன்கு உணர்ந்தவள். குறிப்பிட்ட அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு பெண்ணுக்கும் ஏற்படும் சங்கடமும் தொல்லையும் எனக்கு நன்றாகவே தெரியும்.

இத்தனை வருடங்களாக, சானிடரி பாது காப்புக்குத் தேவையானதை நான் வீட்டிலேயேதான் தயாரித்துக் கொள்வேன். அது மிகவும் தர்மசங்கடமான வேளைதான்!

மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதற்காக நன்றாகத் துவைத்து, காயப்போட்டு.. போதும் போதும் என்றாகி விடும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்குக் கூட நமது 5 நாள் பிரச்னை விளம்பரப்படுத்தப்பட்டு விடும். இத்தனை அவஸ்தைப் பட்டாலும்,

நமக்குத் தேவையான சானிடரி பாதுகாப்பு கிடைக்குமா என்பதும் நிச்சயமில்லை. அது மட்டுமல்ல; எப்போது எந்த அசம்பாவிதம் நடந்து அவமானப்பட வேண்டி வருமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் இதிலெல்லாம் ஓரளவு பழக்கப்பட்டுவிட்டேன் என்றே சொல்லலாம். தவிர, அந்தக் காலத்தில் சங்கடமான அந்த 5 நாட்களில் பெண்கள் வெளியே போவது என்கிற வழக்கமெல்லாம் அறவே கிடையாது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது... பெண்கள் மாதத்தின் அந்த 5 நாட்களில்கூட துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது கேர்ஃப்ரீ போன்ற நவீன சானிடரி பாதுகாப்பு கிடைக்கும் இந்த நாளில், என் மகளும் நான் இளம் பெண்ணாக இருந்ததைப் போலவே ஏன் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கவேண்டும், நான் வளர்ந்த காலம் வேறு. என் மகள் வளரும் சூழ்நிலை வேறு இன்றைய சிறுமிகள் மாதத்தின் அந்த 5 நாட்களில் கூட துடி துடிப்பாக செயல்பட வேண்டியுள்ளது.

என் மகளைப் பாருங்களேன். அவள், நான் இளம் பெண்ணாக இருந்த காலத்தில் செயல்பட்டதைவிட மிக...மிக சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டியிருக்கிறது...படிப்பு விஷயத்திலும் சரி, இதர வேலைகளிலும் சரி. நாங்கள் இருந்ததைப் போல என் மகளையும் வீட்டிற்குள் முடக்கிப்போட நான் விரும்பவில்லை.

அதனால்தான் நான் கேர்ஃப்ரீயைத் தேர்ந்தெடுத்தேன். என் மகளின் துடிப்புக்கும் துள்ளலுக்கும், ஆட்டத்துக்கும் ஓட்டத்துக்கும் ஈடு கொடுக்கும் இணைபிரியாத் தோழி கேர்ஃப்ரீ.

முக்கியமான அம்சம் என்னவென்றால் கேர்ஃப்ரீ ஒரு ரெடிமேட் நாப்கின். துணியையும் பஞ்சையும் வைத்து மடித்து, நேரத்தை வீணாக்கும் தொல்லை கிடையாது.

நான் அந்தக் காலத்தில் செய்தது போல என் மகள் துவைத்து, காயப் போட்டு, சங்கடப்பட வேண்டியதில்லை. தேவையான நேரத்திலே சட்டென்று புத்தம் புதுசாக, சுத்தமான ஒரு நாப்கினை எடுத்து அவள் உபயோகிக்கலாம்.

ஒரு விஷயத்தை நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். முதலில் எனக்கு இத்தகைய ரெடிமேட் நாப்கின்மீது கொஞ்சம் அவநம்பிக்கை இருக்கவே செய்தது. ஆனால், இப்போது என் மகள் மாசாமாசம் கேர்ஃப்ரீ பயன்படுத்தி மகிழ்ச்சியோடு இருப்பதைப் பார்த்ததும் எனக்குப் பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. தேவையான சானிடரி பாதுகாப்புக்கும், அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுக்கவும் சானிடரி நாப்கின் பெரிதாக, கனமாக இருக்க வேண்டும் என்று நான் எண்ணி வந்தது தவறு என்பது இப்போது விளங்குகிறது.

கேர்ஃப்ரீ உபயோகிப்பதால் சுகமாகவும் பாதுகாப்பாகவும் உணர்வதாக என் மகளே சொல்கிறாள். பயமின்றி, கவலையின்றி வெளியே சுற்றவும் முடிகிறது என்றும் கூறுகிறாள். அப்பாடா! எனக்கு ஒரு கவலை விட்டது.

கேர்ஃப்ரீ பயன்படுத்துவதில் சிரமமோ சிக்கலோ எதுவுமே கிடையாது. இதனாலேயே என் மகளுக்கு எந்த விதமான பிரச்னையும் இல்லை. அதைக் குறித்து நான் சந்தோஷப்படுகிறேன்.

எனக்குக் கிடைக்காத ஒரு சுதந்திரமும் பாதுகாப்பும் கேர்ஃப்ரீ மூலம் என் மகளுக்குக் கிடைத்திருப்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். ஒரு பெண்தான்—அதுவும் ஒரு அன்னைதான்—என்னுடைய மன உணர்வுகளைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

காலத்தோடு நாமும் மாறியாக வேண்டும். அதுவும் நமக்கு அதிக சுதந்திரமும் பாதுகாப்பும் தருகிற கேர்ஃப்ரீ வடிவிலே அந்த மாற்றம் இருக்குமானால், அதை நாம் வேண்டாம் என்று ஒதுக்குவானேன்?



கிடைக்கிறது. 10 உள்ள பேக் மற்றும் சிக்கனமிக்க 20 மற்றும் 30 உள்ள பேக்குகளிலும்
தனியும் கிடைக்கிறது. கேர்ஃப்ரீ எக்ஸ்ட்ரா லாங் 10 உள்ள பேக்கில்

கேர்ஃப்ரீ சானிடரி நாப்கின்கள்—பூரண சுகம், பரிபூரண பாதுகாப்பு—மாறுகின்ற காலத்துக்கேற்ற மகத்தான வசதி.

Johnson & Johnson

OBM/5070/R2/TAI

போட்டிக் கதை 6

முதலில் வெல்லப்பாகு வாசனை. பிறகு தேங்காய் உடைத்து அரிவாள் மனையில் மூடிகளைத் துருவும் சத்தம். கடைசியாய் ஏல மணம். மூன்றும் கூட்டாய்ச் சேர்ந்து பூரணமாய் நாசியைத் துளைக்கவும் தாமோதரனுக்குப் பொறுக்கமுடியவில்லை. அதுவரை வாசித்துக் கொண்டிருந்த தினமணியை மடித்து மேஜை மேல் வைத்தார். ஈஸி சேரை மடக்கி சுவர் ஓரமாய் சாய்த்துவிட்டு அறைக் கதவை ஒருக்களித்து சாத்தினார். வெளியே கூடத்திற்கு வந்தார். சுவர்க் கடிகாரம் இரண்டு தடவை அடித்து ஓய்ந்தது. சாதாரணமாய் இந்த நேரத்திற்குக் கூடத்து ஓரமாய் ஒரு பாயைப் போட்டுப் பகல் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் பங்கஜம் இன்றைக்கு அதிசயமாய்ச் சமையற்கட்டில் வேலை செய்து கொண்டிருந்தாள். உதவியாய் ரம்யாவும் இருப்பது, கூடத்திலிருந்தபடியே பார்த்துக் கொண்டிருந்த தாமோதரனுக்கு மிகுந்த ஆச்சர்யமாகிவிட்டது.

என்ன விசேஷம் இன்றைக்கு? வீட்டிற்கு யார் வரப் போகிறார்கள்?

தாமோதரன் யோசித்துக் கொண்டிருக்கையில் நந்து நாலு கால் பாய்ச்சலில் வாசலிலிருந்து உள்ளுக்குத் தாவிக் கொண்டிருந்தான். அவன் கை இரண்டிலும் ஏதோ மளிகை சாமான் பொட்டலங்கள். இடுப்பு டிராயர் இறங்கியது தெரியாமலோ அல்லது சரிசெய்து கொள்ள முடியாமலோ அவசரமும், அவஸ்தையுமாய்ச் சமையற் கட்டில் புகுந்தான். சில நிமிஷங்களில் திரும்பி வந்த அவனை, ''நந்தூ.....'' என்று வாஞ்சையுடன் கூப்பிட்டார் தாமோதரன். அந்த வீட்டில் நந்து என்கிற நந்தகுமார்தான் சின்னக் குழந்தை. வயது ஐந்து. தாமோதரன்தான் பெரிய குழந்தை. வயது எழுபத்தி ஐந்து. இந்தப் பெரிய குழந்தையை வீட்டின் சின்னக் குழந்தைதான் மதித்து நாலு வார்த்தையாவது பேசும்.

''என்ன தாத்தா?'' என்றபடி அருகில் வந்த நந்து, டிராயரைத் தூக்கிப் பிடித்து நழுவிய பட்டனைப் போட்டுக் கொண்டான். உள்ளே போனபோது தேங்காய்த் துருவலை எடுத்து வாயில் போட்டிருப்பான் போலிருந்தது. கன்னமும், மூக்கு நுனியும் காட்டிக் கொடுத்தது.

''நந்துக் கண்ணு! இன்னிக்கு நம்ம வீட்டுக்கு யார் வரப் போறா?'' என்றார் ஆவலுடன். அவருக்கு உள்ளூற ஒரு சந்தேகம்தான். ரம்யாவை யாரோ பெண் பார்க்க வரப் போகிறார்கள். அவளுக்கும் பதினெட்டு முடியப்போகிறதே.....சரியாய் விசாலம் செத்துப் போன பத்தாம் நாள் பிறந்தவள் அல்லவா? விசாலம், அவர் மனைவி. மனைவி ஞாபகார்த்தமாய்த் தாமோதரன் பேத்திக்கு விசாலம் என்று பெயர் வைக்க விரும்பினார். ஆனால் பங்கஜம், ''அது ரொம்ப பழைய பேர்.... நான் புதுசாய் என் பெண்ணுக்குப் பேர் வைப்பேன்....'' என்று ரம்யமாய் ஒரு பெயர் சூட்டினாள். அடுத்து பிறந்த பெண்ணிற்காவது மனைவி பெயரை வைக்கச் சொல்லித் தாமோதரன் கெஞ்சியதும், அதற்காகவே பங்கஜம் ''ஆஷா'' என்று பெயர் வைத்து அழைத்ததும் தாமோதரனுக்கு நெஞ்சில் ரணமாய்ப் பதிந்து போன நிகழ்ச்சிகள்.

நந்து சட்டெனத் தலையை மறுத்து ஆட்டியபடி, ''தாத்தா! நம்ம வீட்டுக்கு யாரும் வரப் போறதில்லே.... நாமதான் இன்னிக்கு பம்பாய்க்குப் புறப்படப் போறோம்! தெரியாதா, உனக்கு?'' என்று கண்களை மலர்த்தி வியப்புடன் கேட்டான்.

''பம்பாய்க்கா? என்னப்பா சொல்றே, நந்து? பம்பாயில் நமக்கு யார் இருக்கா?'' தாமோதரன் யோசித்தார். வடக்கே அவருக்குச் சொந்தக்காரர்கள், நண்பர்கள் யாரும் கிடையாது. பிள்ளை ராஜனுக்கும், அவன் மனைவி பங்கஜத்தின் வழியிலும்கூட அங்கு சொந்த பந்தம் யாரும் இல்லை. பிறகு எதற்காக இந்தத் திருச்சியின் ஒரு கோடியிலிருந்து பம்பாய் போக வேண்டும்?

நந்து தாத்தாவின் கேள்வியை ரசிக்காதவன்போல், ''போ, தாத்தா! யாருமே இல்லாத இடத்துக்குத் தான் போயி நிம்மதியா ஒரு வாரம் இருந்துட்டு ஊர் சுத்திட்டு வரணும்னு அம்மா ஆசைப்பட்டா. அப்பாகிட்ட சொல்லி பம்பாய் புரோக்ராம் போடச்



சொன்னு. அப்பாவும் இன்னி ரயிலுக்கு டிக்கெட் ரிஸர்வ் பண்ணி இருக்கார். ரயிலுக்குக் கொண்டு போகத்தான் அம்மா ஸ்வீட்டும், காரமும் பண்ரு. வாசனே உனக்கு வரலே?'' என்று மூக்கை ஒரு இழுப்பு இழுத்தவன் மறுபடியும் உள்ளே ஓடிவிட்டான்.

தாமோதரன் குழப்பமும், திகைப்புமாய் அப்படியே நடுக்கூடத்தில் நின்றுவிட்டார்.

''தாத்தா! நடுக்கூடத்தில் நந்தி மாதிரி நிற்காதேயேன். உள்ளுக்கும், வாசலுக்கும் உன்னைக் கடந்து போகிறது கஷ்டமாயிருக்கும்னு தெரியாதா?'' ஆஷா 'வள்' என்று சீறி விழுந்தபடி கையில் ஒரு சூட்கேஸுடன் வாசலிலிருந்து உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

தாமோதரன் நின்ற இடத்திலிருந்து விலகிக் கொண்டபோது உள்ளிருந்து ரம்யா, ஓடி வந்தாள். ''என்னடீ, ஆஷா! படபடக்கிற வெய்யிலில் மெயின்கார்டு ஒரு கோடி போனியே, போன இடத்தில் உன் ஸ்நேகிதி.

தெய்வம் தேடிவரும்

·ஷைலஜா·



சூட்கேஸ் தந்தானா?''

ரம்யாவைப் பின்தொடர்ந்து வந்த பங்கஜம் முன் நெற்றி வியர்வையைப் புடவைத் தலைப்பால் துடைத்தபடி, "கல்யாணமாகி இருபது வருஷம் ஆறது..... இன்னும் உங்கப்பாவுக்கு ஒரு சூட்கேஸ் வாங்கத் துப்பு இல்லே..... இப்படியே ஓசியில காலம் தள்ள வேண்டிய தலையெழுத்து. இந்த தடவை பம்பாய் போகிறபோது எத்தனை விலையானாலும் ஒரு சூட்கேஸ் வாங்கிடணும். அங்க ரொம்ப சீப்பாமே? ரம்யா, ஆஷா! ரண்டு பேருமாய் அந்த உள்ள போய் ஊருக்குப் போற எல்லார் துணிமணியும் இந்த சூட்கேஸில்வையுங்கோ. எனக்கு உள்ள இன்னும் காரியம் இருக்கு. தேங்குழல் பிழியணும். கைக்குச் சப்பாத்தி பண்ணிக்கணும்...''

கூடம் இரும்பவும் காலியானது. தாமோதரனும் தம் அறைக்குத் திரும்பினார். ஈஸிசேரைப் பிரித்துப் போட்டுச் சாய்ந்து கொண்டார். திடீரென இது என்ன பம்பாய் பயணம்? இதுபற்றி ராஜன் கூடவா என்னிடம் சொல்லக் கூடாது?

பிள்ளையின் அலட்சியம், தாமோதரனுக்கு வேதனையாய் இருந்தது.

வரட்டும் ராஜன்.... அவன் வந்ததும் முதல் காரியமாய் இப்படிச் சொல்லிவிட வேண்டும். "இதோ பாருப்பா, ராஜன்! நான் பம்பாய்க்கெல்லாம் வரலே. வயசானவனை அங்கெல்லாம் கட்டி இழுக்காதே. நீங்க பேஷாய்ப் போய் வாங்கோ... என்னை மட்டும் நான் முன்னே ஒரு தடவை சொன்னேனே, திருநெல்வேலி பக்கத்தில் சின்ன வயசில் திரிந்து விளையாடின ஊர்னு, ஞாபகமிருக்கா? கரும்பூர்தான். அங்கே ஒரு கிருஷ்ணன் கோயில் இருக்கு. கையில் புல்லாங்குழலைவைச்சிண்டு, மூன்றடி உயரத்தில் அந்த ஸ்ரீவேணுகோபாலனைக் காணக் கண் லட்சம் வேண்டும். என்னவோ கொஞ்ச நாளாவே எனக்கு அந்த ஊருக்குப் போய், பகவானை தரிசிக்கணும்னு தோணிடுத்து. ராஜன்! ஒரு நூறு ரூபாய் கொடுத்துடு. நான் போயிட்டு என் ஆசையை நிறைவேத்திட்டு வந்துடறேன்.''

அன்றைக்கு ஆபீஸிலிருந்து தாமதமாக வந்த ராஜன் நடுக்கூடத்தில் ஃபானிற்குக் கீழ் கூடை நாற்காலியில் உட்கார்ந்தான். சுற்றிலும் வட்டம் போட்டனர் மனைவியும், மக்களும்.

எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த ராஜனிடம், "என்ன ஆச்சு இன்னிக்கு உங்க ஆபீசில்? வந்ததிலிருந்து சுரத்தே இல்லாம இருக்கேளே?'' என்று கேட்டாள் பங்கஜம்.

"என்னத்தைச் சொல்லி என்ன ஆகப் போறது? எல்லாத்துக்கும் அதிர்ஷ்டமும் வேணும். திறமை ஒண்ணை மட்டும் நம்பி இந்த உலகத்தில் முன்னுக்கு வந்துட முடியாதுங்கிறதை என் முப்பது வருஷ ஆபீஸ் அனுபவத்துல புரிஞ்சிண்டேன். இந்த வருஷம் கண்டிப்பாய் எனக்குத்தான் செக்ஷன் ஆபீஸராய் பிரமோஷன் கிடைக்கப் போறதுன்னு ரொம்பவும் எதிர்பார்த்தேன். இன்னிக்கு மத்தியானம் ஆபீஸில் மானேஜர் என்னைத்தான் கூப்பிடப் போறார், விஷயத்தைச் சொல்லிப் பாராட்டப் போறார்னு காத்துக் கொண்டிருக்கிறேன். திடீர்னு செந்தில் நாயகம் என் முன்னாடி வந்து தனக்கு அந்த பிரமோஷன் கிடைத்திருப்பதாய்ச் சொன்னதும் அதிர்ந்து போயிட்டேன். ஐம்பது வயசாகியும் இன்னிக்கும் கணக்கு சரிவர 'டாலி' பண்ணத் தெரியாத செந்தில் நாயகத்துக்கே அதை நம்ப முடியலேயோ என்னவோ மனுஷன் அசடு வழிந்தார்.... எல்லாம் பாலிடிக்ஸ்! பாலிடிக்ஸ் விளையாடாத இடமே இல்லே.''

ராஜன் திடீரென்று குரலில் உஷ்ணம் ஏற, கண் சிவக்கக் கத்தி முடித்தான். எல்லோருமே சட்டென அமைதியாய், சோகமாய் உட்கார்ந்திருந்த அந்தச் சூழ்நிலையில் தாமோதரன் நுழைந்தார்.

"ராஜன்! எனக்கு ஒரு நூறு ரூபாய் கொடு. கரும்பூர் போய் ஸ்ரீவேணுகோபாலனைப் பார்த்துட்டு வரணும்'' என்றார். அவர் குரலில் இருந்த அழுத்தமும், அவசரமும் பங்கஜத்திற்கு எரிச்சலை மூட்டி இருக்க வேண்டும். கடுகடுவென முகத்தை மாற்றிக் கொண்டு, "கரும்பூராம்! ஸ்ரீவேணுகோபாலனாம்! கிழத்துக்கு ரொம்பத்தான் தெனவெட்டு!'' என்று பெண்களிடம் முணுமுணுத்தாள்.

"கரும்பூரா? எங்கே இருக்கு?'' என்ற ராஜனின் கேள்வியில் அலுப்பும், சலிப்பும் மிகுந்திருந்தன.

தாமோதரன் உடனேயே உற்சாகமாய்க் கைகளை ஆட்டிக் கொண்டு பதில் சொல்லத் தொடங்கிவிட்டார். "திருநெல்வேலி பக்கத்துல ஒரு சின்ன கிராமம்தான் கரும்பூர். மருந்துக்குக் கூட கரும்பு விளையாத அந்த ஊரில் தென்னையும், வாழையும் பச்சைப் பசேல்னு செழிப்பாய் இருக்கும். நான் பதினைஞ்சி வயசு வரைக்கும் அந்த ஊரில் அத்தை வீட்டில் இருந்துதான் படிச்சேன். அந்த ஊர் வாய்க்காலும், கோவிலும்தான் என்னை வளர்த்த இடங்கள். பள்ளிக்கூடம் விட்டா, விக்கிரமன் வாய்க்கால்... இல்லேன்னா அந்த ஸ்ரீவேணுகோபாலன் சந்நிதி! ராஜன்! அந்த ஸ்ரீவேணுகோபாலன் ரொம்ப அழகான விக்கிரகம். மூக்கும், முழியும் செதுக்கி வச்ச மாதிரி இருக்கும். மூன்றடிக்கு மூன்றடியில் ஐம்பொன் உலோகம். புல்லாங்குழல் மட்டும் சொக்கத் தங்கம்னு அத்தை சொல்வா. சின்னப் பையனா இருக்கிறப்ப, நான்தான் அந்தக் கோயில் நந்தவனத்துப் பூவெல்லாம் பறிச்சிக் கொடுப்பேன். உறியடி நடக்கும் பாரு, அன்னிக்கு.....''

"சரி.... சரி.... வள, வளன்னு பேசிட்டே போகாதீங்க. நான் ஏதோ கரும்பூர் ஸ்ரீவேணுகோபாலன்னு சொன்னதும் உங்க பழைய ஸ்நேகிதரோன்னு நினைச்சேன்......'' என்று சட்டென குறுக்கிட்டு அப்பாவின் வாயை அடைத்தான் பிள்ளை.

PHILIPS

பிலிப்ஸ்

கேட்டீர்களா முற்றும் புதியது ?

பிலிப்ஸ் டூ-இன்-ஒன்களின்
வெகு நேர்த்தியான ஒலி இன்பம்.
ஸ்டீரியோ மற்றும் மோனோ.
எழிலோங்கும் வடிவம்,
இவற்றின் விசாலமான அணி வகுப்பு.
கண்கவர் டிசைன், ஒலித்திறனிலும்
இயங்குவதிலும் சர்வதேசத்
தரத்தை வழங்குபவை.
இவற்றுக்கும் பின்பலமாக நாடெங்கும்
பரவலாக உள்ள ஸர்விஸ் வசதி.



D 8334 ரூ.3400/*-


D 8248 ரூ.3150/-*



AR 538 ரூ.2200/-;*

AR 448 ரூ.1800/-*

AR 343 ரூ.1450/-*



AR 243 ரூ.1300/-*

AR 153 ரூ.1195/-*

AR 151 ரூ.1095/-*

AR 143 ரூ.1025/-*

நாங்கள் வழங்குபவை தேர்வுக்குச் சிறந்தவை.

*எக்ஸைஸ் வரி உள்பட. தல வரிகள் தனி. லைசென்ஸ் தேவை இல்லை.

பிலிப்ஸ்–ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

CLARION/B/P/127/203TM



"என் மனைவி, நான் ஒரு வேலையைச் செய்து முடிச்சுட்டு வரத்துக்குள்ள அவளும் ஒரு வேலையைச் செய்து முடிச்சுட்டு வந்துடுவாள்..."

"அப்படியா?"

"ஆமா, நான் ரேஷன் சாமான் வாங்கி வரத்துக்குள்ள அவ மாட்னி ஷோ பார்த்துட்டு வந்துடுவாள்!"

"நான்கூட அந்த ஸ்ரீவேணுகோபாலனுக்கு, உங்கப்பா ஏதாவது அந் நாளில் கடன் கிடன் கொடுத்து வைச்சிருக்கிறாரோ, அதைத் திருப்பி வாங்கிச் சம்சாரி பிள்ளைக் குத்தரப்போறதாய்ச் சொல்லப்போகிறாரோன்னு நினைச்சேன்...." குத்திக் காட்டினாள் பங்கஜம்.

ராஜன், நாற்காலியை விட்டு எழுந்திருந்தான். பிறகு சொன்னான், "அப்பா! எனக்கு மனசே சரியில்லே.... நீங்க கரும்பூரும் போக வேண்டாம்... எறும்பூரும் போக வேண்டாம்."

"ராஜன்! அப்படிச் சொல்லிடாதேப்பா... உடம்பில் சக்தி இருக்கறப்ப நான் போனால் தான்.... தயவு பண்ணி ஒரு நூறு ரூபாய் கொடேன்...." கெஞ்சினார் தாமோதரன்.

"இவர் அடம்பிடிச்சா நான் என்ன உடனே அனுப்பித் தந்துடப் போறேனா? யார் கையில இங்கே பணம் கொட்டிக் கிடக்கு? நான் என்ன பெரிய செக்ஷன் ஆபீஸரா மாசம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்க, இல்லே என் அப்பாதான் பெரிய கலெக்டராயிருந்து ரிடையர் ஆனவரா? எல்லாரும் ஒழுங்காய் ஒரு மூலையில் உட்கார்ந்து கிடங்க..."

ராஜன் ஆவேசம் வந்தவன் போல் கத்தவும், தாமோதரன் 'கப்' என்று அடங்கிப் போனார். ஏதோ பேச எழுந்த நாக்கு சுருண்டு கொண்டது.

பிறகு அவர் கரும்பூரையும், ஸ்ரீவேணு கோபாலனையும் பற்றி யாரிடமும் வாய் திறப்பதே இல்லே.... ராத்திரி கண்ணை மூடிக் கொண்டு படுத்தாரானால் சின்ன வயசு தாமோதரன் கரும்பூர் விக்கிரமன் வாய்க்காலே இரண்டு பண்ணுவான். ஸ்ரீவேணு கோபாலனுக்குத் துளசியும், மருவும் சேர்த்து மாலைகட்டி சேவிப்பான். "வங்கக் கடல் கடந்த மாதவனைக் கேசவனை......"

"அப்பா! அப்பா!"

வெளியே போயிருந்த ராஜன், வீட்டிற்குள் நுழைந்ததும் தாமோதரனை அழைத்த அவசரம், பட்சணம் செய்து கொண்டிருந்த பங்கஜத்தையே கூடத்திற்கு விரட்டியது. சூட்கேஸில் துணிகளை அடைத்துக்கொண்டிருந்த ஆஷாவும், ரம்யாவும் கூட அறையிலிருந்தபடியே கூடத்தை நோட்டம் விட்டனர்.

தாமோதரன், நந்து பம்பாய் பிரயாணம் பற்றி சொன்னதிலிருந்தே பிள்ளையை எதிர்பார்த்துக் காத்திருந்ததால், ராஜனை நோக்கி வேகமாய் நடந்தவர், அவன் அருகே போனதும், "நான் பம்பாய்க்கு வரலேப்பா" என்றார்.

"பம்பாய்க்கா? நீங்களா? உங்களை யார் அழைத்துப் போறதாய் சொன்னது?

அசடு வழியாதீங்கோ.

உங்க விஷயமாத்தான் அடுத்த தெரு ஜெயராமன் வீடுவரை போயிட்டு வந்தேன். நாங்க எல்லாரும் பம்பாய் போயிட்டுத் திரும்பி வர்ர வரையிலும் நீங்க அங்கே தங்கிக் கொள்ள அனுமதி கேட்டேன். ஜெயராமனும் அவர் மனைவியும் ஏதோ கல்யாணத்துக்காக இன்னிக்கு மெட்ராஸ் போறாளாம். வர, ஒரு வாரம் ஆகுமாம். ஆனா அவர் பிள்ளை முரளியும், அவன் ஸ்நேகிதன் ஒருத்தன், வெளியூரிலிருந்து வந்தவனும், இரண்டு பேரும் இருக்கா. சமையக்காரன் காலமே வந்து சமைச்சிவைச்சிட்டுப்போயிடுவானும். நீங்க மூட்டை முடிச்சை கட்டிண்டு ஒரு வாரத்துக்கு ஜெயராமன் வீட்டில் இருக்கணும்."

தாமோதரன் பிரமித்தவராய் தயக்கமுடன், "எதுக்கு நான் பிறத்தியார் வீட்டில் போய் ஒரு வாரத்துக்கு.....?" என இழுத்தார்.

"பிறத்தியார் வீடு என்ன? ஜெயராமன் எனக்கு நல்ல ஸ்நேகிதர்! உங்ககிட்ட ஒரு காலத்தில் படிச்ச மாணவர். அவர் பிள்ளை முரளியையும் உங்களுக்குத் தெரியும். அப்புறம் என்ன, அப்பா?"

"வயசான காலத்தில் தனியே உங்களை விட்டுட்டு நாங்க 'டூர்' போக முடியாது. சீக்கிரம் உங்க மூட்டையைக் கட்டுங்கோ. முரளி, தன் வெளியூர் ஸ்நேகிதனோட எங்கேயோ போகணுமாம். அதுக்குள்ள உங்களை நான் அங்கே கொண்டு விடணும்."

இந்த அதிர்ச்சியில் தாமோதரனுக்குக் கரும்பூரும், ஸ்ரீவேணுகோபாலனும் சுத்தமாய் மறந்தே போய்விட்டது.

ஆயிற்று, ஜெயராமன் வீட்டிற்கு தாமோதரன் வந்து ஐந்தாறு நாட்களாகிவிட்டன. ராஜன் வீடு மாதிரி அது சிறியது இல்லே. மாடியில் மூன்று அறையும், கீழே மூன்று அறையுமாய் மொசைக் தளத்துடன் பெரிய வீடுதான். தாமோதரனுக்குக் கீழ் அறை கொடுக்கப்பட்டிருந்தது. மாடி அறையில் தனது நண்பனோடு இருந்தாலும் முரளி அவ்வப்போது வந்து தாமோதரனை விசாரித்துக் கொள்வான். ஆனால் முரளியும், அந்த நண்பனும் பெரும்பாலும் வீட்டிலேயே இல்லா

மல் காரில் ஊர் சுற்றிவிட்டு இரவு வீடு திரும்புவதுதான் தாமோதரனுக்கு வியப்பாக இருக்கும். ஒரு நாளைப் பார்த்தாற்போல் எங்கேதான் போகிறார்களோ?

அன்றைக்கு மணி பன்னிரண்டாகியும் தாமோதரனுக்குத் தூக்கமே வரவில்லை. வெளியே போன முரளியும், அவன் ஸ்நேகிதனும் வேறு வீடு திரும்பாதது கவலையாக இருக்கவே படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். ஹால் கடிகாரம் ஒரு மணி அடித்த போது கவலை மேலிட அறை ஜன்னலருகே வந்து நின்று கொண்டார்.

திடீரென காம்பவுண்டுக்கு வெளியே கார் சத்தம் கேட்டது. தாமோதரன் கண்ணை இடுக்கி ஊன்றிப் பார்த்தார். முரளிதான். அவனும், அந்த ஸ்நேகிதப் பிள்ளையும் காரை விட்டுப் பரபரவென்று கீழே இறங்கினர். முரளியின் கையில் ஏதோ ஒரு பெரிய சுமை இருக்க வேண்டும். அதைத் தூக்க அவன் சிரமப்படுவது போல் தெரிந்தது. சட்டென்று அவன் ஸ்நேகிதன் தானும் ஒரு கை கொடுத்தான். இருவரும் வேகமாய் நடந்து வாசல் கதவருகே வந்து நின்றனர். கதவு ஆட்டோமாடிக் லாக் ஆதலால் சாவி முரளியிடம் எப்போதும் இருக்கும்.

கதவில் சாவியைப் பொருத்தியபடி முரளி சொன்னான். "நல்லவேளை, தாமு தாத்தா தூங்கிக் கொண்டிருக்கிறார். ரூமில் லைட் எரியவில்லை!"

கதவை அடைத்துவிட்டு இருவரும் உள்ளே வந்தனர். கையிலிருந்த சுமையைக் காட்டி, "எப்படி மாடிக்கு இதைக் கொண்டு போகிறது?" என்றான் முரளி.

"எப்படியாவது கொண்டு போகணும். மணி வேற ரொம்ப ஆச்சு. திட்டமிட்டபடி நடந்திருந்தால் ஒரு மணி சாவகாசம் முன்னாடியே வந்திருக்கணும். கடைசி நேரத்தில் கரும்பூர் தர்மகர்த்தா சந்தேகப்பட்டு நம்மைப் பின் தொடர்ந்துட்டான்."

கரும்பூர் என்றதும் தாமோதரனுக்கு உடம்பு சிலிர்த்தது. ஓசைப்படாமல் அறைக் கதவுக்குப் பின் பதுங்கி நின்று அரை குறை இருட்டில், வராந்தாவில் இருந்த அவர்களைக் கவனித்தார். இருவருமே பரபரப்பாய்க் காணப்பட்டனர். முரளிக்கு வியர்த்துக் கொட்டியிருக்க வேண்டும். மாற்றி மாற்றி முழங்கைகளால் துடைத்தபடி, "சரி, நீதான் அந்தத் தர்மகர்த்தா பயலைத் தலையில் கழியால் அடிச்சி கவனிச்சிட்டியே, ஆறு காலம் பறதான் எழுந்திருப்பான்" என்றான்.

"எப்படியோ கரும்பூரிலிருந்து காரில் இந்த ஐம்பொன் விக்கிரகத்தைக் கடத்தி வந்து விட்டோம். இன்னும் இதை ஆஸ்திரேலியா ஒரு கோடி தள்ளிட்டுப் போகணும். சும்மாவா? இந்த ஸ்ரீவேணுகோபாலனை அஞ்சு லட்சத்துக்கு இல்லை விலை பேசி இருக்கேன்?"

ஸ்ரீவேணுகோபாலன்! பெயர் கேட்டதும் தாமோதரனுக்குக் கண் சுரந்தது.

தாமோதரன் நெஞ்சு கசிந்து நின்றபோது திடீரென வாசலில் ஜீப் சத்தம் கேட்டது.

"ஐயோ! போலீஸ்! நினைச்சேன்டா. அந்த தர்மகர்த்தா பயல் வேலைதான்...." முரளி அலறினான்.

இருவரும் அவசர அவசரமாய் விக்கிரகத்தைத் தூக்கிக்கொண்டு சரேலென தாமோதரன் இருந்த அறைக்கு வந்தனர். இருட்டில் கதவுக்குப் பின் இத்தனையும் கவனித்துக் கொண்டு தாமோதரன் நிற்பதை அறியாதவர்களாய் விக்கிரகத்தைக் கட்டிலுக்கடியில் தள்ளிவிட்டுத் தடதடவென மாடி ஏறிப் போனார்கள்.

இத்தனையும் ஒரு கணம்தான். அதற்குள் வாசல்கதவு படபடவென தட்டப்பட, தாமோதரன் தயக்கமின்றிப் போய்க் கதவைத் திறந்தார்.

"வாங்க இன்ஸ்பெக்டர்! கரும்பூரிலிருந்து கடத்தி வந்திருக்கும் விக்கிரகம் இதோ இந்த ரூமில் கட்டிலுக்கடியில் இருக்கு. கடத்தியவர்கள் மாடிமேல் இருக்கிறார்கள்."

சற்றும் பதற்றமின்றித் தாமோதரன் இப்படிச் சொல்லவும், அதிசயமாய் அவரைப் பார்த்த இன்ஸ்பெக்டர் அவர் கைகாட்டிய அறைக்குள் போனார். விளக்கைப் போட்டுக் கட்டிலுக்கடியில் குனிந்தார்.

மாடிக்கு ஓடிப்போன இரண்டு போலீஸ்காரர்களும் முரளியையும், அந்த ஸ்நேகிதனையும் கழுத்தில் கைவைத்து நெம்பித் தள்ளிக் கொண்டு படி இறங்கினர். "ஓடப் பார்க்கிறாங்க, திருட்டுப் பசங்க...."

மீட்கப்பட்ட விக்கிரகம் நடு ஹாலிற்குக் கொண்டு வரப்பட்டது. தாமோதரன் ஹாலின் நான்கு பக்க விளக்குகளையும் போட்டார். வெளிச்சத்தில் ஸ்ரீவேணுகோபாலனை வேண்டிய மட்டும் கண்டு சேவித்தார்.

தாமோதரனுக்குக் கண் மட்டுமா நிறைந்தது?



"எங்க வகுப்பில் உள்ள பசங்க எல்லோரும் ஒருத்தருக்கொருத்தர் கொடுத்து வாங்கிக்கிட்டு ஒத்துமையா இருப்போம்..."

"அப்படியா? உனக்கு யார் என்ன கொடுத்தாங்க, நீ யாருக்கு என்ன கொடுத்தே?"

"ரவி எனக்கு 'ஜலதோஷத்தைக் கொடுத்தான். நான் அவனுக்கு 'மதருஸ் ஐ'யைக் கொடுத்தேன்!"


Godrej தருகிறது
புதிய
பெஸ்டோ
கிலோ ரூ. 7.20*
இந்த விலையில் கிடைக்க-
கூடிய ஒரே உயர்ரக
ப்ளூ டிடர்ஜென்ட் பவுடர்
Godrej
Besto
Blue detergent powder
MADE IN INDIA BY:
GODREJ SOAPS LIMITED
VIKHROLI, BOMBAY 400 079.
NET WT. WHEN
PACKED 1000 G
PACKED IN
MAX. PRICE RS. 7·20
LOCAL TAXES EXTRA
• அதிக பளபளப்பு—பெஸ்டோவின் விசேஷ
ஃபார்முலா துணிகளுக்குத் தருகிறது அதிக பளபளப்பு,
அதிக வெண்மை.
• அதிக மென்மை—கடுமையான வாஷிங் பவுடர்களைப்
போல் பெஸ்டோ துணிகளுக்குக் கெடுதல்
செய்வதில்லை. மேலும் உங்கள் கைகளை மென்மையாக
வைக்கிறது.
• அதிக வெண்மை—துவைக்கத் துவைக்க துணிகள்
பழுப்படைவதில்லை. ஆகவே வெளுக்க வெளுக்க
வெண்மை நீடித்து நிலைக்கும்.
பெஸ்டோ—ஒரு கிலோவுக்கு ரூ. 7.20 மட்டுமே!
*உள்ளூர் வரிகள் தனி.
Godrej
புதிய
பெஸ்டோ
கோத்ரெஜ் பெஸ்டோ
ப்ளூ டிடர்ஜென்ட் பவுடர்
உயர் தரத்திற்கும் சிக்கனத்திற்கும்
CHAITRA-B-G-276 TAM RR

சலிப்பு அறியாதவர்

டெக்கான் ஹெரால்ட், இந்தியன் எக்ஸ் பிரஸ் (பங்களூர் பதிப்பு) ஆகியவற்றில் **'REGRET IYER'** என்ற பெயரில் புகைப் படங்களும் சிறு கார்ட்டூன்களும் வருவ துண்டு. இந்தப் பெயரின் விசேஷத்தால் கவரப்பட்டு இவரைப் பற்றி விசாரித்த போது:

சென்ற இரண்டு தலைமுறைகளாக கர்நாடகத்தில் வாழ்ந்து வரும் தமிழ் ஐயர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளைஞரே இவர். பல சஞ்சிகைகளுக் கும் படம், கார்ட்டூன் துணுக்குகள் அனுப்பி, பிரசுரமாகாமல் திருப்பி யனுப்பப்பட்ட நூற்றுக்கணக்கான **Regret Note** களைப் பார்த்துச் சலிப்படை யாமல் தம் பெயரையே **Regret Iyer** என்று மாற்றிக் கொண்டு தம் வசமுள்ள நூற்றுக்கணக்கான **Regret Note** களை வைத்து ஒரு கண்காட்சியும் நடத்தியுள்ளார்.

— கி. கண்ணன்.



முதல்வர் படித்த கடிதம்



பெங்களூரிலுள்ள பச
தான் கர்நாடக முதலமைச்சர் ெ
யின் தொகுதி: அண்மையில் ஒ
வில் கலந்து கொள்வதற்கா
பகுதிக்குப் போனார் ஹெக்டே.
பேச ஆரம்பிப்பதற்குச் சில வி
இருக்கும்போது ஒரு வாலிபன் அ
ஒரு காகிதத்தைக் கொடுத்தான்
இருந்த முதல் வரி: "இதை
படியுங்கள்." முதலமைச்சர் அ
தத்தில் எழுதப்பட்டிருந்ததை
படித்தார்: "நீங்கள் எந்த ரோ
யாக இந்த இடத்துக்கு வந்தீ
அது எப்போதும் மோசமான ர
இருக்கும்! உங்கள் வருகை
னிட்டு அவசர அவசரமாக அ
ரிப்பேர்கள் செய்தார்கள். அத
கள் தினமும் இந்த ரோடு வ
வாருங்கள்!"

முதலமைச்சர் இந்த விஷ
கவனிப்பதாகக் கூறினார்.

— அனிதா ராமச்ச

"அப்பா! பஸ்ஸில் ஏறினதும் டிக் கெட் வாங்கலாம்னு பார்த்தா நீங்க கொடுத்த இரண்டு ரூபாயைக் காணோம். எங்கேயோ தொலைஞ்சு போச்சு!"


"அது போகட்டும். நீ வீட்டுக்கு எப் படி வந்து சேர்ந்தே?"

"கண்டக்டர் இரக்கப்பட்டு ஓசியில் டிக்கெட் கொடுத்தார்......."

"அதான் வீடு வந்து சேர்ந்துட்டியே, இன்னும் ஏன் அழறே?"

"கண்டக்டர் இரக்கப்பட்டு மீதிச் சில்லறை கொடுக்கலையே!"





பு

ஏன் இந்த அதிசயங்கள்?

சென்ற ஆகஸ்டு மாதத்தில் ஒரு வாரத் துக்கு பெங்களூரில் பல அதிசயங்கள்!


பஸ்களில் நிற்க வேண்டிய அவ சியமே வரவில்லை. எல்லோருக்கும் உட்காரத் தாராளமாக இடம்!


ஆட்டோக்காரர்கள் கூப்பிட்ட இடத் துக்கு வரத் தயாராக இருந்தார்கள். மீட் டர் காட்டிய கட்டணத்தை அப்படியே முகமலர்ச்சியோடு வாங்கிக் கொண் டார்கள்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும்

வகுப்பறை
செண்ட் இ
கர்நாடக
மின்சாரத்
ஏன் இ
பெங்களூ
தொழிலாள
வேலை நிறு
ஒரு வாரம்

ண்குடி
ழக்டே
ந விழா
அந்த
. அவர்
ருடிகள்
வரிடம்
அதில்
ரக்கப்
ங்காகி
ரக்கப்
டு வழி
களோ
லையில்
முன்
ல் சில
றல் நீங்
ழியாக
த்தைக்
திரன்.





...கப்படம்: அ. குமார்.

...கள் ஃபுல்! யாரும் ஆப்
...ல்லை.
...மின்சார இலாகா நிறைய
...தைச் சேமித்தது!
...த அதிசயங்கள்?
...ளூரில் உள்ள தியேட்டர்
...ர்கள் ஊதிய உயர்வு கேட்டு
...தம் செய்ததால் நகரெங்கும்
...சினிமா இல்லை!

— அனிதா ராமச்சந்திரன்.

அடிமைக் குழந்தைகள்

பெங்களூரில் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கும் பல சிறுவர்கள் சில போலி சன்னியாசிகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்கள்! இந்த சிறுவர்கள் அந்த சன்னியாசிகளால் கடத்தப்படுகிறார்கள். பிறகு அவர்களின் உடல் ஊனமாக்கப்படுகிறது. பிச்சையெடுக்க அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் தினமும் 20 முதல் 25 ரூபாய் வரை சம்பாதிக்கிறார்கள். அதில் அவர்களுக்கு 2 ரூபாயும் ஒரு வேளை சாப்பாடும் மட்டும் கிடைக்கும். மீதி அந்த சன்னியாசிக்கு! இவர்கள் தப்ப முயன்றால் சித்திரவதை! இரவில் இந்த சிறுவர்கள் பாழடைந்த கட்டிடங்களில் வைக்கப்படுகிறார்கள். அடிக்கடி இடம் மாற்றப்படுவார்கள். இவர்களை ஆட்டிப் படைக்கும் போலி சன்னியாசிகள் ஆடம்பரமாக வாழ்கிறார்கள். பங்களாவில் வாழ்பவர்களும் உண்டு!

படத்தில் இருக்கும் ராமச்சந்திரா என்ற சிறுவன் பதினொன்று மாதங்களுக்கு முன்பு பங்களூர் பஸ் நிலையத்திலிருந்து கடத்தப்பட்டான். இப்போது அவன் கண் குருடு. ஒரு சபரிமலை பக்தரின் உதவியால் அடிமைவாழ்விலிருந்து தப்பி பெற்றோர்களிடம் போய்ச் சேர்த்துவிட்டான். அவன் சொன்ன விவரங்கள் தான் இவை.

டெக்கான் ஹெரால்டிலிருந்து.

— அனிதா ராமச்சந்திரன்.



மௌனப் புயல்

26

குருசரன்ஸிங் தன்னைச் சுற்றிக் கலவரத்துடன் பார்த்தார். கண்ணுக்கெட்டிய தூரம் வரை நீண்டிருந்த மக்கள் திரளில் எங்கு திரும்பினாலும் கேசரி நிறத் தலைப்பாகைகள். அங்கங்கே சில நீலத் தலைப்பாகைகளும் தெரிந்தன.

மஞ்சி ஸாஹூப் நிரம்பி வழிந்தது. சிறையிலிருந்து விடுதலையாகி வந்திருக்கும் அகாலித் தலைவர்களுக்கு ஏற்பாடாகியிருந்த வரவேற்பு ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. மேடை முழுவதும் அடைத்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. எத்தனை பேர்களை அமர்த்தப் போகிறார்கள் என்று குருசரன் திகைத்தார்.

அவர் துயரத்துடன் தன்னைச் சுற்றிப் பார்த்தார். கூட்டத்தில் நிறைய சிறுவர்கள் இருப்பதைக் கவனித்தார் — கேசரிக் கடல் — இதெல்லாம் இப்பொழுது பொங்கி எழுந்தால் யாரால் கட்டுப்படுத்த முடியும்? அதனுடைய ஆர்ப்பரிப்பு எப்படிப்பட்டது என்று அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இது ஒரு கொந்தளிக்கும் நெருப்புக் கடல். தனது ஆகுதியில் எதிரி என்று நினைக்கும் ஆளை விழுங்கத் தயாராயிருக்கும் அக்னிக் கடல். இதன் உக்கிரம் எப்படிப்பட்டது என்று சிறையிலிருந்து வந்திருக்கும் லோங்கோவாலுக்கும் அவரது சகாக்களுக்கும் தெரியுமா?

இப்படிப்பட்ட மனநிலை கொண்ட ஜனங்களை லோங்கோவால் எப்படிச் சமாளிக்கப் போகிறார்?

கூட்டம் பொறுமையில்லாமல் சலசலத்துக் கொண்டிருந்தது. வர வேண்டியவர்கள் இன்னும் வரக் காணோம்.

மேடைமேல் ஒலிபெருக்கியின் எதிரில் ஒரு கேசரித் தலை இளைஞன் வந்து நின்றான்.

''ஸந்த் லோங்கோவால்ஜீயும் மற்றவர்களும் வருவதற்குச் சற்றுத் தாமதமாகிறது. நீங்கள் கொஞ்சம் பொறுமையோடு இருக்க வேண்டும். இப்பொழுது, 'தண்டி'கள் (நாட்டுப் பாடல் பாடுபவர்) சில 'வார்'களைப் (வீரர்களைப் புகழும் கவிதைப் பாடல்கள்) பாடுவார்கள்!''

கேசரிக் கடல் சந்தோஷமாக ஆர்ப்பரித்தது.

'தண்டி'களும் கேசரித் தலையாக நின்றார்கள். பஞ்சாபிய மண்ணுக்கே உரித்தான உற்சாகத்துடன் பாட ஆரம்பித்தார்கள். இசையை விட வார்த்தைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட பாடல்களின் வார்த்தைகள் விரிய விரியக் குருசரன்ஸிங் திடுக்கிட்டார். கவிதையின் சொற்கள் மகா மட்டமாக இருந்தன. அர்த்தம் அனர்த்தத்தை விளைவிக்கும்படியாக இருந்தது.

'சீக்கியர்களுக்கும் அகால்தக்துக்கும் நாசம் விளைவித்த மகா பாபியான மனுஷியைக் கொன்று சீக்கிய மானத்தைக் காப்பாற்றிய பியாந்த் ஸிங்குக்கும், ஸத்வந்த் ஸிங்குக்கும் புகழ் மாலைகளை அம்ருத்ஸர் எல்லை வரைக் கேட்கும்படியான ஒலிபெருக்கி ஓசையில் தண்டிகள் குஷாலாகப் பாடினார்கள். கூட்டம் 'ஆகா'காரத்துடன் ஆமோதித்தது.

குருசரன்ஸிங் கலவரத்துடன் தம் அருகில் உட்கார்ந்திருந்த அந்த இளைசைப் பார்த்தார். அந்த முகம் உற்சாகத்தில் பளபளத்ததைக் கண்டு வேதனையுடன் முகத்தைத் திருப்பினார்.

மடையர்கள்! மடையர்கள்! இந்தப் பைத்தியக்காரத் தனத்தை யாரால் அடக்க முடியும்? முன்பு இதேமாதிரி ஒரு கூட்டத்தில் அமர்ந்திருக்கையில் பிந்திரன்வாலேயையே தாம் எதிர்த்துப் பேசியது நினைவுக்கு வந்தது. அப்பொழுது அம்ரீக் ஸிங் இருந்தான். அவருக்குப் பாதுகாப்பு அளிக்க... இப்பொழுது வாயைத் திறந்தால், 'இது என்ன முட்டாள்தனம்' என்று அதட்டிக் கேட்டால், 'இவன் ஒரு மதவிரோதி. மத்திய அரசின் காலை நக்குபவன் என்று கூட்டத்தின் நட்ட நடுவில் நம்மை மேடைக்கேசரிகள் கண்ட துண்டமாக வெட்டத் தாமதிக்கமாட்டார்கள் —

அது மகா நியாயமான ஒரு நிகழ்ச்சியாகக் கூட்டமும் எடுத்துக் கொள்ளும், அல்லது கண்டிக்கப் பயப்படும்...

பாட்டு முடிகிறவரை அவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தலைகுனிந்தபடி அமர்ந்திருந்தார்.

முன்பெல்லாம் கொலைக் குற்றம் புரிந்தவனைச் சீக்கிய சமூகமே ஒதுக்கி வைக்கும். பாவச் செயலாகக் கருதும். இப்பொழுது கொலையாளிகள் எல்லாம் ஹீரோக்கள். மதத்திற்காக இவ்வளவு பேர்களைக் கொன்றேன் என்று பகிரங்கமாக நாற்சந்தியில் ஒருத்தன் பெருமையடித்துக் கொண்டாலும் அவனுக்குப் பாதுகாப்பு அளிக்கச் சமூகம் தயாராயிருக்கிறது. இதற்கு ஆதரவு தராவிட்

வாஸந்தி

டால் தன் தலைக்கு ஆபத்து என்கிற பயம் தான் சமூகத்தின் இந்த கண்மூடித் தனத் துக்குக் காரணம் என்று அவர் நினைத்துக் கொண்டார். நேற்று ஒரு பஞ்சாபி புதுக் கவிதை படித்தது நினைவுக்கு வந்தது.

''இது எல்லா மரத்தையும் எல்லா
மலரையும் பஸ்மமாக்கும்;
தகிக்கும் இந்தக் காடு நிச்சயமாய்
எரித்துவிடும்,
கிழவனையும், குமரனையும், மாளிகை
யையும் மண் குடிசையையும்,
இதற்குப் பித்துப் பிடிக்கும்முன் எப்படித்
தடுப்பேன்?
மழை பொழியும் கரிய மேகங்களை
எங்கிருந்து கொண்டு வருவேன்?''

மேடையில் பாட்டு நின்றது. கூட்டத்தில் புதிய சலசலப்பு ஏற்பட்டது.

லோங்கோவாலும் மற்றவர்களும் கூட் டத்தைப் பார்த்துக் கைகூப்பியபடி மேடைக் குச் சென்று அமர்ந்தார்கள்.

''ஸத் ஸ்ரீ அகால்'' என்ற கோஷம் வானை நோக்கி எழுந்தது.

மூலையில்ஒருகும்பல்''காலிஸ்தான் ஜிந்தா பாத்!'' என்று முழங்கியது. அதைத் தொடர்ந்து ஜனத்திரளில் அங்கும் இங்கு மாக 'காலிஸ்தான்' குரல்கள் எழும்பின. குருசரன் ஸிங்கின் அருகில் அமர்ந்திருந்த சிறுவன் எழுந்து நின்று கையை உயரத் தூக்கி ''காலிஸ்தான் ஜிந்தாபாத்'' என்றான் கீச்சுக் குரலில்.

சுற்றிலும் இருந்த தலைகள் திரும்பிப் பார்த்து மெலிதாகப் புன்னகை புரிந்தன.

குருசரன் ஸிங்கிற்குப் பதைத்துப் போயிற்று. மேடையில் இருந்த லோங்கோ வாலின் முகத்தில் எந்த உணர்ச்சியும் தெரிய வில்லை. காலிஸ்தான் கோஷம்வந்ததிசையை நோக்கி நிறுத்துங்கள் என்கிறாற்போல் கையை உயர்த்தினார்.

கேசரித் தலைகளில் முக்கியப்பட்டவர்கள்



ஒவ்வொருத்தராய் மைக்கின் முன் நின்று பேச ஆரம்பித்தார்கள்.

மேடையில் உட்கார்ந்திருந்தவர்களைப் பற்றி ஒரு வார்த்தை இல்லை. எடுத்ததுமே சூடாக வந்தன வார்த்தைகள். சமாதானத்துக்கு வழியே இல்லை என்று போர் முரசம் கொட்டின. மத்திய அரசின் அக்கிரமச் செயல்களைப் பிட்டுப் பிட்டு வைத்து அதன் காலை நாம் நக்க வேண்டுமா என்று சூள் உரைத்தன. கூட்டம் மொத்தத்தில் விக்கித்துப் போய் உட்கார்ந்திருந்தாற்போல் குருசரன்ஸிங்கிற்குப் பட்டது. சில பகுதிகளிலிருந்து ஆமோதிக்கும் குரல்கள் எழுந்தன.

ஸந்த் லோங்கோவால் வாயே திறக்காமல் தலையைக் குனிந்தபடி அமர்ந்திருந்தார்.

ஓர் இளைஞன் விசுக்கென்று ஆக்ரோஷத்துடன் மைக்கின் எதிரில் நின்றான். உத்வேகத்துடன் படபடத்தான்.

"இந்த அகாலிகள் என்ன சாதித்தார்கள்? மத்திய அரசைக் கண்டு வாலை ஆட்டும் நாய்கள் அவர்கள்! இந்த நாய்களுக்கு வரவேற்பு என்ன வேண்டிக் கிடக்கிறது?"

தன் கன்னத்தில் யாரோ அறைந்தாற் போல் குருசரன்ஸிங் தடுமாறிப் போனார். இந்த அடாவடித்தனப் பேச்சைக் கண்டிக்க யாருமே இல்லாதது போல, இருந்தும் தைர்யம் இல்லாதது போலக் கூட்டம் வெறும் பார்வையாளனாய் உட்கார்ந்திருந்தது.

அந்த இளைஞனைத் தொடர்ந்து இன்னும் சில இளைஞர்கள் காரசாரமாய் அகாலிகளைத் தாக்கினார்கள். நவம்பர் மாதம் டில்லியில் நடந்த கலவரத்தின் போது சீக்கியர்களைப் பூண்டோடு அழிக்கத் துணிந்த ஹிந்துக்களின் திமிரை விவரமாக விவரித்தார்கள்.

இனிமேல் தன்னால் தாங்க முடியாது என்று குருசரன்ஸிங் எழுந்தார். மேடையிலிருந்த லோங்கோவாலும் மற்ற அகாலிகளும் வாயே திறக்காமல் தலையைக் குனிந்தபடி வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

"எங்க வீட்டிலே கொ. ப. செ. நான் தான்!"

"அப்படியா!"

"ஆமா, என் மனைவி கொடுத்த பணியைச் செய்வது நான்தான்!"

— அருண்.



கோபமும் துக்கமும் அவமானமும் குருசரன்ஸிங்கிற்குப் பொங்கிப் பொங்கி எழுந்தன.

இந்தக் கேசரிக் கடலின் ஆர்ப்பரிப்பு நெஞ்சை முட்டிற்று. மஞ்சி சாஹிப்பிலிருந்து அவர் சிரமப்பட்டு வெளியே வந்தார். பொற்கோவிலின் பரிக்கிரமாவுக்குள் நுழைந்தார். பக்தர்களின் சேவையினால் சலவைக் கல் பிராகாரம் பளபளவென்று சுத்தமாக இருந்தது. பொற்கோவில் மாலை வெயிலில் தகதகவென்று மின்னிற்று. அம்ருதசரோவரம் அமைதியின் சுவரூபமாக அசைந்தது.

இதற்குச் சில நூறு அடிகள் தள்ளி ஒரு பெரிய எரிமலை வெடிக்கிறது என்றால் யார் நம்புவார்கள்? பொய்யான மயக்கத்தைக் கொடுக்கும் இந்த அமைதிக்கு ஏதாவது அர்த்தமுண்டா? இந்த மயக்கத்தைக் காப்பதற்காக எத்தனை பலிகள்! பஞ்சாபை ஆட்கொண்டிருக்கும் வெறுப்பும் விஷமும் எங்கிருந்து ஜனித்தன? அதைத் தணிக்க, சமாதானப்படுத்த 'மழை பொழியும் கரிய மேகங்களை எங்கிருந்து கொண்டு வருவேன்?

அவர் நிராசையுடன் தலையை அசைத்தபடி நடந்தார்.

பஞ்சாபுக்கு இப்போதைக்கு விடிவு காலம் இல்லை. யாதவர்களைப் போல் பஞ்சாபியர்கள் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்ளும் அந்திமக் காலம் வந்துவிட்டது. இருக்கும் சூழலில் தைர்யமாகப் புத்தி எடுத்துச் சொல்ல யாருக்கும் துணிவிருக்கப் போவதில்லை. நான் வெறும் ஒரு நாடகாசிரியன். என் நாடகங்களில்தான் நான் என் எண்ணத்தைப் பிரதிபலிக்க முடியும். என் நாடகத்தின் விஷயத்தைக் கிரகிக்க யாருக்கும் இப்பொழுது பொறுமையில்லை.

* * * * *

கோவிலுக்குள் நுழையாமல் அவர் வெளி வாசலைக் கடந்து தெருவுக்கு வந்தார். தெருக்களில் உற்சாகத்தையும் சிரிப்பையும் பார்த்து எத்தனையோ மாதங்களாகி விட்டன. டில்லியில் நடந்த நவம்பர் கலவரங்களுக்குப் பிறகு ஹிந்துக்கள் சீக்கியர்களுக்குப் பகைவர்களாகவே போய் விட்டார்கள்.

நவம்பர் மாத நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை இப்பவும் அவரால் நம்ப முடியவில்லை. எப்படி அப்படி ஒரு பயங்கரம் நடந்தது? நடக்க அனுமதிக்கப்பட்டது?

அங்கங்கே தெரிந்த ராணுவ போலீஸ் தலைகளையும் கலகலப்பேயில்லாத கடைத் தெருக்களையும் தாண்டி அவர் தம் வீட்டை நோக்கி நடந்தார்.

ஒரு ஃபியர் ஸைக்காஸிஸ் இங்கு அரசியல் உடன்பாடு இல்லாத எல்லாரையும் ஆட்கொண்டிருந்தது. ஒரு பக்கம் ராணுவ, போலீஸின் அத்துமீறல்கள், மறுபக்கம் பயங்கரவாதிகளின் இன்னும் அடங்காத துணிச்சல். முதல் காரணத்தால் எத்தனையோ கள்ளமற்ற சிறுவர்கள் எல்லையைக் கடந்து பாகிஸ்தானுக்கு ஓடிவிட்டார்கள். இன்னும் ஆறே மாதங்களில் பயங்கரவாதிகளாய்த்

உ

ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் துணை



MADURAI
RAJKALA'S SAREES

மதுரை கைத்தறி சேலைகளில்

உத்திரவாதத்திற்கும்,

நீடித்த உழைப்பிற்கும்,

பளபளப்பிற்கும் சிறந்தது

"மதுரை ராஜ்கலா'ஸ் சாரீஸ்"

பேட், வாழைப்பூ, கட்டம்,

வேல்தாரி மற்றும்

புதிய டிசைன்களில்

5.50, 6.40, 7.25, 8.20, 9.20

மீட்டர்களில்

தமிழ்நாடெங்கும் கிடைக்கும்.

சேஷன் அன் கோ

கைத்தறி ஜவுளி வியாபாரம்

48, சௌராஷ்ட்ர கிருஷ்ணன் கோவில் தெரு, மதுரை-625001. போன்: 25538

- ஆத்மால்

ஸ்தாபிதம் 1942 போன் 2379

'சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு'

கும்பகோணம் லலிதா பார்மஸி

(D. L., No - 40)

157, பட்டமங்கலத்தெரு மயிலாடுதுறை PIN. 609001

பிராஞ்ச், 39, ரெங்கனாதன்தெரு தி. நகர்,
சென்னை - 17 போன் No. 441454

105, கச்சேரிரோட், மயிலாப்பூர், சென்னை – 4
போன் No. 73007

'எமது விசேஷ தயாரிப்புகள்'

(1) மதுயஷ்டி தைலம்" கூந்தல் வளர்ச்சிக்கு உதவ"

(2) நீலிபிருங்காமலக தைலம்" அகாலநரை, செம்பட்டை, கேச வரட்சியை போக்கி கூந்தலுக்கு கருமையும் குளிர்ச்சியும் தர

(3) யௌவநீ ரஸாயனம்" ஆண்களுக்கான சிறந்த டானிக்



பம்பாய் சினிமா ரசிகர் சங்கம் அளித்த வரவேற்பில் அமிதாப் பச்சனிடம் கேட்கப்பட்ட கேள்வி:

"சினிமா ஹாலுக்கும் பார்லிமெண்ட் ஹாலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?"

பதில்: "சினிமா ஹாலைவிட பார்லிமெண்ட் ஹாலின் ஏ.ஸி. நன்றாக இருக்கிறது! அங்கு நடக்கும் நிகழ்ச்சிகள் சினிமா நிகழ்ச்சிகளை விடச் சுவையாக இருக்கின்றன!"

— சம்பத்குமாரி.

திரும்பப் போகிறார்கள்...

என் காலம் முடிவதற்குள் பஞ்சாபுக்கு அமைதி வரப் போவதில்லை என்று அவர் தமக்குள் பேசிக் கொண்டார்.

வீட்டில் அவருக்கு யாருடனும் பேசப் பிடிக்கவில்லை. அவர் மனநிலையை உணர்ந்து அவர் மனைவியும் அவர் வாயைக் கிண்டவில்லை. முன்பிருந்த கலகலப்பு இப்பொழுது வீட்டிலும் இல்லை. தங்களுக்குள் பேசிக் கொள்வதற்குக் கூடப் பயம் ஏற்பட்டுப் போய் விட்டது.

இரண்டு நாட்கள் அவர் வெளியில் செல்லவில்லை. யாருடனும் பேசவில்லை. மூன்றாம் நாள் காலை கிஷண்லால் வந்தான். முகத்தில் சுரத்தே இல்லாமல்.

"என்ன கிஷண்?" என்றார் அவர்.

"நேற்று கெம்போவாலுக்குப் போயிருந்தேன். அங்கேதானே ஸந்த் லோங்கோவால் தங்கியிருக்கிறார்! ஒரு கூட்டத்தில் என்ன பேசினார் தெரியுமா?" என்றான் கிஷண் தயக்கத்துடன்.

"பியான்த்தும் ஸத்வந்தும் 'ஷாஹீத்'துகளாம். அவர்களுடைய குடும்பத்தாருக்கு 'ஸர்போவா' (விருது) கொடுக்கப் போகிறாராம்."

குருசரன் அதிர்ந்து போனார்.

"நீ கேட்டாயா அதை?"

"ஆமாம்."

சில விநாடிகள் மௌனத்திற்குப் பிறகு அவர் எழுந்தார். குர்த்தாவில் மணி பர்ஸ் இருக்கிறதா என்று பார்த்து, உள் பக்கம் நோக்கி,

"நான் கொஞ்சம் வெளியில் போகிறேன். சாயந்திரமாகும் வர!" என்றார்.

"ஜாக்கிரதை!" என்று மனைவி பதில் கொடுத்தாள்.

அவர் கிஷண் லாலுடன் வெளியில் வந்தார்.

"நேராகக் கெம்போவாலுக்குப் போகப் போகிறேன். நீ வீட்டிற்குப் போ" என்றார்.

பஸ்ஸைப் பிடித்துக் கெம்போவாலை அடைந்த போது உச்சி வெயிலாக இருந்தது.

குருத்வாராவில், 'குருகா லங்கரில்' சாப்பிட்டுவிட்டு லோங்கோவால் அப்பொழுதுதான் வந்து தனது மிக எளிமையான ஒற்றை அறையில் தரையில் மெத்தை விரிப்பில் அமர்ந்திருந்தார்.

குருசரன் ஸிங்கைப் பார்த்ததும் முகம் மலர்ந்து எழுந்து,

"வாருங்கள்" என்று அணைத்துக் கொண்டார்.

"ஸந்த்ஜீ, முதலில் எனக்குச் சொல்லுங்கள். நேற்று நீங்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் அந்தக் கொலைகாரர்களை 'ஷாஹீத்' என்றீர்களா?"

லோங்கோவாலின் பார்வை சட்டென்று நிலத்தில் பதிந்தது. புன்னகை வடிந்தது. முன்பு உட்கார்ந்திருந்த நிலையில் சென்று உட்கார்ந்து, குருசரன்ஸிங்கை அமரும்படி சைகை காட்டினார்.

லோங்கோவாலின் மௌனத்தைக் கண்டு குருசரன்ஸிங் ஆத்திரத்துடன் தொடர்ந்தார்.

"நீங்கள் இப்படி அலையோடு அலையாய்ச் சேர்ந்து விடுவீர்கள் என்று நான் நிச்சயம் நினைக்கவில்லை ஸந்த்ஜீ! உங்கள் கட்சி எத்தனையோ முட்டாள்தனம் செய்திருக்கிறது. உள் சண்டையினால். ஆனால் இது அதையெல்லாம் துச்சமாக்கிவிட்டது. பஞ்சாபுக்கு அமைதி வரவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா இல்லையா? உங்களுடைய பேச்சு எத்தனை ஆபத்தானது என்று உங்களுக்குத் தெரியுமா? யாரை 'ஷாஹீத்' என்று போற்றினீர்களோ அவர்கள் கொலை செய்த பெண்மணியின் சொந்த மகன் இப்பொழுது பிரதமர்! உங்களுக்குள் ஓடுகிற மாதிரியான ரத்தம் தான் அவர் உடம்பிலும் ஓடுகிறது என்று மறந்து விட்டதா? அவர் மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர் என்று நினைத்தீர்களா? நீங்களும் சுவரை எழுப்பினால் சமாதானத்துக்கு என்ன வழி?"

குருசரன் ஸிங்கின் சிவந்த முகம் மேலும் சிவந்திருந்தது. பழுப்பு நிறக் கண்களில் கோபம் தெறித்தது.

லோங்கோவாலின் முகத்தில் எரிச்சல் இல்லை, பதற்றமில்லை. எந்த உணர்ச்சியும் தெரியவில்லை. மிக மெல்லிய குரலில் சாந்தமாகச் சொன்னார்.

"இப்பொழுது சமயம் சரியில்லை குருசரன்ஜீ! இங்கிருக்கும் அலை எப்படியிருக்கிறது பாருங்கள்! நான் இவர்களுக்கு எதிராகப் பேசினால் நாளை உயிரோடு என்னை இருக்க விட மாட்டார்கள். நான் சாவைக் கண்டு பயப்படவில்லை. ஆனால் பஞ்சாபின் சமாதானத்துக்கு வழி ஏற்படுத்துகிறவரை உயிரோடு இருக்க ஆசைப்படுகிறேன். சுவரை நிச்சயம் நான் எழுப்ப மாட்டேன். சமயத்துக்காகக் காத்திருக்கிறேன். இது அரசியல் குருசரன்ஜீ, இலக்கியமில்லை!"

(தொடரும்)



"பெற்று, பேணி வளர்த்த பெண்ணுக்கு கல்யாணமென்றால் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சிதானே?

எங்கள் பெண்ணிற்கு ஒரு நல்ல இடத்தில் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது.

"கல்யாணம் செய்துப் பார்" என்று பெரியவர்கள் சொல்வது உண்மைதான்!

எவ்வளவு அலைச்சல், எவ்வளவு ஏற்பாடுகள்!

வசதியான கல்யாண மண்டபத்தைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து, கல்யாணப் பத்திரிகைகள் அனுப்புவது வரை ஆயிரம் வேலைகள்!

ஸ்பெஷலாக நெய்த கூறைப்புடவை, எங்கள் மகளே டிசைன் செய்த தங்க நகைகள், பாத்திரம் பண்டங்கள் என்று நீண்ட பட்டியலே போட்டு வாங்கினோம்.

இதையெல்லாம் பொறுக்கியெடுக்க கடை கடையாக ஏறி அலைந்தாலும், எவர்சில்வர் பாத்திரங்கள் வாங்கும்போது எதை வாங்கலாம் என்பதில் எங்களுக்கு ஒரு சந்தேகமும் இல்லை.

வேறென்ன, சேலம் எவர்சில்வரில் செய்த பாத்திரங்கள்தான்!

அந்த காலத்தில் கிடைத்த பாத்திரங்களைப்போலவே நல்ல தரமானவை. கரும்புள்ளிகளோ, கறையோ பிடிக்காது. வாழ்நாள் முழுவதும் பளபளப்பு குறையாமல் உழைக்கக்கூடியவை.

வேறென்ன வேண்டும் எங்கள் மகளுக்கு!"

சேலம் எவர்சில்வரில் தயாரிக்கப்பட்ட பாத்திரங்கள் எல்லா பிரபலமான பாத்திரக்கடைகளிலும் கிடைக்கும்.

சேலம் எவர்சில்வர்.
நம்பிக்கைக்குப் பாத்திரமான பாத்திரங்கள்.

சேலம் உருக்காலை

Sista's-SSP. 366. 85 TMA



மழைக்குப் பின்னும் பூக்கள்

"ஜென்! நீங்க ஒரு மாதிரியா இருக்கிறதைப் பத்தி டெய்ஸிதான் சொன்னா. அன்னிக்கு ராத்திரி என்னால அழுகையை அடக்க முடியல. அவர் வந்து, 'என்னம்மா, விஷயத்தை எனக்குச் சொல்லக் கூடாதா, சொல்லுடா'ன்னப்ப என்னால, சொல்லாம இருக்க முடியல. அவர் ஒரு அற்புதமான மனுஷர் ஜென். எல்லாத்தையும் கேட்டுட்டு, அவர் என்ன சொன்னார் தெரியுமா.....?"

அந்தத் திருவிழா சூழலில் இப்படி ஒரு சந்திப்பு நிகழக்கூடுமென்று ஜென்னும், எஸ்தரும் எதிர்பார்க்கவே இல்லைதான். ஆனாலும் இது என்றாவது நடக்க வேண்டுமெனத் தங்களுக்குள் அவர்கள் விரும்பி இருந்திருக்க வேண்டும் என்கிற மாதிரி பார்வைகளை விலக்கிக் கொள்ளாமலேயே நின்றார்கள்.

எஸ்தர் மெலிந்துவிட்டிருந்தாலும், அவனைப் போல் மோசமாகிவிடவில்லை. முகத்தில் இன்னும் ஜீவகளை இருந்தது. ஆனாலும் அவளின் திருமணத்திற்குப் பின் ரகசியமாய் யாரோ ஐந்தாறு வருஷங்களை அவளில் திணித்துவிட்டதைப் போலிருந்தாள்—பெரிய மனுஷியின் தோரணைகளோடு. கையில் அவள் குழந்தை தன் திராட்சைக் கண்களை மலர்த்தியபடி, எச்சில் ஒழுகச் சிரித்தது. திடீர்ச் சந்திப்பு விளைவித்த தர்ம சங்கடத்தை விலக்கி, நிலைமையை சகஜமாக்க முயல்வதைப் போல, தன் பிஞ்சுக் கைகளை இவன் பக்கமாய் ஆட்டியது. அதன் இயல்பான செய்கையில் தானும் தைரியத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டதைப் போல எஸ்தர் சிரித்தாள்.

"நல்லாயிருக்கிங்களா, ஜென்?"

ஜென் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கே உரித்ததாய் இருந்த அந்தச் சிரிப்பு மட்டும் அவனிடமிருந்து போய் விடவே இல்லை. தானும் புன்னகைக்க முயன்றான். குழந்தையை வாங்கக் கைகளை நீட்டினான்.

"பேர் என்ன எஸ்தர்?"

குழந்தை சிரிப்பு மாறாமல், ஜென்னிடம் தாவிக் கொண்டு வந்ததில் இருவருமே ஆச்சர்யமாகிப் போனார்கள். தன் அம்மாவின் பேரில் மகத்தான பிரியத்தைக் கொண்டிருந்தவன் இவன் என்று தன் குழந்தை சூட்சுமமாய் உணர்ந்திருந்துதான் ஜென்னிடம் இப்படிப் போனதோ என்றுகூட எஸ்தர் நினைத்தாள். இந்த நினைப்பு அறிவு பூர்வமானதோ இல்லையோ, ஆனால் அவளுக்கு இந்த நினைப்பே மிகுந்த சந்தோஷத்தைத் தந்திருக்க வேண்டும். முகத்தை மலர்த்திக் கொண்டு சிரித்தாள்.

"விமலி யார்ட்டயுமே இப்படி போனதில்ல. உங்ககிட்ட மட்டும் இவ எப்படித்தான் வந்தாளோ?" என்றாள் எஸ்தர்.

ஜென் எதுவும் பதில் சொல்லாமல், விமலியின் பூக் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டு, அதன் தலை முடியைக் கோதிவிட, அது தலையை இவன் தோளில் சரித்துக் கொண்டு சிரித்தது.

நடக்க ஆரம்பித்தார்கள்.

சொல்லப் போனால், இது அவர்களுக்குப் புதிதான காரியமில்லைதான். எஸ்தரின் திருமணத்திற்கு முன்பு — எத்தனை தடவை இது நிகழ்ந்திருக்கிறது. மரங்கள் நிறைந்திருக்கிற சோலை வழியே அவளை, அவளின் ஸ்கூலுக்கு அழைத்துப் போனதிலிருந்து, சர்ச்சிலிருந்து வீட்டிற்குப் போக, மிகவும் சுற்றிப் போகிற பாதை வழியே பேசினபடி போவதிலிருந்து, சாரல் நாட்களில் குடை பிடித்து, அவள் போக வேண்டிய இடங்களுக்குக் கொண்டு போய் விடுவதிலிருந்து.... எத்தனை தடவைகள். அவர்கள் பழகின பொழுதுகளில் நடந்தபடியே உடனிருந்த நிமிஷங்கள்தாம் அதிகமிருந்தன. மட்டுமில்லாமல், இலக்கின்றியே எத்தனை முறை இந்த நடத்தல்கள் இருந்திருக்கின்றன.

ஆலயத்திற்குச் சற்று மேற்புறமாய்த் தள்ளி இருக்கிற உயர சாம்பிராணி மரங்கள் நிழல் பந்தலிட்டிருக்கிற பாதையில் நடக்க ஆரம்பித்தார்கள். மரங்கள், சூர்யக் கதிர்களை பொடி நட்சத்திரங்களாய் மாற்றி ஒட்ட வைத்துக் கொண்டிருந்தன தம் உயரக் கிளைகள் எங்கும். இப்படி மரங்களிருக்கிற பாதை ஜென்னுக்கு மிகப் பிடித்தமானவை என்பதை, தான் இன்னும் மறக்கவில்லை என்பதைப் போல, ஜென் வெகு நேரத்திற்கு ஏதும் பேசாதிருந்துமே புன்முறுவலுடன் வந்தாள் எஸ்தர். அவள் இப்படி வருவதே ஜென்னிற்கு மிகவும் திருப்தியாக இருந்தது.

வழியில் ஐஸ்கிரீம்காரன் எதிர்ப்பட, ஜென் வாங்க முயன்ற பொழுது.

''ஜென் கோபிச்சுக்காதீங்க. எனக்கு வேண்டாமே ப்ளீஸ்!''

'எஸ்தரின் அவசர, உடனடி, தீர்மான மறுப்பில் ஜென் தடுமாறிப் போனான். சட்டென்று சில நிமிஷங்களாயிருந்த பிரமை விலகிற்று. அந்த எஸ்தர் இல்லை இவள். 'அவனின் எஸ்தர்' இல்லை இவள்.

''எஸ்தர் உன் கை ஏன் தெரியுமா இத்தனை ஜில்லுன்னு இருக்கு?''

''ஏன்?''

கார்த்திகா ராஜ்குமார்



"இப்படி நினைத்துக்கும் ஐஸ்கிரீமா முழுங்கினு இருக்காதா பின்னே. ஆமா, உன் உடம்புக்கு ஏதும் செய்யாதா, இது?''.

''ஊஹூம்.''

....அந்த எஸ்தர் இல்லே இவள். இவள் வேறு எஸ்தர். திருமதி எஸ்தர். ஜென் உதட்டைக்கடித்துத்தன்னை இயல்பாக்கிக்கொள்ள முயன்ருன்.

''நான் வாங்கிக்கலேன்னு கோபமா, ஜென்?''

''............................''

''என் வேண்டுதல் பலிக்கிற வரைக்கும், எனக்கு ரொம்ப பிடிச்ச இதைச் சாப்பிடவே கூடாதுன்னு வச்சிருக்கேன். அதனுல்தான் ஜென்.''

''......................''

''என்ன வேண்டுதல், எதுக்காகன்னுகூட கேக்க மாட்டீங்களாக்கும்? உங்க 'அழுத்தம்' இன்னும் கொஞ்சம்கூட மாறவே இல்லே. என் வேண்டுதல் உங்களுக்காகத்தான் ஜென். நீங்க ஏன் இப்படி இருக்கீங்க? உங்களைப் பத்தி நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதான் போலிருக்கு. எனக்கு எத்தனை சங்கடமா இருக்கு தெரியுமா? எத்தனை நான் நீங்க இந்த மாதிரி இருக்க உத்தேசம்? இருக்கத்தான் முடியும்?''

ஜென் குனிந்து வழியில் புற்களின் நடுவிலிருந்த ஒரு சின்ன மஞ்சள் பூவைக் கிள்ளி எடுத்து விமலியிடம் கொடுத்தான். அது ஆசையாய் வாங்கிக் கொண்டு சிரித்தது. எஸ்தருக்கு ஜென் எதையுமே சொல்ல வில்லே. எஸ்தரின் பிரிவு அவனை வாழ்வின் எல்லேக்கோ, முடிவுக்கோ எதனுலோ கொண்டு போகவில்லேதான் என்ருலும் அதன் பிறகு என்னதான் நிகழ்ந்தது என்று எப்படித்தான் சொல்ல முடியும். ஆனுலும் அப் பிரிவு மிக ஆழமான காயமாகிப் போய் இன்று என்னவோ ஆறிப் போய் மூடி விட்டதாகப் பொய்த் தோற்றம் அளிக்கிறது. இருப்பினும், சில நினைவு கூறல்களில் ரத்தம் கசிவதாகவே இருக்கிறது. எப்பொழுது முழுமையாக ஆறும்?



''பேச மாட்டீங்களா, ஜென்?''

''விமலி ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கா எஸ்தர்.''

அவனின் சம்பந்தமற்ற பதில் அவளைத் திகைப்புற வைத்தது. முகச் சுளிப்புடனும், எரிச்சலுடனும் அவனை ஏறிட்டு, தான் இனி பேசப் போவதில்லே என்பதைப் போல பார்த்துவிட்டு, கீழ் உதட்டுக் கடிப்புடன் குனிந்து கொண்டாள் எஸ்தர்.

''எஸ்தர். ஸாரி.... ஸாரிம்மா. நான் உன்னைப் புண்படுத்திட்டேன்னு நினைக்கிறேன். எப்பவும்போல என்னை மன்னிச்சுடு. எனக்கு எதுவுமில்லே. நம்பு. நான் நல்லாத்தான் இருக்கேன். வீட்ல அவர் சுகம்தானு?''

''ம்..ம்..''

''ஏன் வரலேயா இன்னிக்கு?''

''ஊஹூம்.''

''அட, எப்பவும் போல இரேன் எஸ்தர். அதான் ஸாரி சொல்லிட்டேன்ல. கொஞ்ச நேரத்திலே நான் போயிடப் போறேன். பேசேன்.''

ஜென்னின் கெஞ்சலான குரலில் மன மிளகிவிட்டதைப் போல, அவனைப் பார்த்தாள். சகஜமாகிவிட்டவளைப் போல் சொன்னுள்:


''அவருக்கு லீவு இல்லே. என்ன அப்படிப் பார்க்கறீங்க. நெஜம்மாதான்'' சிரித்தாள் எஸ்தர். ஜென்னும் சிரிக்க முயன்ருன்.

''என்கிட்ட ரொம்ப நல்லாத்தான் நடந்துக்கருர். நான் எதிர்பார்க்கவே இல்லே. அவர் இத்தனை நல்லவர்ன்னு'' என்று ஆரம்பித்து அவள் கணவனின் பெருந்தன்மை மிளிர்ந்த காரியங்கள் பற்றி விவரித்துவிட்டு, பின்,

''ஜென், ஒரு நாள் உங்களைப் பத்திக் கூட எல்லாத்தையும் அவர் கிட்ட சொன்னேன்!''

ஜென் சரேலென்று நின்ருன். அவளேயே பார்த்தான்.

''ஆமா ஜென். நீங்க ஒரு மாதிரியா இருக்கிறதைப் பத்தி அரசல்புரசலா ஒரு தடவை எனக்கு வதந்தி வந்துச்சு. டெய்ஸிதான் சொன்னு எல்லாத்தையும். அன்னிக்கு ராத்திரி என்னுலே அழுகையை அடக்க முடியலே. அவர் வந்து, 'என்னம்மா விஷயத்தை எனக்குச் சொல்லக்கூடாதா, சொல்லுடா' ன்னப்ப என்னுலே, அதுக்கப்புறமும் சொல்லாம இருக்க முடியலே. அவர் ஒரு அற்புதமான மனுஷர் ஜென். எல்லாத்தையும் கேட்டுட்டு, அவர் என்ன சொன்னுர் தெரியுமா?



விளையாட்டு வினையாகியது!

வி.ஐ.பி. ஸூட்கேஸ் பரிசுத் திட்டம்

போட்டி: 23

விளையாட்டாக ஏதோ ஒன்றை நீங்கள் ஆரம்பித்து வைக்க அது நல்வினையாகவோ அல்லது தீவினையாகவோ முடிந்திருக்கலாம். (கருத்து: டி. கே. குருமூர்த்தி, திருப்பத்தூர்) சுவையான அந்த அனுபவத்தைக் கீழே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தை முழுமையாகக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்கு வி. ஐ. பி. ஸூட்கேஸ். உறையின்மேல் 'விளையாட்டு வினையாகியது' என்று அவசியம் குறிப்பிட வேண்டும்.

முடிவு தேதி: 21.10.85

30 வி. ஐ. பி. ஸூட்கேஸ்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. ஒன்றைப் பரிசாகப் பெற்றே தீருவது என்ற உற்சாகத்துடன் வாராவாரம் போட்டிகளில் பங்கு கொள்ளுங்கள்.

என் பெயர்: ....

விலாசம்: ....

....

''எஸ்தர்,-பரஸ்பர பிரியம், நேயம்ங்கிறது இப்படி ஒருத்தரை ஒருத்தரோ, ஒருத்தரால ஒருத்தரோ இல்லே, அவங்க அவங்களேயோ ஹிம்சிச்சுக்கிறது இல்ல. எப்படியோ எதனாலோ, உங்க வாழ்க்கைப் பாதைகள் மாறிப் போச்சு. அதுக்கு அப்புறமும் இப்படி ஜென் பண்றது சரியில்லே. நீ இப்படி அழறதும்கூட ஒரு விதத்துல சரியில்ல. இனிமேலும் அவர் வாழ்க்கை சந்தோஷமா அமையணும்னு நீயும், அவரும் அப்படியே நினைக்கிறதும் தான் மெய்யான அன்பு. அதோட செயல்களே வேறேன்னு, இன்னும் எதை எதையோ சொன்னார் ஜென். அதை எல்லாம் அவர் மாதிரியே அழகா சொல்லத் தெரியல. உங்களைப் பார்த்தா, ஒருநாள் கண்டிப்பா கூட்டிட்டு வரச் சொன்னார். ப்ளீஸ் இன்னிக்கே வாங்களேன் ஜென்.''

''வந்து.... நான் வந்து.... என்ன.... எஸ்தர்.''

''அவர் உங்ககிட்டயும் பேசணும்னார் ஜென்.''

மிகப் பெரிய ஆச்சர்யத்தை, முற்றிலும் எதிர்பாராததை எதிர்கொண்டதைப் போல் தடுமாற்றத்துடன் நின்றிருந்தான் ஜென்.

தன்னைப் போலவே, திடுமென மாறிக் கொண்டிருந்த வானத்தைப் பார்த்தான். மரங்களினூடே கசிந்த கதிர்கள் காணாமல் போயிருக்க, எங்கிருந்தோ வந்த மேகங்கள், கறுத்து வானத்தில் நிறைந்திருந்தன. எஸ்தருக்கான பதிலே தன்னிடமில்லே போலிருந்தது ஜென்னிற்கு. திடுமென மழைத் துளிகள் ஆரம்பித்தன.

மறுபடி வானத்தைப் பார்த்துவிட்டு, விமலியை எஸ்தரிடம் கொடுத்தான். தன் ஜெர்சியைக் கழற்றி; விமலிக்குப் போர்த்தினான்.

''நல்லா மழை வந்திடும் போலிருக்கு எஸ்தர். சீக்கிரமா போயிடேன். விமலி நனைஞ்சிட வேண்டாம்னு ஜெர்சியைப் போர்த்தினேன். நான் போகட்டுமா?''

மழைத் தூறல் அதிகரித்தது. அவனையே பார்த்திருந்துவிட்டு,

''நான் சொன்னதை ஞாபகத்தில வையுங்க ஜென்'' என்றாள் எஸ்தர்.

ஜென் ஒரு புன்னகையை பதிலாக்கிவிட்டு நடக்க ஆரம்பித்தான். தனக்குள் பரவிக் கிடக்கிற உணர்ச்சிகள் சந்தோஷமோ, வருத்தமோ இல்லே. எதுவென இனம் காணத் தெரியவில்லே. மழை வலுத்துவிட்டது என்றாலும் அந்தப் பிரக்ஞையே இல்லாதவனைப் போல நடந்து கொண்டிருந்தான். மனம் வெகுவாகக் கனத்துப் போயிருந்தது. அது அழுததாலோ அல்லது துக்கத்தினாலோ என்று தெளிவாகச் சொல்லிவிட முடியாதபடி, முகத்தில் சற்று முன்பு எஸ்தருக்காகப் பூக்க வைத்த புன்னகை இன்னும் மிச்சமிருந்தது.

லக்கேஜ் பெட்டித் தயாரிப்புத்
தலைவர்களின் படைப்பு—


விஐபி
கன்கார்டு

வந்திறங்குது இப்போது—

இதோ, ஜெட் யுகக் கட்டழகுள்ள புதிய விஐபி கன்கார்டு! நாகரீக நரம்போடிய அலாதி ஸ்டைலிங். கண்டறியாத வர்ண வகைகள்: பீச க்ரீம் (செவ்விள மஞ்சள்), டெஸர்ட் பிரவுன் (மணற் கபில நிறம்), மிஸ்ட் க்ரே (பனிச் சாம்பல்), க்ரீம் சாக்கலேட், மேலும் பலப் பல. உட்புறமோ இடவசதி மிகுதி.

ஓடோடிப் பார்வையிடுவீர் அருகிலுள்ள வியாபாரியிடம்... சொகுசு லக்கேஜ் புதுவரவுகள்.

ஆகாயமெட்டும் எங்கள் அதிநவீனக் கற்பனை.



தேர்ந்தெடுக்க மிகப் பல வகைகள்,
வருங்கால யோக வரவுகளோ மேலும் பலப்பல.

LINTAS VIP M 10 2013 TM

ஆபத்தில் உதவிய -உதவி பெற்ற அனுபவம்

வாசகர் பங்கு

குழந்தையைக் காப்பாற்றினேன்!

எங்கள் காலனியின் குறுக்கு வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, உடன் வந்த என் மகன் திறந்த சாக்கடைத் தொட்டியில் நீர்க்குமிழிகள் வருவதைச் சுட்டிக்காட்டினான். கூர்ந்து கவனித்தபோது சட்டை லேசாகத் தெரியவே, பாய்ந்து சென்று தூக்கிய என் கரங்களில் உயிருக்கு மன்றாடிய இரண்டு வயதுக் குழந்தை அகப்பட்டான். இன்று அவன் மருத்துவக் கல்லூரி மாணவன்.

— எஸ். சுந்தர்ராஜ், மதுரை—2.

வெள்ளத்திலிருந்து வெளியேற்றினர்!


1983 ஆம் ஆண்டு திருப்பூர் அருகே சின்னக்கரைப் பள்ளத்தில் பலத்த மழை காரணமாகப் பெருகிய ஆற்று வெள்ளத்தில் சிக்கியது நான் பிரயாணம் செய்த பஸ். தண்ணீரில் மூழ்கிக் கவிழும் நிலையில் கலவரம் அடைந்த அத்தனை பிரயாணிகளையும் காப்பாற்றினர்கள் அந்தக் கிராமத்து மக்கள். நீளமான தாம்புக் கயிற்றை பஸ்ஸுக்குள் எறிந்து, அதை பஸ்ஸின் பின்புறம் பிணைத்தார்கள். ஒவ்வொருவராகக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு சாலையை வந்தடைந்தோம்.

— எஸ். முகம்மது யூசுப், திருப்பூர்—4.

ரிக்ஷா ஓட்டினேன்!

இரவுக் காட்சி சினிமா பார்த்துவிட்டுத் திரும்புகையில் சைக்கிள் ரிக்ஷா ஒன்றின் அருகே தவித்தபடி நின்றிருந்தார் ஒருவர். ரிக்ஷா ஓட்டுனர் நன்றாகக் குடித்துவிட்டு மயங்கிக் கிடந்தார். மனைவிக்குப் பிரசவ வலி எடுத்துவிட்டது என்றும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக வேண்டும் என்றும் அழாத குறையாகச் சொன்ன அந்த மனிதரைச் சமாதானப்படுத்தி நானே ரிக்ஷாவைச் செலுத்தி அவர் மனைவியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனேன். அவருக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு என் பெயரையே சூட்டி விட்டார்!


— பி. ஆர். ஸ்ரீநிவாசன், வேலூர் (சேலம்)



போலீஸ்காரர் உத்தமநாதன்

மண்டபம் நகரிலிருந்து வாடகைக் காரில் மதுரைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது பரமக்குடி அருகே ஒரே பரபரப்பு. இந்திரா காந்தி அன்று சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். கல்லடிக்குப் பயந்து டிரைவர் வண்டியை நிறுத்திவிட்டு எங்களை நடுத்தெருவில் விட்டுவிட்டுப் போய்விட்டார். ஆபத்சகாயனாக அந்த மதிய வேளையில் குழந்தைகளுக்கும் எங்களுக்கும் இரண்டு நாட்கள் தங்கத் தம் வீட்டிலேயே இடமும் உணவும் அளித்து உதவியவர் ஒரு போலீஸ்காரர். அவர் பெயர் உத்தமநாதன்.

— ஏ. தட்சிணாமூர்த்தி, மதுரை—7.



இரட்டை அபராதம்!

சென்னை கடற்கரை ரயில்வே இருப்புப் பாதையைக் கடக்க முற்பட்டு போலீசாரிடம் அன்று அகப்பட்டுக் கொண்ட பலருள் ஒரு



வருக மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விதித்த பத்து ரூபாய் அபராதத்தைச் செலுத்தினேன். உடன் அகப்பட்டவர்களுள் வயதான கிழவர் ஒருவர் அபராதத் தொகை கட்டமுடியாமல் ஒரு வாரம் ஜெயில் வாசம் செய்ய வேண்டிய பரிதாபகரமான நிலைமையில் இருந்தார். எல்லோரும் அவரை வேடிக்கை பார்த்து நின்றபோது அவருக்காக நான் அபராதம் கட்டி அவரை விடுவித்தேன்.

— வி. தேவராஜன், சென்னை — 119.

எல்லோரும் இந்திய மக்கள்


தெலுங்கானா கலாட்டா நடந்தபோது ஆந்திராவில் போச்சம்பாடு என்ற கிராமத்தில் இருந்தோம். 'முல்கி' எனப்படும் வேற்று மனிதர்களான எங்களுக்கு உதவுவதே கூடாது என்று ஆணை பிறப்பித்திருந்தது. உடைமைகளோடு நிர்க்கதியாக நடுத்தெருவில் நின்ற எங்களுக்கு உதவினார் திருவெங்கடேஸ்வரன் என்ற எதிர்வீட்டு மனிதர். தமக்கு அதனால் ஆபத்து வரக்கூடும் என்று அறிந்தும் எங்கள் உடைமைகளை இரண்டு மாதங்கள் தம் பாதுகாப்பில் வைத்திருந்து, கலாட்டா அடங்கிய பிறகு திருப்பித் தந்தார்.

— அனுசூயா சம்பத், ஹைதராபாத்.



நன்மை செய்யப் போய்....

ஒரு மழை நாளில் தன் வீட்டாருடன் கோபித்துக் கொண்டு எங்கள் எதிர் வீட்டுத் திண்ணையில் வந்து படுத்துவிட்டாள் ஒரு மூதாட்டி. நடு இரவில் அவளுக்குக் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. அக்கம்பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் சேர்ந்து அவளை



மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றோம்.

மறுநாள் அவளுடைய மகள் எங்களிடம் வந்து அம்மா ஒரு சுருக்குப் பையில் பணம் வைத்திருந்ததாகவும், அதைக் காணவில்லை என்றும், அதை நாங்கள்தான் எடுத்திருக்க வேண்டும் என்றும் குற்றம் சாட்டியபோது எங்களுக்கு உண்டான அதிர்ச்சியைச் சொல்லி முடியாது.

— என். வத்சலா, திருவாரூர்.

கைப் பற்றிக் காப்பாற்றினேன்!

மின்சார ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தேன். வழக்கமான நெருக்கடி. ஜன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு தொங்கிய வாலிபன் ஒருவன் திடீரென்று "காப்பாற்று! காப்பாற்று!" என்று அலறியதைக் கேட்டு பிடி தளர்ந்த அவன் கையை ஒரு நொடியில் பற்றிக் கொண்டேன். என்னைத் தொடர்ந்து பிறரும் அவனுக்கு உதவி செய்து காப்பாற்றினார்கள்.

— அர. மணிவண்ணன், சென்னை — 16.

கண்களைக் காப்பாற்றினார்!

என் மகன் ஒரு கம்பெனியின் பரிசோதனைச் சாலையில் அமோனியா திரவ பாட்டிலை வேகமாகத் திறக்கப் போய் அந்தத் திரவம்



முழுதும் பொங்கி அவன் தலை முதல் கால் வரை வழிந்துவிட்டது. உடன் இருந்தவர் சமயோசிதமாக டிஸ்டில்ட் வாட்டரை ஊற்றி அவனுக்கு முதலுதவி செய்து ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்றார். அவர்செய்தமுதலுதவியால்தான் என் மகன் கண் பார்வை இழக்காமல் தப்பினான்.

— ஆர். கமலா, சென்னை—44.

பயிரை மேய்ந்த வேலி!

நள்ளிரவு ஒருமணி இருக்கும். என் வீட்டின் எதிரே ஓடிய கரிய உருவத்தைத் தொடர்ந்து ஓடிப் பிடித்தேன். கையில் அகப்பட்டது ஒரு பெண்! தன்னை இரண்டு ஆயுதப் படை போலீசார் மானபங்கம் செய்துவிட்டதாகவும் தன் நகைகளைப் பிடுங்கிக் கொள்ள அவர்கள் துரத்தி வருவதாகவும் சொன்னாள். தோட்டத்து வேலியைப் பிரித்துக் கொண்டு, இரண்டு பேர் உள்ளே நுழைய முயல்வதைப் பார்த்தேன். "டேய், ராமையா, நாய்களை அவிழ்த்து விடு" என்று இல்லாத நாய்களை விடுவிக்கச் சொல்லி கற்பனை வேலையாளை ஏவினேன். இரண்டு உருவங்களும் வந்த வேகத்தில் திரும்பிப் போய்விட்டன!

— வே. ராமகிருஷ்ணன், பரமக்குடி.

உடுக்கை இழந்தவர் இடுக்கண் களைந்தேன்!

மறுநாள் கல்யாணத்திற்கு உடுத்திச்செல்லவிருந்த புடவையை லாண்டரியிலிருந்து வாங்கிவரச் சொல்லி அனுப்பினாள் அம்மா. பட்டுப் புடவையுடன் வந்து கொண்டிருந்தபோது, மோட்டார் பைக் சக்கரத்தில் புடவை சிக்கி அலங்கோலமான நிலையில் ஒரு பெண் பரிதவித்துக் கொண்டிருந்தாள். அவள் கணவன் புடவையை விடுவிக்க முயன்று கொண்டிருந்தான். சுற்றிலும் நின்ற கூட்டம் அவளை வெறித்தது. கூனிக் குறுகிய அவளுக்கு என் அம்மாவின் பட்டுப் புடவையைத் தந்து உதவி அவள் நன்றிக்குப் பாத்திரமானேன்.

— வி. தர்மராஜ், வடசேரி.

குழந்தையும் தெய்வமும்!

நகரின் நெரிசலான குடியிருப்புப் பகுதியில் மோபெட்டில் போய்க் கொண்டிருந்தபோது, குழந்தை ஒன்று திடீரென்று குறுக்கே ஓடி விட்டது. தக்க சமயத்தில் பிரேக் போட்டதால் குழந்தைக்கு ஆபத்து ஏதும் நேரவில்லை. ஆனால் விழுந்துவிட்ட குழந்தையை எடுக்கப் போனவனை பலர் சூழ்ந்து கொண்டு அடிக்கவே வந்துவிட்டனர். கூட்டத்தில் ஒரு பெரியவர் மட்டுமே குழந்தையை வீதிக்கு வரவிட்ட பெண்ணைக் கடிந்து கொண்டு, நான் அங்கிருந்து போக வழி செய்து கொடுத்தார். அன்று அவர் உருவில் தெய்வமே வந்து எனக்கு உதவியதாக எண்ணுகிறேன்.

— எஸ். ஸ்ரீராமன், சென்னை—78.

உண்மையான கிறிஸ்தவன்

இரண்டாம் உலகப்போர்க்காலம். தெற்கு தேவலாலியில் பொறியியல் பிரிவில் பொறுப்பேற்றிருந்த புதிது. மிலிடரி ஆஸ்பத்திரியில் க்ஷய நோய்க்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஜான் மாத்தாய் என்பவரின் நிலை மிக மோசமாகிவிட்டதாகச் செய்தி வந்தது. அவருடைய இடத்தில் பொறுப்பேற்றிருந்த நான் உடனடியாகச் சக ஊழியர்களிடையே ரூ 410 நன்கொடை வசூலித்தேன். இரண்டு நர்ஸுகளுடன் ஜான் மத்தாயை அவருடைய சொந்த ஊரான ஆலப்புழைக்கு அனுப்பி வைத்தேன். வயதான பெற்றோரையும், இளம் மனைவியையும் பார்த்து இரண்டே மணிநேரங்கள் அவர்களுடன் இருந்துவிட்டுக் காலமானார் மத்தாய். ஆலப்புழைப் பாதிரியார் அனுப்பிய செய்தியைப் பொக்கிஷமாகக் கருதுகிறேன்: 'Whomesoever you may be, you are a true Christian'.

— கே. ராஜாமணி, மயிலாடுதுறை.

ஆபத்சகாயர் அயல்நாட்டுக்காரர்

1980ஆம் ஆண்டு திருப்பதியிலிருந்து பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தபோது பஸ் விபத்துக்குள்ளாகி சக பிரயாணிகள் பலர் சின்னாபின்னமாயினர். ஒரு கை ஏறத்தாழத் துண்டிக்கப்பட்ட நிலையில் சாலையில் கிடந்த என்னையும் பஸ் டிரைவரையும் தன் வேனில் ஏற்றிச் சென்ற ஆபத்சகாயர் எம்ரீஸ் லீஸ் என்ற அயல்நாட்டவர். நேரே மருத்துவமனைக்குச் சென்று அங்கு அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பொறுமையாகப் பதில் கூறி என்னை அட்மிட் செய்துவிட்டு, என் வீட்டுக்குச் சென்று என் உறவினர்களுக்குத் தகவல் கூறி, தன் வண்டியிலேயே அவர்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்துவிட்டார். இதையெல்லாம் செய்த பிறகே வானில் காத்துக் கொண்டிருந்த தன் மனைவியையும் கைக் குழந்தையையும் கவனிக்கத் திரும்பினார் அந்த நல்லவர்.

— எஸ். பார்த்தசாரதி, சென்னை—33.

ப்ளோப்ளாஸ்ட் நிறுவனம் வழங்கும் வி. ஐ. பி. சூட்கேஸைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்:

பி. ஆர். ஸ்ரீநிவாஸன்,
1/17F, பைபாஸ் ரோடு,
வேலூர் (சேலம்)
638 182.





தீராத விளையாட்டு ஸாயி

10. இளைஞரை ஈர்க்கும் இன்காந்தம்

> வினவும்அடி யாரை மருவிவிளை யாடு
> விரகுரச மோகப் பெருமாள்காண்!
>
> —திருப்புகழ்.

அந்த இளைஞனின் பெயர் மயூர் பாண்ட்யா. இக்கால இளைஞர் பலர் போகும் வழியில்தான் அவனும் போனான். அதாவது போகக் கூடாத வழியில். புலன்களின் இழு பறிக்குத் தன்னை இஷ்டப்பட்டுப் பலி கொடுத்துக் கொண்டான். புதைச் சேறு அவனைப் புதைத்து மூட இருந்த நிலை. அப்போதுதான் பயங்கரத்தைப் புரிந்து கொண்டான். 'சந்தனத் தடாகம் என்றெண்ணிச் சகதிக் கொதிகலனில் அல்லவா புதைகிறோம்? மீள முடியுமா இதிலிருந்து? எதைப் பிடித்துக் கொண்டு எப்படி வெளியேறுவது?'—அலறியது மயூரின் ஆவி.

எதைப் பிடித்துக் கொள்வதாவது? காக்கும்ஒரே கரம்உண்டே, அதைத்தான்! வேண்டினால் அதுவே வந்து பிடித்துக் கொள்ளும். 'எப்படி வெளியேற?' என்ற கேள்விக்கு இடம்வைக்காமல் அதுவே இழுத்துப்போட்டு விடும். 'இழுக்கிறது,' 'போடுகிறது' என்று கூட வன்மை காட்டாமல் விளையாட்டாய்க் காத்து விடுவான் கருணாகரன். 'ஏறு மயிலேறி விளையாடு முக'த்தோடு வந்தே 'கூறும் அடியார்கள் வினை தீர்த்து' விடுவான்.

மயூருக்கு அந்த மரகத மயூரப் பெருமானைத் தெரியாது. ஸத்ய ஸாயி, அற்புத ரக்ஷகர்' என்று ஏதோ கேள்விப்பட்டிருக்கிறான். 'அவர் தன்னைக் கொதி குழியிலிருந்து காத்துக் கதி கழல் காட்டுவாரா?'

ஏன் மாட்டார்? கழிவிரக்கத்தோடு நற்கதி வேண்டுவோரின் சேற்றையும் சகதியையும் கழுவிச் செம்பொன்னாக்கவே காத்திருப்பவராயிற்றே! அதிலும் இளைஞரென்றால் உபரியாகவே அன்பும் அருளும் அக்கறையும் பொழிபவராயிற்றே!

"மற்றவர்களிடம் எனக்கு ப்ரியமில்லை என்று ஆகுமா? ஆனாலும் இளம் தலைமுறை என்றால் எனக்கு எப்பவும் ஸ்பெஷல்தான்!" என்பார் ஸ்வாமி. பார பக்ஷமா என்றால், இல்லை. இன்றைய இளைஞர்தாமே வருங் காலத்துக்கு வளம் தர வேண்டிய தர்ம ஆலயச் சிற்பிகளாகவேண்டியவர்கள்? இவர்களேதான் நேர்மாறாக அதர்மச் சம்மட்டியில் அதிகம் அடியுண்டுச் சிதறி விழும் சிற்பங்களாகவும் உள்ளவர்கள். எனவே அப்படிச் சிதறாமல் சேர்த்துப் பிடித்து, அன்பு அச்சில் அற உருவாக அவர்களை வார்ப்பதே தம் தலையாய கடன் என ஸ்வாமி கருதுகிறார். மற்ற வசியங்களில் பலமாக இழுக்கப்படும் அவர்களுக்குத் தமது "வசிய மருந்தா"கிய ப்ரேமாம்ருதத்தை உபரி டோஸ் கொடுக்க வேண்டியதே காலத்தின் அவசியம் எனக் கண்டு அப்படிச் செய்கிறார்.

வந்தார் இப்போது மயூரின் காப்புக்கு! அதுவும் விளையாட்டாகத்தான்! விளையாட்டுக் கரத்தையோ, விளையாடும் முகத்தையோ கூடக் காட்டவில்லை. தம் பாதத்தின் மீது விளையாட்டாகத் தவழும் செவ்வாடையைத் தான் சற்று வீசினார். செவ்வாடை என்று

ரா. கணபதி

கூட மயூருக்குத் தெரியவில்லை. செவ்வொளியொன்று குபீரெனத் தன்னைச் சூழ்ந்து உள்ளிறங்குவதையே உணர்ந்தான்.

கனந்தகாரம் தன்னைக் கபளீகரம் செய்யப் போகிறதென நடுங்கினான்; காப்பாளனை எண்ணிக் கதறினான்; உதயச் செவ்வொளி உட்புகுந்தது. லேசாகப் புகுந்தது — ஆனால் லேஸர்க் கதிரினும் ஆழமாக! ஒரு நொடி தான். அந்த நொடியிலேயே அவனுள் நெடிதாய் வேரோடியிருந்த பழக்க நெடிகளை அறவே அறுத்து விட்டது!

* * * * *

''தெரு நாயாகச் சுற்றிக் கொண்டிருந்தோம்; எங்களைத் தெரு விளக்காகத் தூக்கித் திகழ விட்டு விட்டார்!'' என்று எத்தனை மாணவர்கள் ஸ்வாமியின் ''உருமாற்றும்'' திறனுக்கு உருகிச் சான்று காட்டியுள்ளனர்? ஸத்யஸாயி பெயரைக் கேட்டாலே முகத்தைச் சுளித்த பலரும் கூட வியந்து பாராட்டும் வண்ணம், அடங்காமைக்கே அடைக்கலமாகிவிட்ட மாணவர் ஸமுதாயத்தினரில் எத்தனை பேரை ஒழுக்கக் கட்டுப்பாட்டின் குடியிருப்பாக மாற்றியிருக்கிறார்? ஆயிரமாயிரம் வாலிபர்கள் அவரது ஸே வா தளங்களில் செவ்வையுருப் பெற்றுள்ளனர். நூறு நூறு யுவர்கள் அவரது கல்லூரிகளில் பயின்று, கல் மனம் அன்பில் ஊறிக் கனிவு கண்டிருக்கின்றனர். இதற்கெல்லாம் நானிலம் அவருக்கு நன்றி கூறி மாளுமா?

ஸ்வாமிக் காந்தம் குறிப்பாக எதனால் அவர்களை இழுத்திருக்கிறது? அவர்களின் ப்ரதிநிதியாக ஸஞ்ஜீவ் சௌதுரி சொல்கிறார்: ''என்னை எது பாபாவிடம் இட்டுச் சென்றதென்றால் அவருடைய மிரகிள்தான். ஆனால் அவரது முக்யத்வம் மிரகிளில் இல்லை என்று இன்று கண்டு கொண்டுவிட்டேன்.''

* * * * *

ஒயிட் ஃபீல்ட் ஸத்ய ஸாயி கல்லூரியில் சேர்ந்த பின் டி. வி. ரமணா பட்ட பாடு! 'காலை நாலரைக்குள் எழுந்திருப்பதாம், பச்சைத் தண்ணீரில் குளிப்பதாம்! உடனே ஓம்கார ஜபமாம்! ஸுப்ரபாத ஸேவையாம்! பஜனையாம்! மூவி கிடையாது! நாவல் கூடாது! அரட்டை முடியாது! கிர்தா மீசை, கலர்க் கலர் லுங்கி, ஸிகரெட் — இத்யாதி எண்ணியும் பார்ப்பதற்கில்லை! இதென்ன நரகம்?' என்று தவி த்தார். எப்படி இத்தனை மாணவர்கள் இதை ஸ்வர்க்கமாக வரவேற்று ஆனந்தமாயிருக்கிறார்கள்?' என்று ஆச்சர்யப்பட்டார்.

ஒரு நாட்காலை மாணவர்கள் ஒரே ஆர்வத் துடிப்புடன் போர்ட்டிகோவுக்கு ஓடுவதைப் பார்த்தார், சோர்வின் எல்லைக்குப் போய் விட்ட ரமணா. 'என்ன வந்துவிட்டது இவர்களுக்கு?' என்று அவர் எண்ணும் போதே ஒரு வெள்ளை மெர்ஸிடெஸ் பென்ஸ் உள்ளே நுழைந்தது. அவ்வளவுதான், அந்த விநாடி வரை தொய்ந்து கிடந்த ரமணா இன்ன காரணமென்றே தெரியாமல் ஒரு உத்ஸாஹமுற்று அக்காரின் பின் ஓடினார். கார் நிற்கும் போது, மற்ற மாணவர்களையும் முந்திக் கொண்டு இவரே அதன் கதவருகில் 'நம்பர்—ஒன்'னாக நின்றார்.

காரிலிருந்து புது மலராக இறங்கிய காவலனின் கண் வெட்டு மின்வெட்டாகத் தொட்டது ரமணாவை! அதரத்தில் விஷம நகை நர்த்தனம் செய்தது!

குறும்புச் சிரிப்பு ரமணாவின் உயிர்க் குருத்துள் சிலிர்த்தது. அங்கே ஒரு நயாகராவைப் பெருக்கிறது. அது அடித்துத்தள்ளிக்கொண்டு போய் விட்டது ரமணாவின் அத்தனை எதிரிடை எண்ணங்களையும், ஏறு மாறுப் போக்குகளையும்!

'இப்படியும் ஓர் அன்புச் சக்தியா?' — தாங்க முடியவில்லை அவரால். ஹாஸ்டலுக்குப் போய்த் தலையைக் கைகளில் புதைத்துக் கொண்டு அமர்ந்தார். காலில் ஏதோ கசியும் உணர்வு. குனிந்து பார்த்தார். குருதிச் சொட்டுக்கள்!

குறும்பு நகை இவரது உயிர்க் குருத்திலிருந்த விஷத்தையெல்லாம் இக்குருதிச் சொட்டுக்களில் வடித்து விட்டதா?

அதென்னவோ தெரியாது. ஆனால் அன்றிலிருந்து இவருக்கு அந்த 'நரகம்' ஏனைய மாணவர்களுக்கு இருந்தது போல ஸ்வர்க்கமாக இல்லை. அதற்கும் மேலே ஆனந்த மோக்ஷலோகமாயிற்று!

புது மணம் கண்ட ரமணா மாணவ மணிகளுள் ஒருவரானார்!

* * * * *

ஜீவன் என்ற ஒயிட் ஃபீல்ட் மாணவனை ஸ்வாமி வாட்டியெடுத்தார்! எப்படி? அடியோடு புறக்கணித்துத்தான். தமது இன்சொல்லோ, மென் நகையோ, கண் சிமிட்டோ எதுவுமே அவனுக்கு அருளாமல் பல நாட்கள் சோதித்தார். அப்புறம் புட்டபர்த்தியும் சென்றுவிட்டார். ஜீவனுக்கு ஜீவனே போனாற் போலாயிற்று. 'எதற்காக இப்படி வறுத்தெடுக்கிறார்?'

ஸ்வாமியிடமிருந்து மாணவர்களுக்குக் கடிதம் வந்திருக்கிறதென அறிவிப்பு வந்தது. கடித வாசகம் கேட்க அனைவரும் குழுமினார்கள்.

''அவச்யமில்லாத வளவளப் பேச்சைத் தவிர்க்கவும். இதுவே ஸாயிக்கு மகிழ்ச்சி தருவது. உங்களுக்கு உதவ எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் ஸாயி காத்திருக்கிறேன்'' என்று கடிதம் கூறிற்று.

அவ்வளவுதான்! ஜீவனுக்குப் புரிந்துவிட்டது. 'பேச்சைக் குறைக்க வேண்டுமென்பது நாயகர் பன்முறை வலியுறுத்தியிருந்தும் நாம் நா காவாமல் என்ன அரட்டை அடிக்கிறோம்? இவனால் நமக்கும் கெட்ட பெயர் வரும் என்று ஸஹ மாணவர் அஞ்சி அசட்டை செய்யுமளவுக்கல்லவா ஆக்கிக் கொண்டிருக்கிறோம்?'

ஸ்வாமி தன்னிடம் மறக்கருணை பாலித்ததாகவே உணர்ந்தான் ஜீவன். இனி அவச்ய

ஏன் நவராத்திரி விழாக்களில் எல்லா பெண்களையும் ஜாதிமத வித்தியாசம் இல்லாமல் அழைத்து மஞ்சள் குங் குமம் கொடுக்க வேண்டும்?

யா தேவீ ஸர்வபூதேஷு ஜாதிரூபேண ஸம்ஸ்திகா

நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை

நமோ நம

(எல்லா உயிர்களிடத்தும் எந்த தேவி ஜாதி வடிவில் உறைகின்றாளோ அவ ளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்) நமோ, நம]

தேவி மகாத்மியம்

நவராத்திரி தினங்களில் மஞ்சள் குங்குமத்துடன் கிராண்ட் ஸ்வீட்டையும் வாங்கி எல்லா பெண்களுக்கும் கொடுக்கவும்.

இனிப்பு வகைகள்:— அதிரசம், பாம்பேகாஜா, தேங்காய் போளி, குங்குமப்பூ விட்ஹல்வா, குங்குமப்பூ ஜாங்கிரி, குங்குமப்பூ லட்டு, மங்களூர் போளி, பொரிவிளங்காய் உருண்டை, ஸோன் பப்டி, ஸ்வீட் ஸோமாஸ், ரசகுல்லா, ரசமலாய், ரவாலாடு.

காரவகைகள்:— கைமுறுக்கு, முள்ளுதேன்குழல், மிளகு வடை, ரிப்பன் பக்கோடா, உருளைக்கிழங்குசிப்ஸ், ஸ்பெஷல் மிக்ஸர், சீடை, தட்டை, தேன்குழல், வறுபயறு, வாழைக்காய் சிப்ஸ், வெஜிடபிள் சமோசா.

பொடிவகைகள்:— சாம்பார்ப்பொடி, ரசப்பொடி, இட்லி பொடி, பருப்புப்பொடி, கருவேப்பிலைபொடி.

திருமண வைபவங்களுக்கு:— சீர்முறுக்கு, அதிரசம், முள்ளுதேன்குழல், திரட்டிப்பால், பருப்புத்தேங்காய் வகைகள் செய்து தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின்ரோடு, காந்திநகர், அடையாறு,
சென்னை - 600 020 போன்: 412557

மின்றி வாய் திறப்பதில்லை என உறுதி பூண்டான். அவரிடம் மன்னிப்புக் கோரினான், மானஸிகமாக. 'பிழை புரிவது மானுட இயற்கை; மன்னித்தருள்வது தெய்வ இயற்கையாயிற்றே!! மன்னிப்பாய், ஸ்வாமி!' என வேண்டினான்.

ப்ரார்த்தனையின் ஆழம் அவனை எங்கோ இழுத்துச் சென்றது! ஆனால் அதிசயம்! ஆழத்துக்கு அல்ல! ஆகாயத்துக்கு அல்லவா அவனை எதுவோ தூக்கிவிடுகிறது! எதுவோவா? இறகுகள் கொண்ட இரு தேவதைகள்தாம் அவனது இருபுறமும் கரத்தைப் பற்றி வானுக்கு உயர்த்துகின்றன!

வானிலிருந்து உருள்கிறான் ஜீவன்! ப்ரசாந்தி நிலயத்தில் ஸ்வாமியின் பேட்டியறை வாயிலில் கிடக்கிறான்!

அறைக் கதவம் திறக்கிறது. ஸ்வாமி வந்து நிற்கிறார். முகம் குளிர அவனை நோக்குகிறார். அந்த நோக்கு ஜீவனது அகத்தின் அடியாழம் வரை துழாவிச் சென்று ஸுகத்தைச் சொரிகிறது.

ஸ்வாமியின் பாதத்திலே ஒட்டிக் கொள்கிறான். அவர் அவனைக் குனிந்து வாரி எடுத்துக் கொள்கிறார். குலுக்குகிறார்.

இல்லை, இல்லை, ஸ்வாமி இல்லை. ஸஹமாணவனொருவன்தான் ஜீவனைக் குலுக்குகிறான். "என்ன ஜீவன், பட்டப்பகலிலா தூக்கம்? எழுந்திரு. வார்டன் உன்னைக் கூப்பிட்டனுப்பியிருக்கிறார். ஓடு" என்றான்.

ஜீவன் வார்டனிடம் ஓடினான். அவரை ஒரு சிறிய மாணவ கோஷ்டி சூழ்ந்திருந்தது. "ஸாயிராம்" என்று மகிழ்ச்சியோடு அவனை வரவேற்றார் வார்டன். "ஸ்வாமியிடமிருந்து ஃபோன் வந்திருக்கிறது. துணைப் பிரதமர் புட்டபர்த்திக்கு வருகிறாராம். அப்போது நம் மாணவர் சிலர் அங்கிருக்க வேண்டுமென்று ஸ்வாமி விரும்புகிறார். அவரே உங்கள் பெயர்களை 'ஸெலக்ட்' செய்து, ஃபோனில் தெரிவித்திருக்கிறார். சட்டென்று 'ரெடி' ஆகுங்கள்" என்றார்.

வானில் பறப்பது போலவேதானிருந்தது ஜீவனுக்கு.

மெய்யாலுமே ப்ரசாந்தி நிலயப் பேட்டியறை வாயிலை அடைந்தான். சொல்லிவைத்தாற் போல் கதவம் திறந்தது. ஹிதமான கதகதப்புடன் வெளிவந்தார் மன்னிப்பு மன்னர். அவரது மலரடியில் ஒட்டிக் கொண்டான் ஜீவன். அகவெளிக் காட்சியிற் கண்டாற்போலவே அவர் குனிவதை உணர்ந்தான் நவ ஜீவனம் பெற்ற ஜீவன். அப்புறம்... அந்த அன்புக் கரங்கள் அப்போது செய்தாற் போலவே அவனை வாரித்தூக்கவும் செய்தன!

அதற்காகத்தானே தேவதைகளை அனுப்பித் திருவிளையாடல் செய்ததே?

(தொடரும்)

இப்பொழுது நடைபெறுகிறது ஆனந்த் A/C

சங்கம் A/C (பகல் காட்சி) லிபர்டி [3 காட்சிகள்]

மற்றும் தென்னாடெங்கும்

காலத்தால் அழிக்க முடியாத காவியங்கள் படைத்த
ஜெமினியின் அடுத்த படைப்பு—இரு இளைய
நெஞ்சங்களின் உயிர்த்துடிப்பு!

சத்தான கதைக்கு-ஐந்து முத்தான பாடல்கள்.
மெல்லிசை மன்னரின் தெவிட்டாத தேனிசையில்
உள்ளத்தைப் பறிகொடுத்த ரசிகர்களே!
உங்கள் ஆவலைத்தீர்க்க விரைவில் வருகிறாள்....

பழனியப்பன் ராமசாமி அளிக்கும்

ஜெமினியின்

ஜனனி

இசை — M.S. விஸ்வநாதன்
ஒளிப்பதிவு — சோமந்துராய்
விஸ்வம் நடராஜ்

கதை திரைக்கதை வசனம்
பாடல்கள் டைரக்‌ஷன்
நேதாஜி



உணர்வுகள் உறங்குவதில்லை

ர.சு.நல்லபெருமாள்

10. குருதியில் தொடரும் குணம்!

மாலையில் பத்திரிகை அலுவலகத்திலிருந்து புறப்பட்ட சந்திரசூடன் தம் 'ரோல்ஸ் ராய்ஸ்' வாகனத்தில் சுகமாக உலா வந்து கொண்டிருந்தார். மாலை வேளையில் சைக்கிளில் சவாரி செய்வது அவருக்கு ஆனந்தமான அனுபவம்.

சைக்கிளை நிதானமாக மிதித்தபடி, சுற்றுமுற்றும் பார்த்து ரசித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். சைக்கிளோடு அவருடைய நிழலும் கூடவே ஓடி வந்தது. கூட வந்து கொண்டிருந்த நிழலைச் சற்று நேரம் கவனித்தார். இந்த நிழலைப் போல்தான் 'நிழல்' பத்திரிகையின் ஆசையும் அவரைத் தொடர்ந்துவருகிறது. இந்தஆசையும்வெறும் நிழலாகவே முடிந்து விடுமோ...?

ஒரு பெரிய கட்டடத்தின் அருகே வந்ததும் சைக்கிளின் வேகத்தைக் குறைத்தார். கட்டடத்திற்கு வெளியே,கிட்டத்தட்ட நூறு கார்களுக்குமேல் வரிசையாகப் பல நிறங்களில் நிறுத்தப்பட்டிருந்தன. இன்னொரு பக்கத்தில் ஸ்கூட்டர்கள் வரிசையாகக் க்யூவில் நிற்பது போல் நின்று கொண்டிருந்தன.

சந்திரசூடன் சைக்கிளை நிறுத்தி ஒரு காலைத் தரையில் ஊன்றியபடி ஓரமாக நின்று கவனித்தார். கார்களிலிருந்தும் ஸ்கூட்டர்களிலிருந்தும் இறங்கிய பல தரப்பட்ட நாகரிகமனிதர்களை வேடிக்கை பார்த்தார்.

''என்னப்பா,'ரோல்ஸ்ராய்ஸில்' ஏறிவிட்டால் சிந்தனையில் உலகத்தையே மறந்து விடுவாய் போலிருக்கிறது'' என்ற குரலைக் கேட்டுச் சைக்கிளை நிறுத்தினார் சந்திரசூடன்.

சிட்டி கிளப் வாசலில் குமார் நின்று கொண்டிருந்தார். சந்திரசூடன் சைக்கிளிலிருந்து இறங்கி அவருடன் கிளப்பை நோக்கி நடந்தார்.

''உன்னுடைய 'நிழல்' பத்திரிகை விஷயம் என்னவாயிற்று?'' என்று கேட்டார் குமார்.

''நிழலாகவே இருக்கிறது. பணம் வேண்டுமே. இந்திராணியின் கதையை எழுதி முடித்து விட்டால் மாதவி செட்டியார் பணம் தருவார்.''

''அப்படியானால் சீக்கிரம் எழுதி முடிக்க வேண்டியதுதானே?''

''எழுதுவது என்றால் என்ன, ஒன்றைப் பார்த்து டைப் அடிக்கிறது மாதிரியா? எழுதுவதற்குத் தகுந்த சூழ்நிலை வேண்டும், மனத்தில் உற்சாகம் வேண்டும்...''

''எல்லாவற்றிற்கும் மேல் உன் சோம்பேறித்தனம் உன்னை எழுத அனுமதிக்க வேண்டும்...''

''ஆமாம், அதுதான் முக்கியம்,'' என்று சிரித்தார் சந்திரசூடன்.

''வடிகட்டின சோம்பேறியப்பா. உன்னைப் பார்க்கத்தான் இன்றைக்கு இங்கே வந்தேன்'' என்றார் குமார்.

''ஓ! அந்தக் கைதியைப் பற்றிய விவரம் கிடைத்து விட்டதா? அவனுடைய விடுதலைக்கு நீ சிபார்சு செய்யலாம் அல்லவா?'' என்று ஆவலுடன் கேட்டார் சந்திரசூடன்.

''நன்னடத்தை அதிகாரிஎன்கிறமுறையில் நான் அவனுக்குச் சிபாரிசு செய்ய முடியாது'' என்றார் குமார்.

இருவரும் கிளப்பிற்குள் சென்று ஒரு தனி இடத்தில் சோபாவில் அமர்ந்தனர்.

''சீக்கிரம் உணர்ச்சிவசப்படுபவன்; அவ்வளவுதான். அவனைத் திருத்த முடியும். புத்திசாலி'' என்றார் சந்திரசூடன் திடமாக.

''பிறவிக் குணத்தை மாற்ற முடியாது. குற்றம் புரியும் தன்மை அவனுடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கிறது. பரம்பரை பரம்பரையாக ஒட்டி வரும் குணம் இது.''

''சூழ்நிலை மாறினால் குணமும் மாறும். இந்த உலகத்தின் மீது அவனுக்கு நம்பிக்கையும் பிடிமானமும் ஏற்படும்படி செய்து விட்டால் திருந்திவிடுவான்.''

"அவன் இப்போது நான்காவது தடவை யாகச் சிறையில் இருக்கிறான். ஒரு வழிப்பறி, ஒரு கத்திக் குத்து, ஒரு கலவரம். இப்போது கடைசியாக, கற்பழிப்பு முயற்சி" என்றார் குமார்.

சந்திரசூடன் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஓ...! கற்பழிப்பு முயற்சியா? நாலாவது முறையாகச் சிறையா? அவனைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே?" என்றார்..



''அதுதான் சொன்னேனே இரத்தத்தில் ஊறிப் போன குணம் என்று. இவனுடைய தகப்பன், வேலை செய்த இடத்தில் பணத்தைக் கையாடியவன். இவனுடைய தாத்தா இரட்டைக் கொலை செய்தவன். இவனுடைய முப்பாட்டன் தீவட்டிக்கொள்ளையடித்தவன். முன்னோர்களுடைய 'ஜீன்ஸ்' இவன் இரத்தத்திலும் ஆட்சி செலுத்துகின்றன. இவனுக்குப் பிள்ளை பிறந்தால், அதனிடமும் இந்த ஜீன்ஸ் தொடரும். இந்த மாதிரி நபர்களையெல்லாம் குழந்தை பெற முடியாமல் காயடிக்க வேண்டும்.''

''இதைக் கேட்டுச் சந்திரசூடன் சிரித்தார். ''அதெல்லாம் ஜனநாயக நாட்டில் முடியாது. பரம்பரைக் குணம் இரத்தத்தில் தொடர்ந்தாலும், நல்ல சூழ்நிலையை உண்டாக்கி, குற்றவாளியைப் பண்படுத்த முடியும்'' என்றார்.

''முன்னோர்களின் ஜீன்ஸின் ஆதிக்கம் இவனிடம் வந்த பிறகு மாற்றுவது இயலாது.

விதையிலேயே விஷம் மண்டியிருக்கும் போது மண்ணை மட்டும் வளப்படுத்தி என்ன பயன்? இவன் பி. ஏ. வரை படித்திருக்கிறான். நல்ல சூழ்நிலை கிடைத்தது. என்ன பிரயோஜனம்?''

''எனக்கு அவன் மீது நம்பிக்கை இருக்கிறது.''

''தண்டனை பற்றி உனக்குத் திட்டவட்டமான கொள்கை உண்டு. தண்டனை பற்றிய செமினாரில் நீ பேசிய போது கற்பழிப்புக் குற்றம் புரிந்தவனுக்குத் தகுந்த தண்டனை, காயடிப்பது என்றாயே. இப்போது இந்தக் குற்றவாளிக்காகச் சிபாரிசு செய்கிறாயே?''

''இவனைப் பொறுத்தவரை திருத்திவிட முடியும். நான் திருத்தி விடுவேன்'' என்றார் சந்திரசூடன் திடமாக.

அப்போது பணியாள் இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் பழரசம் கொண்டு வந்து ஸ்டூலின் மீது வைத்தார். இருவரும் ஆளுக்கொன்றாக எடுத்த போது பேராசிரியர் கோபால் அங்கே வந்தார். கையில் ஒரு கண்ணாடித் தம்ளர். அதில் சீமைச் சாராயம். கண்களில் உற்சாகம்.

''சந்திரன் சார், வெறும் பழரசந்தானா?'' என்றார்.

''இதுவே போதும்'' என்று சிரித்தார் சந்திரசூடன்.

''இதோடு கொஞ்சம் விஸ்கியையும் சேர்த்துச் சாப்பிடுங்கள். ஆனந்தமாயிருக்கும். சீமைச் சரக்காக இருந்தால் அருமை.''

''சீமைச் சரக்கு யார் தருகிறார்கள்?''

''ஓ, நான் தருகிறேன்'' என்று கூறியபடியே கைப்பையைத் திறந்தார். உள்ளேயிருந்து ஓர் அழகான கண்ணாடி பாட்டிலை எடுத்து மூடியைத் திருகினார். சந்திரசூடன் வைத்திருந்த தம்ளரில் ஊற்றப் போனார். சந்திரசூடன் மறுத்துத் தம்ளரை ஒரு கையால் மூடினார்.

''நோ நோ, திறந்த பாட்டிலைச் சும்மா மூடக் கூடாது. இது ராமபாணம் மாதிரி. பாணத்தை வில்லில் பூட்டிவிட்டால் பிறகு அது நிற்காதாமே. அது மாதிரிதான் இதுவும். பாட்டிலைத் திறந்து விட்டால் பிறகு ஊற்றாமல் மூடக் கூடாது. இது மது சாஸ்திரம். கையை எடுங்கள்'' என்றவாறே சந்திரசூட



மெக்கா நகரம் எப்படி முஸ்லிம்களுக்கு ஒரு புனித நகரமோ அதுபோல்தான் திண்டுக்கல் எங்களுக்கு ஒரு புனித நகரமாகும்.

— கே. ஏ. கிருஷ்ணசாமி.

நாட்டில் பெரும்பாலான மக்கள் பேசுகிறார்கள் என்பதற்காக மட்டுமே இந்திக்கு ஆட்சி மொழி அந்தஸ்து தரப்படவில்லை. அந்த மொழியின் தொன்மை, அதன் வரலாற்றுப் பின்னணி ஆகியவை காரணமாகவே அதற்கு அந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது.

— ராஜீவ் காந்தி.

நாம் (அமைச்சர்கள்) எல்லாம் சைபர்கள் என்று கூற நமக்கு என்ன தகுதி உண்டு? அப்படிப் பேசுகிறவர்கள் (திருநாவுக்கரசு) ஒன்று வடிகட்டிய முட்டாள்களாக இருக்க வேண்டும் அல்லது கடைந்தெடுத்த அயோக்கியர்களாக இருக்க வேண்டும்.

— கா. காளிமுத்து.

ராஜீவ் காந்தி, மகாத்மா காந்தியின் பேரன்; இந்திரா காந்தி மகாத்மாவின் மகள் என்பது போன்ற உணர்வுகளைத்தான் ஒரு சராசரி அமெரிக்கனுக்குப் பத்திரிகைகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

— சுப்பிரமணியம் ஸ்வாமி.

கருணாநிதிக்கு அறிவும் ஆற்றலும் திறமையும் அதிகம் உண்டு. அவர் வசனம் எழுதி சிவாஜி நடித்த பராசக்தி படத்தை இன்னும் நான் விரும்பிப் பார்ப்பேன். ஆனால் கருணாநிதி நல்லவர் இல்லை; வஞ்சகர். கட்சியை வளரவிட மாட்டார். என்ன போராட்டம் நடத்தினாலும் இனி கருணாநிதிக்கு அரசியல் வாய்ப்பே இல்லை.

— நெடுஞ்செழியன்.

பால ஜோதிடம்-எண்கள்

அக்டோபர் 15-ம் தேதி

முதல் வெளிவருகிறது



பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் வாழ்வுக்கு வளமூட்ட அக்டோபர் 15-ம் தேதியிலிருந்து மாதம் இருமுறையாக வழக்கம்போல் பாலஜோதிடம்-எண்கள் பத்திரிகை வெளிவரும்.

பால ஜோசியரின் சொந்தப் பொறுப்பில் புதிய முறையில் வெளிவருகிற இப்பத்திரிகைக்கு எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. பழைய ஏஜெண்டுகளும் புதிய முறையில் தொடர்பு கொள்ளலாம்.

சந்தா தாரர்கள் சந்தாத் தொகையைச் செலுத்தி புதிதாகத் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

முகவரி:

பால ஜோதிடம்-எண்கள்
T-17, 6-வது அவென்யூ
பெசன்ட் நகர்,
சென்னை-600 090
தொலைபேசி எண் : 411563

ஆண்டுச்சந்தா :	ரூ	48.00
6 மாதச்சந்தா :	ரூ	24.00
தனிப்பிரதி :	ரூ	2.00

Majestic/4036

"கல்கி"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	78—00
ஆறு மாதச் சந்தா	ரூ.	39—00
வெளிநாடு கப்பல் தபால் மூலம்		
ஆண்டுச் சந்தா	ரூ.	190/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	95/-

"மங்கையர் மலர்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா*	ரூ.	24/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	12/-
வெளிநாடு கப்பல் தபால் மூலம்		
ஆண்டுச் சந்தா	ரூ.	70/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	35/-

"கோகுலம்"

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா	ரூ.	24/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	12/-
வெளிநாடு கப்பல் தபால் மூலம்		
ஆண்டுச் சந்தா	ரூ.	70/-
ஆறு மாதச் சந்தா	ரூ.	35/-

சந்தா தொகையை M.O. அல்லது I.P.O. அல்லது டிமாண்டு டிராப்டு மூலம் அனுப்ப வேண்டும்.

மானேஜர் ❊ கல்கி ❊ சென்னை-600032


"எப்படி இருந்தாலும் அந்த டி.வி. பொண்ணு டிரஸ் பண்ணிட்டிருக்கர மாதிரி இவளை இப்படி ராகமாலிகா சேலையை கட்டிட்டுதான்டா பண்ரு. அதுவரைக்கும் க்ஷேமம்."
"இவளாலே பெஜாரா போச்சப்பா ஒலிம்பிக்ஸ் டி.வியிலே வந்ததும் இவளும் ஆரம்பிச்சுடரு நாளைக்கு பூசாரியை கூப்பிட்டு மந்திரிக் கலாம்னு இருக்கேன்."

னின் கையை விலக்கிவிட்டுத் தம்ளரில் விஸ்கியை ஊற்றினார்.

''இது விஷயத்தில் மறுப்பே கூடாது'' என்ற கோபால்,குமாரிடம் திரும்பி, ''குமார், சார், உங்களுக்கும் கொஞ்சம்?'' என்றார்.

''ஓ. தாராளமாக ஊற்றுங்கள்'' என்றவாறு தம்ளரை நீட்டினார் குமார். அவருடைய தம்ளரிலும் மதுவை ஊற்றினார் கோபால். பிறகு பாட்டிலை மூடி, கைப்பைக்குள் வைத்தார். பிறகு தம்முடைய கையிலிருந்த தம்ளரை உயரத் தூக்கிப் பிடித்தார். ''சியர்ஸ்'' என்றார்.

குமாரும் சந்திரசூடனும் தம்ளர்களைத் தூக்கிப் பிடித்து, ''சியர்ஸ்'' என்று கூறிவிட்டு, தம்ளர்களிலிருந்து உறிஞ்சத் தொடங்கினர்.

கோபால் ஒரு ஆபாச சினிமாப் பாட்டை முனகியபடியே சீட்டாடும் இடத்தை நோக்கி நடந்தார்.

''சரியான மொடாக் குடியர்'' என்றார் குமார்.

''கவனித்தாயா? நமக்கு ஊற்றிவிட்டு ரொம்பக் குறைந்து விட்டதோ என்ற கவலையோடு பாட்டிலைப் பார்த்தாரே'' என்றார் சந்திரசூடன்.

''உன்னுடைய அபிமானக் கைதிக்கு இந்தப் பழக்கம் இல்லை. இதுவும் இருந்திருந்தால் என்னென்ன செய்திருப்பானோ?'' என்றார் குமார்.

''அவனை வெளியே விட்டால் நல்லபடியாக அவனை வாழ வைக்க முடியும்.''

''விஷப் பரீட்சையில் இறங்குகிறாய். சரி, நான் அவனைச் சிறையில் சந்தித்துப் பேசிப் பார்க்கிறேன். பிறகு இது பற்றி முடிவு செய்யலாம்'' என்றார் குமார். தம்ளரைக் கையில் ஏந்தியபடியே பில்லியர்ட்ஸ் விளையாடும் அறையை நோக்கிச் சென்றார்.

சந்திரசூடன் சோபாவில் சாய்ந்தபடியே மது கலந்தபழரசத்தைக்கொஞ்சம்கொஞ்சமாக உறிஞ்சி ரசித்துக் கொண்டிருந்தார்.

உடல் இலேசாகியது போன்ற உணர்வு. உற்சாகம் கூட உள்ளூர ஏற்பட்டிருப்பது போலிருந்தது. தமக்கு ஏற்படும் உணர்வுகளைத் தாமே ரசிக்கத் தொடங்கினார்.

சந்திரசூடன் கையிலிருந்த தம்ளரை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். தம்ளரில் இருந்த திரவம் விளக்கொளியில் பளபளத்தது. அந்தத் தம்ளருக்குள்ளிருப்பது நெருப்பு மாதிரி. அதைப் பயன்படுத்தத் தெரிந்தவனுக்கு அது இன்பத்தை அள்ளிக் கொடுக்கும். தெரியாதவனை எரித்துச் சாம்பலாக்கி விடும். முதன் முதலில் அவர் மது அருந்திய அனுபவம் நினைவில் வந்தது. இந்திராணி ஊற்றிக் கொடுத்தாள். பாவம், அநியாயமாக இறந்து விட்டாளே...

அன்று இரவு இந்திராணியின் வரலாற்றை எழுதத் தொடங்குவதாயிருந்தார். அவளைப் பற்றிய நினைவிலேயே மது கலந்த பழச்சாற்றை உறிஞ்சிக் கொண்டிருந்தார். உற்சாகம் உள்ளூரப் பெருகிக் கொண்டிருந்தது.

(தொடரும்)

பூவுடல்கள் வளைந்திடுமே,
புதியதோர் பொலிவு பிறந்திடுமே!




நினைவுகள் நிறைந்திடும் அழியாத
கோலமே வாழ்க்கையெனும் அற்புதம்.
பாசம், நேசம், உல்லாசம், பெருமிதம் போன்ற
நவரசம் ததும்பும் தருணங்கள் எங்கும்,
எப்போதும் நேரலாம்.

அத்தருணமே அவற்றைப்
புகைப்படமாக எடுத்திடுவீர்! குறிப்பாக,
பிளாக் & ஒயிட் பிலிமில் எடுத்தால்
அவை காலமெல்லாம் மங்காது.

புகைப்படங்கள்,

என்றென்றும் வாழும் பசுமையான
நினைவுச் சோலைகள்.



**மனம் அள்ளும்
நினைவுகளை
சிறை கொள்ளும்!**

INDU

**இந்து ரோல் பிலிம்
மற்றும் ப்ரோமைடுகள்**

Sista's - HPF.369.85 TM

செய்தி என்பது யாரும் எழுதிவிட முடியாது. எதிலும் செய்தி இருக்கிறது. அதைப் பார்க்கிற கோணம் மட்டும் ஒருவருக்கு ஒருவர் மாறுபடும்.

சிந்தனைச் செல்வம் சிவதாணுப் பிள்ளை (ஆசிரியர்: சிந்தனை) செந்தமிழில் ஜர்னலிஸம் (தமிழ்) வகுப்பு நடத்திக்கொண்டிருந்தார். வருங்காலத்து எழுத்துலகச் சிற்பிகள் அவரது நயமான தமிழ் நடையால் அணு அணுவாகச் 'செதுக்கப்' பட்டுக்கொண்டிருந்தார்கள்.

''செய்தி எழுதுவது எப்படி என்பதை இன்று பார்க்கப் போகிறோம் செல்வங்களே! (செல்வம் என்பது அவரது பெயருக்கு முன் இடம்பெற்ற காரணம் காண்க!) செய்தி என்பது யாரும் எழுதிவிட முடியாது. எதிலும் செய்தி இருக்கிறது. அதைப் பார்க்கிற கோணம் மட்டும் ஒருவருக்கு ஒருவர் மாறுபடும்.

சற்று நிறுத்திவிட்டு, நிதானமாகத் தம்-பொடிடப்பாவிலிருந்து காரம், மணம், குணம் நிறைந்த பட்டணம் பொடியை எடுத்துச் 'சர்' ரென்று உறிஞ்சினார்.

''இப்போது நடந்த நிகழ்ச்சியைப் பார்த்தீர்கள். பண்படாத.... அதாவது இந்த வகுப்புகளில் படித்து என்னால் பண்படுத்தப் படாத ஒருவர் எழுதினால் இதைப் பற்றி என்ன எழுதுவார்?''

ஆசிரியர் பொடி போட்டார்!''

''இதைத் தவிர என்ன 'மெஸேஜ்' கொடுக்க முடியும்? இதில் வேறொன்றும் இல்லை. இது சாதாரண நிகழ்ச்சி. ஆனால் என் மாணவனுக்கு.....?

வகுப்பை ஒருமுறை சுற்றிப் பார்த்தார், பெருமிதமாகத் தலையை ஆட்டிக் கொண்டு!

''என் மாணவனுக்கு இது சாதா நிகழ்ச்சியா? இல்லை, அவன் எப்படி எழுதுவான்?

''புள்ளி விவரங்களை அள்ளித் தரும் பத்திரிகை நிருபராய் என் மாணவன் இருந்தால்....

''24 மில்லியன் பொடி விரும்புவோரில் நம் ஆசிரியரும் ஒருவர் என்பதை விவரித்து 'மில்லியனில் ஒருவர்' என்ற தலைப்பில் உலக மக்கள் பொடிக்காகச் செலவழிக்கும் தொகை, ஒரு நாட்டின் ராணுவ பட்ஜெட்டுக்குச் சமம் என வாதிட்டு, கடைசி 'பின்ச்' சாக, ஸாரி 'பன்ச்' ஆக, 'அதனால்தான், மூக்குப் பொடிக்கு 'Gun Powder' என்ற பெயரோ?' என்று நகைச்சுவையாக முடித்து வைப்பான்.

''இதுவே பரபரப்பான செய்திகளைத் தாங்கி வரும் பத்திரிகையில் என் மாணவன் நிருபரானால்....?

— வகுப்பறையில் அணுகுண்டு?

— டைம்பாம்....? வைத்தவர் யாரென்று தெரியவில்லை. இன்று காலை சிந்தனைச் செல்வம் சிவதாணுப் பிள்ளையின் ஜர்னலிஸ வகுப்பு நடந்து கொண்டிருக்கும்போது, மாணவர்களின் கவனம் எல்லாம், ஆசிரியரின் மேஜைக்கு அடியில் சிதறியிருந்த கருமையான, சற்றே வெளுப்பான, கந்தகப் பொடி போன்ற நெடியுடைய, சிதறல்களைக் கண்டு நடுங்குவதிலேயே இருந்தது.

சப் டைடில்: டைம்பாம்.

யாராவது டைம்பாம் வைத்திருப்பார்களோ?

சப் டைடில்: ஒரு வழியாக

ஒரு வழியாக வகுப்பு முடிந்ததும், தைரியசாலி மாணவர் ஒருவர் அருகில் சென்று ஆராய்ந்ததும், ஆசிரியர் அவ்வப்போது போட்ட பொடியின் சிதறல்களே தவிர, வேறொன்றும் ஆபத்தானவை அல்ல என்று புரிந்து சிரித்தார்கள்..... இப்படி எழுதுவான்.

''சரி, இதையே அரசியல் கட்சி சார்புடைய பத்திரிகையாளனாக இருந்தால் எப்படி?''



கேள்வி கேட்டுவிட்டு மீண்டும் தொடர்ந்தார்:

"முன்னே சொன்னாப்பல சப் டைடில்களோட எழுதிட்டு, தைரியசாலி மாணவன் என்கிற பகுதிக்கு வர்றப்ப மட்டும், அந்த மாணவனைத் தன் கட்சி மாணவப் பேரவையின் செயலாளர் என்றும், அஞ்சா நெஞ்சன், தீரன், தியாகி என்ற அடைமொழி ஏதாவது சேர்த்து, இளங்குருத்து, இளஞ்சிட்டு, இளநிலா, இளங்கதிர் என்ற அலங்கார மொழியையும் இணைத்து, உயிரையும் பொருட்படுத்தாது, தன் உடன் பிறவாதவர்களைக் காக்க ஓடினான். நல்லவேளை, நம் ஆசானின் ஆபத்தில்லாத நாசி (!)த்தூள் என்பதால் அவன் உயிர் தப்பியது! எதிர்க்கட்சியினரின் சதி அம்பலமாகியது (!). இத்தகைய தியாகச் செம்மல்கள் இருக்கும் வரை நாடு நம் வரலாற்றை ஏதாவது ஒரு 'இங்க்'கில் எழுதியே தீர வேண்டும்..... என்று முடித்து வைப்பான்."

சிவதாணுப் பிள்ளை மீண்டும் ஒருமுறை பொடி உறிஞ்சிக் கொண்டார்.

"இப்படி ஒரு சாதாரண பொடி நிகழ்ச்சியையும் தன் செய்தியாகப் பார்ப்பது ஒரு நிருபனின் கடமை. அப்படிப்பட்டவர்களே சிறந்த செய்தியாளர்களாக வரமுடியும்! சரி! இன்று வகுப்பில் நடந்தவற்றை ஒரு செய்தியாக மாற்றி என் அறைக்குக் கொண்டு வாருங்கள்." அரை மணிக்குப் பிறகு வந்த செய்திகளைப் படித்த சிவதாணுப் பிள்ளை சிவதாண்டவமே ஆடினார். அவரை அப்படி ஆட வைத்த செய்தி என்ன?

ஆடல் பாடலை விமரிசிக்கும் மாணவனின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட செய்தி:

"தடங்கலுக்கு வருந்துகிறோம்!

"சென்னை — இன்று சிந்தனை ஆசிரியர் சிவதாணுப்பிள்ளை பொடி போடுவது எப்படி என்பது பற்றி ஒரு 'லெக்சர் கம் டெமான்ஸ்ட்ரேஷன்' கொடுத்தார். அவர் பொடியை எடுத்த விதம், அதை உதறிய லாகவம், அவர் நோஸுக்கு எடுத்துச் சென்ற நாஸுக்கு, ஜெட் வேகத்தில், 'எடுத்தது கண்டனர், உறிஞ்சியது கேட்டனர்' பாணியில் அவர் அதைத் திணித்த பாங்கு, எல்லாமே ஒரு திறமை வாய்ந்த நாட்டிய ஆசிரியரின் திறனை வெளிப்படுத்திற்று. அதைக் கண்ணுற்று இருந்த அவரது செல்வங்களான மாணவமணிகள் கண் கலங்கினார்கள். பாசத்தினால் அல்ல, பொடி செய்த மோசத்தினால். என்னதான் திறமை வாய்ந்தவராக இருந்தாலும், சட்டி சுட்டதடா, பாணியில் ஆசிரியர் ஒரு சாதாரணப் பொடி போடுபவனாக நடந்து கொண்டு பொடியை வகுப்பறையைச் சுற்றி உதறியதே காரணம்!

"இதற்கிடையே அவர் செய்தி எழுதுவதைப் பற்றியெல்லாம் எதை எதையோ சொல்லிக் கொண்டிருந்தது பெரிய தடங்கலாகத்தான் இருந்தது! பார்வையாளர்களுக்கும் ஏன் என்று விளங்கவில்லை!"

புத்திசாலி மாணவன் பெயரைப் போடவில்லை!

இப்போதெல்லாம் சிவதாணுப் பிள்ளை பொடியைப் பற்றிப் பேசி அறுப்பதில்லை!

அருள் வாக்கு

கர்மா என்றால் என்ன? கர்மம் என்பது காரியம். ஒரு வேஷ்டியை உண்டாக்குவதற்கு எவ்வளவு காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன. பஞ்செடுத்து கொட்டை பிரித்து, நூல் நூற்று, தறியில் நெய்து சாயம் தோய்த்து என்றிப்படி எத்தனை செய்ய வேண்டியிருக்கிறது? அதைப்போல, அநேக காரியங்கள் பண்ணி ஒருவனை ஆத்ம வித்தாக்க வேண்டும். குணத்தினாலும், சரீரத்தினாலும் சேர்ந்து ஒன்றையொன்று பரிசுத்தி பண்ணிக் கொள்ளும் முறையில் கர்மா செய்ய வேண்டும். இப்படிப்பட்ட கர்மாவுக்கு ஸம்ஸ்காரம் என்று பெயர்.

ஒரு பதார்த்தத்துக்கு உள்ள தோஷத்தைப் போக்குவது எதுவோ, குணத்தைப் புகட்டுவது எதுவோ அதுதான் ஸம்ஸ்காரம். வயலில், உழுவது முதல் அறுவடை வரை பலப்பல ஸம்ஸ்காரங்கள் செய்யப்படுகின்றன. பஞ்சு நூலாகி வேஷ்டியாக வேண்டுமென்றால் பல காரியங்கள் செய்ய வேண்டியிருக்கின்றன. பஞ்சு யந்திர சாலையில் எவ்வளவு காரியங்கள் செய்யப்படுகின்றன. நூல் சிக்கலாகாமல் நெய்ய எத்தனை ஜாக்கிரதையுடன் எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறது? நம்முடைய ஆத்மாவானது இந்திரிய சலனங்களாய் சிக்கலாக இருக்கிறது. சிக்கலை எடுத்து எப்பொழுதும் ஆனந்தமாக இருக்கச் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்குப் பல தடைகள் இருக்கின்றன. ஏதோ சில சமயங்களில் மட்டும் இப்போது ஆனந்தம் உண்டாகிறது. வலி இருந்தும் இவ்வளவையும் மீறிக் கொண்டு கொஞ்சம் ஆனந்தம் உண்டாகிறதே. இந்த ஆனந்தம் எப்பொழுதும் இருக்குமாறு பண்ண வேண்டும். அதற்காக ஜீவனைப் பிரம்ம லோகத்தில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். ஈசுவர ஸந்நிதானத்தில் சேர்த்துவிட்டால் அப்புறம் துன்பமே இராது. பிரளயத்துக்கு அப்புறம் ஐக்கியம் உண்டாகும். ஆகையால் அங்கே சேர்க்கத் தயார் பண்ண வேண்டும்.

இதற்குத்தான் 40 ஸம்ஸ்காரங்களையும் 8 ஆத்ம குணங்களையும் ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



ராஜரிஷி

செந்தமிழ் வசனங்களை நறுக்கென்று சிவாஜி உதிர்க்கும் அழகைத் திரையில் பார்த்து ரொம்ப நாளாயிற்று. நாடாளும் கௌசிக மகாராஜாவாகவும் சரி, மனத்தை அடக்கியாளும் விஸ்வாமித்ரராகவும் சரி, சிவாஜி ஜொலித்திருக்கிறார். சில அநாவசியமான ஆ. ஊ இவற்றை மட்டும் தவிர்த்திருந்தால் இன்னும் அழகாய் இருந்திருக்கும்.

புராண ரிஷியின் கதையாயிற்றே, எவ்வளவு தூரம் சுவாரஸ்ய மிருக்க முடியும் என்று தயக்கத்தோடு போனால் ஆச்சரியம். இடைவேளை வரை நேரம் போனதே தெரியவில்லை. அத்தனை சுறுசுறுப்பான காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக. நந்தினிபசுவை வசிஷ்டரிடமிருந்து அபகரிக்க கௌசிகன் முயற்சி செய்யும் சண்டைக் காட்சிகளில் தந்திர ஷாட்கள் கொஞ்சம் விளையாட்டுத்தனமாய் இருக்கின்றன. கொஞ்ச நேரமே வந்தாலும் திரிசங்கு சொர்க்கம் ஆடம்பரமான செட்கள்!

கௌசிகனின் தபஸைக் கலைக்க இந்திரனால் அனுப்பப்படும் திலோத்தமையாக ராதிகா. மேனகையாக லட்சுமி. இந்திரனாக ஸ்ரீகாந்த். இந்திரன் சபையில் இன்னும் இளமையானவர்கள் கிடைக்காதது விஸ்வாமித்திரனின் துரதிர்ஷ்டம். இளையராஜாவின் இனிய இசையில் பாடல்கள் அத்தனையும் காதில் ரீங்காரம். அதுவும் ராதிகா பாடும் 'ஆடையில் ஆடும் பொன்மணிகள்' பாடலும், பிரபு நளினிக்கான 'மான் கண்டேன்' பாடலும் நிச்சய ஹிட்கள்.


விஸ்வாமித்திரரும்தான் எவ்வளவு கஷ்டப்படுகிறார், வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி பட்டம் வாங்க வேண்டுமென்று! சரித்திரத்தையும், புராணத்தையும், கொஞ்சம் மாற்றிக் கொண்டு க்ளைமாக்ஸ் காட்சியில் விஸ்வாமித்திரர் துஷ்யந்தனிடம் வந்து அவன் மறந்து போன தன் மகள் சகுந்தலையை ஏற்றுக் கொள்ளுமாறு தலை வணங்கி இறைஞ்சுகிறார். 'ஈரேழு உலகத்தையும் வணங்காத நீரா ஒருத்தனிடம் தலை பணிவது?' என்று வசிஷ்டர் கிண்டலாய்க் கேட்க, 'என்ன பண்ணுவேன், பெண்ணைப் பெற்றவனாயிற்றே ஐயா!' என்பது போன்ற இன்றைய சமுதாயத்தை நையாண்டி செய்யும் வசனங்களும் அங்கங்கே உண்டு. சுவாரஸ்யமான திரைக்கதை அமைப்பும், வசனமும் ஏ.எஸ். பிரகாசம்!

புராணக் கதைகளுக்கே பிரத்யேகமாய் இருக்கும் சாபக்கேடு இந்தப் படத்திற்கும் உண்டு. சிரிப்பே வராத நகைச்சுவைக் காட்சிகள்.

வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி வாங்கியாயிற்று. இனி ரசிகர்கள் வாயால் கிடைக்கிறதா, பார்ப்போம்.

—ஜெயமன்மதன்





மங்கம்மா சபதம்

ஒரு கோழிமுட்டை கண்ணாடியைப் போட்டுக் கொண்டு மாமா சத்யராஜிடம் பயந்து; இக்கித்திக்கி 'நான் பயித்தியம்', 'நான் பயித்தியம்' என்று இளிப்பிள்ளை கமல் அறிமுகம். மாமாவின் கொடூரம்.

கதை என்று பார்த்தால் சொத்தை அனுபவிக்க நினைக்கும் மாமா. அவனுடைய அப்பாவி அக்கா. அந்த அக்காவின் பையன். அந்தப் பையனை மாமாவே வதம் செய்துவிட அந்தப் பையனின் வாரிசு பிற்பாடு எப்படி இந்த அப்பாவின் மாமாவை வதம் செய்கிறது என்பதுதான்.

மாதவி — அடேயப்பா! முன்நெற்றி முடியும், அகலக் கண்களும், மாடர்ன் ட்ரெஸ்ஸுமாய் வந்து ஒரேயடியாய் பயமுறுத்துகிருர்.

இடைவேளை வரை நடிப்புச் சித்தர் கமலும் வில்லன் திலகம் சத்யராஜும் சேர்ந்து தூள் கிளப்புகிருர்கள். அப்புறம் தண்டவாளத்தில் ஓடும் ஜீப். கராத்தே. டிஷ்யூங். டிஷ்யூங். என்று தூசி கிளப்புகிருர்கள்.

பட்டுச் சேலை



மறுபடி ஒரு பதினறு வயதினிலேயின் உல்ட்டா. மறுபடி ஒரு புது டைரக்டர். பட்டணத்து ஜீவிதா கிராமத்திற்கு வந்து சப்பாணி ஸ்டைல் பாண்டியனை விரட்டுகிருர். பாண்டியன் ஓடுகிருர். கவுண்டமணி பரவாயில்லை. பெட்டிக் கடை யுடன் சிரிப்புக் கடையையும் கவனித்துக் கொள்கிருர். சத்யராஜ் கௌரவராஜ். கடைசியில் அந்த மைனர் பையன் வேல் செருகிச் சாவது. பாண்டியனும் ஜீவிதாவும் இணைவது என்று சுபமாக முடித்திருந்தாலுங்கூட சப்! குருவை மிஞ்சிய சிஷ்யர்கள் பட்டியலில் பாக்யராஜ் பெயர் மட்டுந்தான் இருக்கிறது. மற்ற யார் பெயரையும் காணும். இந்த அண்ணுத்துரை (பாக்கியராஜ் சீடர்) உட்பட!



உனக்காக ஒரு ரோஜா



பொருத்துக

மோகன்	:	அனுராதா
ராஜீவ்	:	அம்பிகா
சுரேஷ்	:	விஜி

யார் வேண்டுமானுலும் யாரை வேண்டுமானுலும் காதலித்து தோற்றுப் போகலாம்; இல்லை ஜெயிக்கலாம். அங்கங்கே அடுக்கு மொழி வசனம் பேச வேண்டியது அவசியம்.

என்னங்க இது? கதையா இது? ஒரு ரெண்டு மூணு பாட்டு மட்டும் நல்லா இருந்தாப் போதுமா என்ன?

டி. ராஜேந்தரும், வி. வி. ராஜேந்திரனும் சேர்ந்து அடித்திருக்கும் கேலிக்கூத்து.

ஜெயமன்மதன்

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran


உங்கள்
வாழ்வில்
மகிழ்ச்சி
அளிக்கும்
லக்ஷ்மி!
லக்ஷ்மி
சுப்ரபா, காலக்ஸி,
சுஹாசினி
100% பாலியெஸ்டர்,
ஷிஃபான்,
ஜார்ஜெட்
புடவைகள்
லக்ஷ்மி மில்ஸ்
கோயம்புத்தூர்

REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Srilanka

